# லக்ஷ்மி

தமிழர் முன்னேற்றம் கருதி வெளிவரும்

## ஓர் உயர்தர மாதப் பத்திரிகை.

ஸ்தாபகர்—ஸ்ரீ. கே. எஸ். முத்தையா.    ஆசிரியர்—கே. எஸ். சுந்தரம்.

| மலர் 6. | 1929ஆம் ஜனவரிமீ, விபவஆம் தைமீ | இதழ் 4. |
|---|---|---|


## இந்தியத் தாய்.

ஸ்ரீமாந் தோ. ரா. பத்மநாபன் எழுதியது.

(1) முல்லைகுறிஞ்சி மருதநெய்தலெனும் முன்னிய நானிலமே
எல்லையிலாவன மல்கியமா பெரும் இந்திய நாடிதென்பார்
சொல்லைப்பெரிதெனப் போற்றிய தூயவன் தோன்றிய நாடிதென்பார்
கல்லைப்பெண்ணாச் செய்த கார்மேக வண்ணனைக் கண்டதோர் நாடிதென்பார்.

(2) சங்கரன் ஏந்திய வில்லெனும் மேருவைத் தாங்கிடும் பூமியென்பார்
அங்கமுதலைம்பத் தாறு முகந்திகழ் அந்த மிகுந்த தென்பார்
மங்குல் குவிந்த மலைத்தொடர் விண்தொடு மாமதிலாயதென்பார்
எங்குமிலெண்ணி லியற்கை வனப்புகள் இங்கே யமைந்த தென்பார்.

(3) பல்வகை கல்வியிற் கேள்வி சிறந்தெழப் பார்த்ததோர் நாடிதென்பார்
நல்வழிமாந்தர் நடந்திடற் கௌவையார் நாடிய நாடிதென்பார்
செல்விருந்தோம்பிடும் இல்லறமேன்மையைச் செப்பிய நாடிதென்பார்
நல்வினை தீவினை நாடிப் பயனென நாட்டிய நாடிதென்பார்.

(4) கற்புக்கருந்ததி கண்ணகி யோர்தமைக் கண்டதோர் நாடிதென்பார்
பொற்பிற் புலோமசை ஜானகிபோல்வாரைப் போற்றிய நாடிதென்பார்
நற்புலமைக் காளி தாசனைக் கம்பனை நாடிய நாடிதென்பார்
அற்புத மிக்குற அண்டி னவர்குறை ஆற்றிடும் நாடிதென்பார்.

(5) கல்லிலும் செம்பிலும் கர்த்தனிருப்பது காட்டிய நாடிதென்பார்
புல்லிலும் புல்லிய பூண்டிலுமுளனெனப் போற்றியே எற்றுமென்பார்
சொல்லிலும் உட்புகுந் தாட்டு வன்றானவன் தோமறு தீபவனே
எல்லையிலாத பரம்பொருள் மேன்மையை இந்நிலம் காட்டிற்றென்பார்.

# சயாம் சுதந்தர எழுச்சி.

(வசுமதி.)

[illegible]ண்டு காலமாக சயாம் தேசம் யதேச்சாதிகாரமுடைய முடிமன்னர் ஆட்சியில் இருந்து வந்தது. அம்முடி மன்னர்கள் யதேச்சாதிகாரம் உடையவர்கள் எனினும் குடிகளிடத்து அன்புடையவர்களாய் அரசு செலுத்தி வந்தனர். எனவே அத்தேசமும் ஏனைய தேசங்களுக்கு ஒப்ப வளர்ச்சி யடைந்து வந்தது. சயாமின் நிலைமை இங்ஙனமாக சுற்றுப்புற தேசங்களை வெளி நாட்டார் அடக்கிக் கொண்டனர்.

சயாமியர் (சயாம் தேசத்தார்) வர்த்தகமும் கப்பலோட்டலும் அறியார். ஆகவே தூர தேச நிலைமைகளை அவர்கள் உணரவில்லை. அவர்களது அயல் நாட்டா ரெல்லாம் அவர்களுக்குச் சத்துருக்களா யிருந்தனர். சீனர்கள் 4000 வருஷங்களுக்கு முன்னமேயே சயாமில் புகுந்து வாணிகம் நடத்தி வந்தனர்.

## சீனர் செல்வாக்கு.

வாணிகஞ் செய்யப் புகுந்த சீனர் சயாமியப் பெண்களை மணந்து வாழத் தொடங்கினர். பிரபலம் பெற்ற சயாமியக் குடும்பங்களின் மூதாதைய ரெல்லாம் சீனர்களே. சீனர்கள் வர்த்தகத் தொழிலில் தேர்ச்சி பெற்றவர்கள். ஆயினும் அரசியல் துறையில் திறமையற்றவர்கள். எனினும் வர்த்தகத்தினால் பெற்ற செல்வாக்கினால், அவர்கள் அரசாங்கத்தையும் தம் வசப்படுத்திக் கொண்டனர். அதனால் நாட்டுக்குப் பெரிய தீமை யுண்டாகத் தொடங்கியது. பிற்காலத்தில் ஐரோப்பிய வல்லரசுகளும் அங்கே செல்வாக்குப் பெற்றதனால் சீனர்கள் தொல்லை சிறிது குறை வடைந்தது.

கைப்பாடு படுவதில் சயாமியர்களுக்கு மிக வெறுப்பு. எனவே தையல் வேலை, தச்சு வேலை, செருப்புத் தைத்தல் முதலிய தொழில்களெல்லாம் சீனர்களே நடத்தி வந்தனர். சயாமியர் விவசாயத் தொழில் மட்டும் செய்தனர். சீனர்கள் தேடும் பணமெல்லாம் சீனத்துக்குச் சென்றதினால் சயாமில் வறுமை யேற்பட்டது. இரகசியச் சங்கங்களும், பொதுவுடமைச் சங்கங்களும் சீனர்கள் நடத்த சயாம் சர்க்கார் சம்மதிக்கவில்லை.

## ஐரோப்பியர் வருகை.

முதலில் 1511-ல் போர்த்து கேசியர் வந்தனர். அவர்கள் மலாக்காவைக் கைப் பற்றி, அதன் அரசுரிமையை ஒப்புக்கொள்ளும்படி சயாம் அரசருக்கு ஒரு தூதனுப்பினர். வர்த்தகமும் நடத்தத் தலைப்பட்டனர். அப்பால் 1604-ல் டச்சு காரரும் ஆங்கல கிழக்கிந்திய கம்பெனியாரும் வந்தனர். எனவே அம் மூவருக்கும் பரஸ்பர போட்டி யுண்டாயிற்று. அவர்களெல்லாம் அக்காலத்திய ராஜதானியான அயூத்தியாவில் இருந்து கொண்டு அரசரின் நட்பைப் பெறவும் மந்திரிகளுக்குள் பிளவை யுண்டு பண்ணவும் முயற்சி செய்து வந்தனர். ஆனால் 1688-ல் திடீரென்று உண்டான ஒரு புரட்சியால் வெளி நாட்டார் தொல்லை யெல்லாம் ஒழிந்தது. சிறிது காலம் வெளி நாட்டார் வர்த்தகமும் நின்றிருந்தது.

அப்பால் மிஷனரி மார் வந்தனர். அவர்கள் பின்னால் மண்ணாசை பொன்னாசை கொண்ட ஏனையோரும் வந்தனர். வரவே அவர்கள் இருவருக்குள்ளும் போராட்ட முண்டாயிற்று. மீண்டும் ஜனங்கள் புரட்சி செய்து அரசரையும் வெளி நாட்டு கலகக் காரர்களையும் ஓட்டிவிட்டு, ஒரு புது அரசரை சிம்மாசன மேற்றினர். இந்தப் புது அரசர் வெளி நாட்டுப் பாதிரிகளையும், வர்த்தகர்களையும், மற்றும் ஐரோப்பியர்களையும் நாட்டை விட்டுத் துரத்தி விட்டார்.

## புதுத் தொல்லைகள்.

இத்தருணத்தில் ஐரோப்பிய வல்லரசுகள் படைகளுடன் கீழைத் தேசங்களில் வந்திறங்கின. கேதா சுல்த்தான் தனக்கு மேலரசரான சயாம் மன்னரின் சம்மதம் பெறாமல் பினாங்கை பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாருக்கு விட்டுக் கொடுத்ததினால் சயாம் மன்னருக்குக் கோப முண்டாயிற்று. ஆகவே ஐரோப்பியர் அனுப்பிய தூதுவர்களை அவர் வர வேற்க வில்லை. இத்தருணத்தில, கம்பெனியாரும் அமெரிக்க சர்க்காரும் வர்த்தக உடன்படிக்கை செய்து கொண்டனர். சீனர்களும் தம் செல்வாக்கைப் பிரயோகித்ததினால், சயாம் அரசர் வெளி நாட்டார் செய்து

JL
2442



கொண்ட உடன்படிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்து விட்டார். பல அரசாங்கங்கள் அனுப்பிய தூதுவர்களையும் அவர் லட்சியம் செய்ய வில்லை.

### ஒரு சமர்த்தரான அரசர்.

இத்தருணத்தில், தற்கால அரசரின் பாட்டனரான மாஸ் குட் ராஜ குமாரர் அரசராக வந்தார். அவர் வெகு காலமாக கொலைக்குப் பயந்து, ஒரு சந்நியாசி மடத்தில் துறவியாக வாழ்ந்து வந்தவர். சயாம் அரசியல் நிலையை உற்று நோக்கிக் கொண்டிருந்த மதி யூகியான அவர், பல ஐரோப்பிய பாஷைகளையும் விஞ்ஞான சாஸ்திரங்களையும் கற்றுக் கொண்டார். அதுவரை சயாமியர் ஒருவராவது ஐரோப்பிய பாஷைகள் கற்றதில்லை. அவர் ஆங்கிலத்தில் பிரத்தியேக பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவர் அந்நிய நாட்டாரோடு நட்புப் பூண்டு, பிரிட்டிஷாரோடு நேச உடன்படிக்கை செய்து கொள்ளவும் ஆயத்தமானார். சயாமிய அரசியல் வாதிகளும் சீனர்கள் தொல்லையால் அலுப்புற்றிருந்தனர். ஆகவே மிகுந்த எதிர்ப்புக்கிடையில் ஆங்கிலேயர்களோடு ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டது. அதனால் பிரிட்டிஷாருக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன.

மற்ற வல்லரசுகளும் அது போன்ற உடன்படிக்கைகள் செய்து கொண்டன. வெளி நாட்டார் குடியேற்ற உரிமையைப் பற்றிய நிபந்தனைகள் மீறப் பட்டன. மலேயர், ஜாவாக்காரர், கம்போடியர், அனமியர், பர்மியர், பிரிட்டிஷ் இந்தியர் ஆகிய வெளி நாட்டாரெல்லாம் வரையறை யின்றிக் கூட்டம் கூட்டமாக சயாமில் குடி புகுந்தனர். சில வெளி நாட்டுத் தூதுவர்கள் தமது உரிமைகளையும் மீறி நடக்கத் தொடங்கினர். பல திறப்பட்ட உடன்படிக்கைகளின் நுட்பங்கள் சயாம் உத்தியோகஸ்தர்களுக்கு விளங்காதிருந்ததினால், தமது அந்தஸ்துக்குப் பாதக மேற்படாமல் மட்டும் பார்த்துக் கொண்டு வாளா விருந்தனர். வெளி நாட்டு விவகாரங்களில் தலையிட அவர்கள் விரும்பவில்லை. எனினும் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் நிதானம் இழந்ததினால் வெளி நாட்டுத் தூதுவர்களுக்கும் அவர்களுக்கும் சச்சரவுகள் உண்டாயின. வீணர்களான சில தூதுவர்கள் ஒப்புக்கொள்ளத் தகாத பல உரிமைகளையும் பலவந்தமாகப் பெற்றுக் கொண்டனர். கடைசியில், அளவிட முடியாத உரிமைகள் வெளிநாட்டார் பெற்றுக் கொண்டதை சயாமியர் உணரலாயினர்.

தேச வருமானம் மிகுந்திருந்தாலும் துரைத்தனப் பொக்கிஷம் காலியாகவே இருந்தது. வருமான வரிகள் வெளிநாட்டு ஒப்பந்தப்படி விதிக்கப் பட்டதே அதற்குக் காரணம். துரைத்தனம் முட்டுப் பட்டது. சயாமியர் ஒப்பந்த நிபந்தனைகளை மீறத் தொடங்கினர். எனவே குழப்ப முண்டாயிற்று. வல்லரசுகளெல்லாம் சதா பரஸ்பரம் வழக்காடிக் கொண்டிருந்ததினால், நாட்டில் கலவரங்கள் உண்டாயின.

### ஐரோப்பியர் உதவி.

அப்பால் பட்டத்துக்கு வந்த சுலாலங்கம் அரசர் சுமார் 20 வருஷம் அரசாட்சி நடத்தினார். அவர் நன்கு கல்வி கற்பிக்கப் பட்டிருந்தனர். ஆகவே வெளிநாட்டார் உடன்படிக்கைகளால் உண்டாயிருக்கும் தீமைகளை அவர் விரைவில் உணர்ந்து கொண்டார். உணரவே வெளிநாட்டாருக்கு உரிமைகள் அளிக்கவே கூடாதென்று உறுதி செய்தார். தம் சொந்த உத்தியோகஸ்தர்கள் அவருக்கு எதிரிடையாக விருந்தும் அவர் தம் கொள்கையை மாற்றிக் கொள்ள வில்லை. இருப்புப் பாதையில் அவருக்கு மிகுந்த பிரியம். ஆகவே 1892-ல் இருப்புப் பாதை வேலை ஆரம்ப மாயிற்று.

### பிரஞ்சுகாரர் தொல்லை.

இது பிரஞ்சுகாரருக்கும் பிடிக்க வில்லை. சயாமை யடுத்த வெளிநாடுகளை யெல்லாம் அவர்கள் கைப்பற்ற எண்ணினர். பர்மாவிலும் சயாமிலும் கலகங்கள் மூட்டுவதும், எல்லை மீறித் தமது உரிமைகளை நடத்துவதும் அவர்கள் வழக்கமாக இருந்தது. பர்மாவில் அவர்களது சூழ்ச்சிகள் பலிக்காமல் ஆங்கிலேயர்கள் தடுத்து வந்தனர். சயாமில் இருப்புப்பாதை போடப்படுவது தமக்கு இடைஞ்சல் விளைக்குமென்றும் பிரஞ்சுகாரர் உணர்ந்தனர். ஆகவே அவர்கள் சயாமியரை வலியச் சண்டைக்கு இழுத்தனர். சயாமியரோடு எப்படியாவது ஒரு போர் தொடுக்க வேண்டு மென்றும் அவர்கள் உறுதி செய்தனர்.

பெரிய அரசரின் சகோதரரான டாம்ராஸ் ராஜ குமாரர், ஐரோப்பிய வல்லரசுகளின் உதவி பெறும் பொருட்டு ஐரோப்பாவுக்குச்

சென்றார். சயாம் அரசருக்கு வெளிநாட்டு மந்திரியாயிருக்க, ஒரு பெயர் பெற்ற பெல்ஜிய ராஜ தந்திரியை அவர் சயாமுக்கு அனுப்பினர். அவர் சயாமுக்கு வந்ததும் தேச நிலைமை மிகவும் சிக்கலாயிற்று. பல அக்கிரமமான உரிமைகளைப் பிரஞ்சுகாரர் வற்புறுத்தினர். பஞ்சாயத்து மூலம் தம் உரிமைகளை முடிவு செய்யவும் அவர்கள் ஒப்பவில்லை. எனவே சயாமியர் ஒரு புது நாடு ஸ்தாபித்தனர். அதன் எல்லையோ வரை யறுக்கப் படாமலிருந்தது. இதனால் நிலைமை கொஞ்சம் கூட சிக்கலாயிற்று. அங்கங்கே குட்டிச் சண்டைகளும் நடந்தன. ஒரு பிரஞ்சுகாரன் கொல்லப்பட்டான். அவனை சயாமிய சர்க்காரே கொன்றனர் என்று பிரஞ்சுகாரர் புகார் செய்தனர். தாம் அவனைக் கொல்லவில்லை யென்றும் அவனே சயாமியப் போலிசார் மீது சுட்டா ரென்றும் சயாமிய சர்க்கார் கூறினர். பிரஞ்சுகாரர் மூன்று பீரங்கிக் கப்பல்களை சயாமுக்கு அனுப்பினர். அந்த கப்பல்கள் பலவந்தமாக நதி வழியாக பாங்கசகு நகரத்துள் புகுந்து யுத்தத்துக்கு வருப்படி அரசருக்குச் செய்தி யனுப்பின.

## தோல்வி.

உடனே சயாமியர் ஆங்கிலேயரை உதவிக் கழைத்தனர். "உங்கள் சண்டையில் தலையிட முடியாது. நீங்களே உங்கள் இஷ்டப்படி முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று லார்டு ரோஸ் பேரி விடை யிறுத்து விட்டார். "ஆங்கிலேயரின் அந்த விடையை ஒப்புக்கொள்ள வேண்டாம். சயாமைப் பிரஞ்சுகாரர் பிடித்துக் கொள்ள பிரிட்டிஷார் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்" என்று பெல்ஜிய மந்திரி சொன்னர். எனினும் ஆங்கிலேயர் உதவிக்கு வரவில்லை. சயாமியர் பிரஞ்சுகாரருக்குக் கீழடங்க வேண்டியதாயிற்று. அவர்கள் விதித்த தண்டனைகளையும் ஒப்புக் கொள்ள வேண்டிய தாயிற்று. அதனால் நாட்டுக்கே ஒரு பெரிய அவமானம் ஏற்பட்டது. எனினும் அரசாங்கத்துக்குப் பழுது ஏற்படவில்லை. எனவே அரசாங்கத்தைச் சீர் குலைக்க பிரஞ்சுகாரர் பல சூழ்ச்சிகள் செய்தனர். சயாம் மீண்டும் குழப்பத்துக் குள்ளாயிற்று.

## ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் ஆதிக்கம்.

சயாமிய அரசாங்கத்தில் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் தொகை அதிகமாகப் பெருகிப் போயிற்று. பிரிட்டிஷாரும், டச்சுகாரரும், ஜெர்மானியரும் இத்தாலியரும், அங்கே பல பெரிய உத்தியோகங்கள் வகித்திருந்தனர். பிரஞ்சுகாரர் உத்தியோகத்தில் இல்லாததினால் அவர்களுக்கு மிக மனப் புழுக்க முண்டாயிற்று. சயாமியருக்கும் பிரஞ்சுகாரருக்கும் இருந்து வந்த தகராறுகள் ஒருவாறு ஒழிந்தவுடன், சயாமிய நீதி மண்டபத்தில பிரஞ்சு உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டுமென்று பிரஞ்சுகாரர் வற்புறுத்தினர். அவர்கள் விருப்பப்படியே ஒரு பிரஞ்சு உத்தியோகஸ்தர் நியமிக்கப் பட்டார். சட்டங்களைத் தொகுக்க நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனில் அந்தப் பிரஞ்சு உத்தியோகஸ்தர் தலைவரானர். நீதி ஸ்தலங்களுக்கும் சட்ட சம்பந்த சீர்திருத்தங்களுக்கும் ஒரு ஆங்கிலேயர் மேலதிகாரியானர். பிரஞ்சுகாரரும் ஒருவாறு திருப்தியடைந்தனர்.

## மீண்டும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள்.

மலாய் நாட்டில் பிரிட்டிஷாருக்கும் சயாம் சர்க்காருக்கும் தகராறு ஏற்பட்டது. சயாம் மன்னரின் கீழ் இருந்து வந்த ஒரு சிற்றரசர் சயாம் மன்னர் ஆணைக்கு அடங்கி நடக்க முடியா தென்று புரட்சி செய்யத் தொடங்கினர். சயாம் அரசர் தொந்தரவு செய்யாமல் தம்மைக் காப்பாற்ற வேண்டு மென்று அவர் சிங்கப்பூர் ஐரோப்பியர்களுடன் விண்ணப்பம் செய்தார். சிங்கப்பூரார் அவருக்கு நல்ல உபதேசம் அளிக்க வில்லை. எனவே அவர் சயாம் அரசரை, எதிர்த்தார். சயாம் சர்க்கார் அந்தச் சிற்றரசரைக் கைது செய்து உள் நாட்டுக்குக் கொண்டுபோய் விட்டார்கள். அதனால் நாட்டில் பெரும் புரளியுண்டாயிற்று. எனினும் பின்னர் சிற்றரசருக்கும் சயாம் சர்க்காருக்கும் சமாதானம் எற்பட்டு சிற்றரசர் சயாம் சர்க்காரின் மேலதிகாரத்தை ஒப்புக் கொண்டார். அந்தச் சிற்றரசர் அரசு புரியும் பிரதேசங்களை, மேல்பார்க்க ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப் பட்டார்கள்.

## விடுதலை ஆரம்பம்.

ஐரோப்பாவுக்குக் கல்விகற்கச் சென்றிருந்த சயாம் அரசர் புத்திரர்கள் 1897-க்கும் 1904-க்கும் இடையில் சயாமுக்குத் திரும்பி வந்தார்கள். அவர்களெல்லாம் ஜெர்மனியிலும், இங்கிலாந்திலும், டென்மார்க்கிலும் இராணுவப் பயிற்சி பெற்றிருந்தார்கள். எனவே சீர் குலைந்திருந்த சயாம் படையை அவர்கள்

திருத்தியமைக்கத் தொடங்கினர்கள். அதைப் பார்த்து அரசரும் மிக மகிழ்ந்து சீர் திருத்தச் செலவுக்காக கஜானவிலிருந்து ஏராளமாகப் பணமும் உதவினர். இராணுவம் ஒழுங்காக அமைக்கப்பட்டது. இப்பொழுது அந்தப் படை மிக உன்னத ஸ்திதியில் இருக்கிறது. அந்தப் படையின் மொத்தத் தொகை 30,000. சயாம் சர்க்காருக்குச் சொந்தமாக ஒரு விமானப் படையு மிருக்கிறது. ஐரோப்பிய உதவி எதுவுமின்றி அந்தப்படை அமைக்கப் பட்டிருப்பது மிகவும் மெச்சத்தக்கதா யிருக்கிறது.

கடைசியாக 1907-ல் பிரஞ்சுகாரர் சயாம் சர்க்காரோடு ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அதன்படி பிரஞ்சுகாரர் அநேகம் உரிமைகளைச் சர்க்காருக்கு விட்டுக் கொடுத்தனர். சயாம் விடுதலைக்கு இது முதற்படி யாயினும் அதற்காக சயாம் சர்க்கார் சில பிரதேசங்களைப் பிரஞ்சுகாரருக்கு விட்டுக் கொடுக்க வேண்டியதாக வந்தது பின்னும் சயாம் சக்தியற்ற நிலைமையி லிருந்தமையால் சுதந்தரத்தை விலை கொடுத்து வாங்க வேண்டியதாக ஏற்பட்டது. 1908-ல் பீனல்கோர்டு நிறைவேறியது. இது விடுதலைக்கு இரண்டாம் படி.

## கல்விப் பயன்.

ஏற்கனவே செய்யப்பட்டிருந்த சமூக அரசியல் சீர்திருத்த வேலைகளின் பலன் பிரத்தியட்சமாகத் தொடங்கிற்று. ஐரோப்பியர் மேற் பார்வையில் அமைக்கப்பட்ட கல்விச்சாலைகள் நற் பலனளித்து வந்தன. காலத்துக் கேற்றபடி நடந்து கொள்ளும் நற்குணம் சயாம் இளைஞர்களிடம் இருந்தது. இதுவரையிலும் நாட்டையாண்டவர்கள் ஐரோப்பியர்கள். சயாமியர் அதன் பலனையே அநுபவித்து வந்தனர். இப்பொழுது நாட்டாண்மைத் தொழிலைச் சயாமியரே ஒப்புகொள்ளத் தொடங்கினர்.

இந்த சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷாரும் சயாம் சர்க்காரோடு ஒரு புது ஒப்பந்தம்செய்து தமக்கிருந்த அநேக உரிமைகளை விட்டுக் கொடுத்தார்கள். விட்டுக்கொடுத்த உரிமைகளுக்குப் பதிலாக பிரிட்டிஷார் சில பிரதேசங்களைப் பெற்றுக்கொண்டனர். இது விடுதலையின் மூன்றும்படி. 1910-ல் அரசர் இறந்தார். அதனல் ஜனங்கள் மிக்க துக்கங் கொண்டனர். அவர் 40 வருஷம் அரசாட்சி செய்தார். அவருடைய முயற்சியினலேயே சயாம் சுதந்தரம் பெற்றது.

## புது அரசர்.

அப்பால் பட்டத்துக்கு வந்த வச்சிரவதர் இங்கிலாந்தில் கல்வி கற்றவர். அவர் பல சீர் திருத்தங்கள் செய்ய முயன்றார். சயாமியரின் உடல் வளர்ச்சிக்குரிய பல விளையாட்டுகளும் ஏற்படுத்தினர். ஜனங்களும் சீர் திருத்தங்களை மிக உற்சாகத்தோடு ஏற்றுக் கொண்டனர். அரசர் ஒவ்வொரு குடும்பத்துக்கும் குடும்பப் பெயரும் சூட்டினர். பெண்கள் முன்னேற்றத்துக்காக அவர் செய்த முயற்சிகளும் பலப்பல. பெண்கள் தாராளமாக சமூக வாழ்வில் ஈடுபடத் தொடங்கினர்.

விவசாயமே சயாமியரின் முக்கிய தொழில். எனவே சாஸ்திரீக முறைப்படி கிருஷி செய்ய அரசர் பல ஏற்பாடுகள் செய்தார். லக்ஷக் கணக்கான பணம் செலவு செய்து நீர்ப்பாசன வசதிகளும் அவர் உண்டு பண்ணினர்.

## நவ யுக ஆரம்பம்.

சென்ற மகா யுத்தத்தில் சயாம் கடைசியில் ஐக்கிய கட்சியாரோடு சேர்ந்து கொண்டது. ஆரம்பத்தில் சயாம் ஜெர்மானியாரிடம் அநுதாபங் காட்டியதாயினும் கடைசியில் ஐக்கிய கட்சியாருக்கு உதவி புரிந்தது. சயாம் சர்க்கார் 1500 துருப்புகளை ஐரோப்பாவுக்கு அனுப்பினர். அத்துருப்புகள் வீரத்துடன் போர் புரிந்து நற் பெயரும் பெற்றன. யுத்தம் முடிந்து துருப்புகள் சயாமுக்குத் திரும்பி வந்தபோது ஜனங்கள் மிகுந்த உற்சாகத்தோடு அவர்களை வரவேற்றார்கள். அது முதல் சயாமின் நவ யுகம் ஆரம்பமாயிற்று என்னலாம்.

ஜனங்களெல்லாம் புத்துயிர் பெற்றனர். எத்தகை பொறுப்பு வாய்ந்த வேலையை மேற் போட்டுக் கொள்ளவும் அவர்கள் பின் வாங்க வில்லை. ஐரோப்பியர்களை யெல்லாம் வெளியே துரத்தி விட்டு அவர்கள் வகித்துவந்த பொறுப்புள்ள உத்தியோகங்களை யெல்லாம் தாமே வகிக்கத் தொடங்கினர். முதன் முதல் ரயில்வேயைக் கைப்பற்றி சயாமிய மயமாக்கினர். இப்பொழுது ரெயில்வே பரணம் முழுதும் சயாமியர் வசமே இருக்கிறது. அவர்கள் வெகு திறமையாக நிருவாகம் நடத்தி வருகிறார்கள்.

## பூரண விடுதலை.

1920-ல் அமெரிக்கர் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு தமது உரிமைகளை யெல்லாம் சயாம் சர்க்காருக்கு விட்டுக் கொடுத்தனர். அதற்குப்

பிரதி பலனாக அவர்கள் ஒன்றும் பெறவில்லை. இதர வல்லரசுகளுக்கு இருந்து வந்த உரிமைகளையும் அரசர் வெகு சாமார்த்தியமாக ஒழித்து விட்டதனால் 1926-ல் சயாம் பூரண விடுதலை பெற்றது.

தற்கால நிலை.

இப்பொழுது அரசராயிருக்கும் பிரஜாதிபோகி பட்டத்துக்கு வந்தவுடன் தன் மாமன்மார் மூவரும் தந்தை வழி சகோதரர்கள் இருவரும் அடங்கிய ஒரு "சுப்ரீம் கௌன்சிலை" ஏற்படுத்தினர். அவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். அவர்களே இப்பொழுது அரசாட்சி நடத்தி வருகிறார்கள்.

சயாமிய ஜனங்களும் பலவழிகளிலும் இப்பொழுது முன்னேறி வருகிறார்கள். சுய ஆட்சிக்குரிய தன்மைகளெல்லாம் அவர்கள் வெகு விரைவாகப் பெற்று வருகிறார்கள்.

பெண்களும் பூரண சுயேச்சை பெற்று விட்டனர். புருஷர்களுக்குள்ள உரிமைகளெல்லாம் தட்டுத்தடையின்றி யனுபவித்து வருகிறார்கள். பலதார மணம் ஒழிக்கப்பட்டு விட்டது. செல்வாக்குடைய ஐரோப்பிய நாடுகளுக்குச் சமானநிலையை சயாம் வெகு சீக்கிரத்தில் அடைந்து விடுமென்பது உறுதி.

---

## தீண்டாமை வேண்டாமையே.*

ஸ்ரீமாந் வி. பசுபதி எழுதியது.

நீங்கள் செல்வத்தில் ஸ்ரீமான்களல்ல. சமூகத்தில் சம உரிமை யடைந்தவர்களல்ல. கல்வியிலும் தேர்ந்தவர்களல்ல. சுருங்கக் கூறின் இந்நிலவுலகில் ஒருவன் பெருமைக்கு அறிகுறியாய் விளங்கும் எந்தப் பொருளும் உங்களிடத்தில் இல்லை யென்றே கூறலாம். எனவே, "உயரிய, உத்தம" என்ற அடை மொழிகள் உபயோகிப்பது தவறு என்று குற்றங் கண்டு, என் கட்டுரையை இழித்துரைத்து ஏளனம் செய்யப் பலரிருப்பர் என்பதை அடியேன் அறியாமலில்லை. ஆனால், அவர்கள் அபிப்பிராயத்தினின்றும், என் எண்ணம் மாறுபட்டது. ஒருவன் பெருமையைக் குறிப்பது அவன் கல்வி யென்று கழறேன்; அவன் "செல்வ" மென்று செப்பேன்; அவன் "நூலறிவு" என்று நுவலேன். அவன் "நாவன்மை" என்று நவிலேன். அவனது "சுத்த" மென்றும் சொல்லேன்; பின்னை என்னை? அவன் "ஒழுக்கம்" "ஒழுக்கம்" என்று உரைப்பேன். ஒழுக்கம் என்ற தலைப்பின் கீழ் பலதிறப்பட்ட பிரிவுகளைப் பிரிக்க இடமிருப்பினும் ஒரு பிரிவின் கீழேயே நீங்கள் உயர்ந்தவர்கள் என்று சொன்ன என் கூற்றுக்கு ஆதாரமிருக்கின்றது.

அது என்னையோ வெனின் நீங்கள் ஈட்டும் பொருள் ஒன்றே. உங்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து நீங்கள் ஊதியம் சம்பாதிக்கிறீர்கள். நீங்களீட்டும் பொருள் அற நெறியிலே யன்றி மற நெறியிலே வருவதல்ல. இக்காரணங் கொண்டுதான் நீங்கள் உயர்ந்தவர்கள் என்று கூறலானேன்.

எனது கூற்றை வலியுறுத்த எனக்கு ஆதாரங்கள் பல உள. உலகம் போற்றும் உத்தமர்--பார் புகழும் பாவலர்,—ஞாலம் நாடும் நாவலர்-வங்காளத்தின் வள்ளல், கற்பனைக் கடல், பாரத தேவியின் பசும் பொன் என் மனதுக்குகந்த மன்னர்,—"ரவீந்தர நாதர்" "Leave this chanting and singing and telling of beads! Whom dost thou worship in this lonely dark corner of a temple with doors all shut? Open thine eyes and see thy God is not before thee!"

"He is there where the tiller is tilling the hard ground and where the path-maker is breaking stones. He is with them in sun and in shower, and his garment is covered with dust. Put off thy holy mantle and even like him come down on the dusty soil" என "கீதாஞ்சலி" என்னும் நூலில் பாக்களாகப் பாடியிருக்கிறார். கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்களுக்குத் தூது சென்ற காலத்தில், மனச்சுத்தி யில்லா—ஒழுக்க மில்லா—துர்யோதனன் அரண்மனையில் அரச விருந்து உண்பதைக் காட்டிலும்

---

* இது. பம்பாய் செல்வ விநாயகர் செந்தமிழ் வாசகசாலையின் 2-வது வருடப் பூர்த்திவிழா வன்று வாசிக்கப்பெற்ற ஒரு கட்டுரை.

விதுரர் குடிசைக்குச் சென்று "கூழ்" உண்பதையே உயர்வாகக் கருதினர். எம்பெருமான் இயேசுநாதர் கூட "It is easier for a camel to pass through the eye of a needle, than for a rich man to enter the "Kingdom of Heaven" எனச் சொல்லுகிறார். ஏழைகளுக்கு வறுமையால் அடக்கம், பொறுமை ஏற்பட்டு அமரருலகு அடைகிறார்கள். ஆனால் செல்வந்தனோ உடலையே உயர்வாக மதித்துச் செருக்குற்று உண்மை உணராமல், உயிரை யறியாமல், மறவாழ்வு வாழ்ந்து மரிக்கிறான். ஆங்கிலக் காளிதாசர் ஷேக்ஸ்பியர் "Sweet are the uses of adversity" என அறைகிறார். எனவே, சற்று ஊன்றி ஆராயுங்கால் வறுமையே பெருமையைக் கொடுப்பதா யிருக்கிறது. அப்படிப்பட்ட வறுமையை ஆபரணமாகக் கொண்ட உங்களை யான் உயர்ந்தவர்கள் என்று கூறுவதில் குறைதான் ஏது? அன்றிக் குற்றந்தான் யாதுளது?

நான் தற்போது ஒரு சட்டத்தின் கீழ்த்தான் பேசப் போகிறேன். அது என்னை யெனின், "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவிலகால வகையினனே." "தீண்டாமை" "நெருங்காமை" என்னும் விஷயங்களின் சரித்திரங்களை யான் விவகரிக்கப் போவதில்லை. சரித்திர ஆராய்ச்சி செய்ய இது காலமல்ல. அதை ஆராய்ச்சிக்காரர் செய்வாராக! பாம்புகடித்த ஒருவனுக்குத் தக்ஷணமே "சிகிச்சை" செய்வதை விடுத்து, கிழக்கு நோக்கிக் கடித்ததா? அன்றி மேற்கு நோக்கிப் பிடுங்கியதா? என்ற கேள்விகளைக் கேட்பது அறிவாளிகளுக் கழகாகுமா? எந்த விதத்தாலோ இக் கொடுமை ஹிந்து மதத்தில் தோன்றிவிட்டது. அதை யொழித்து முழுகி விடுவதே அறிவாளிகளுக் கழகு. தீண்டாமையைப் பற்றி, ஞாலம் புகழும் மன்னர், முற்றத் துறந்த முனிவர்,—ஸ்வாமி விவேகாநந்தர் விளம்புவதைக் கேண்மின். 'ஹிந்து சமயத்திற்கும், சாதிப் பிரிவினைக்கும் எந்த வித சம்பந்தமுங் கிடையாது. தீண்டாமை யென்பது ஹிந்துக்களிடையே ஏற்பட்ட ஒரு வியாதி. அது புரையோடும் தன்மை யுடைத்து. ஆகையினால் அதை ஒழித்து விடுவது ஹிந்துவாகிய ஒவ்வொருவனின் கடமையாகும்.'

சகல சாஸ்திர பண்டிதர்களும், கசடறக் கற்ற கல்வியாளர்களும், வேதம் ஓதிய வேதியர்களும், உண்மை யுணர்ந்த உயர்ந்தோரும், "தீண்டாமை" தீது தீது எனத் தீர்க்க தரிசனம் கூறினார்கள்; கூறுகிறார்கள். முற்றத் துறந்த முனிவரும், மற்றவர்க் குழைக்கும் மன்னருமான "காந்தியடிகள்" தீண்டாமையை யொழிக்கப் படும்பாட்டை அறியாதார் எவரே யுளார்? அது மாத்திர மல்ல. பல வருடங்கள் முன்னரே ஒரு புத்தர் தோன்றினர்; ஒரு ராமாநுஜர் அவதரித்தார். அவர்கள் தீண்டாமையை யொழிக்கப் பாடு பட்டார்கள். அவர்கள் தெய்வீகத் தன்மை யுள்ளவர்கள். அப்படி யிருந்தும் இப்படி யிருப்பானேன்?

என் அன்பர்களே! நீங்கள் "வழக்கம்" என்னும் அரக்கனை மறந்து விடக் கூடாது. கேசவ சந்திர சேனர் "The impregnable strongholds of ancient error and superstition" என அழகிய அடை மொழிகள் அளித்து அவ்வரக்கனை அழைக்கிறார்.

தீண்டாமைக்கு ஆதாரம் சாத்திரத்தி லில்லாவிட்டாலும், சமயத்திலில்லா விட்டாலும், வேதத்திலில்லா விட்டாலும் "வழக்கத்திலி"ருப்பதால், அவ்வழக்கம் என்னும் அரக்கனே தீண்டாமைக்கு அதி தேவதையாய்த் திகழ்கிறான். வழக்கம் என்பது என்னை? நாம் செய்து கொண்ட பழக்கமன்றோ! அப் பழக்கத்தை,—நமது சமூகத்தை அழித்து வரும் அவ்வழக்கத்தை, கற்றறிந்த பெரியோர்கள், ஒழிக்கக் கங்கணங் கட்டி நிற்றல் அவர்தம் கடமை யன்றோ!

இப்படிப் பட்ட கெட்ட பழக்கங்களே ஒவ்வொரு மதத்திலும் புகுந்து வழக்கங்களாக மாறி இவ்வுலகிற்கு இன்னல் பல இழைத்து வருகின்றன. ஆகையினாலேயே சிற்சில சமயங்களில் மதத்தைச் சீர் திருத்த வேண்டியது அவசியமாகிறது. அக்காலங்களிலே "கடவுள்" தன் பிரதிநிதிகளை உலகிற்கு அனுப்புகிறார். உதாரணமாக பிராம்மணர்கள் செய்த கொடுமை தாங்கமாட்டாது ஹிந்து மதம் இருந்த ஒரு சமயத்தில், ஒரு "புத்தர்" அவதரித்து, மதத்தைச் சீர் திருத்தும் முகத்தான் "பௌத்தமதம்" வகுத்தார். கிறிஸ்துவ சமயத்தில் போப்பும் அவரது அடியார்களும் செய்த அநியாயத்தைத் தாங்க முடியாது, கடவுள், ஒரு லூதரை" (Luther) யனுப்பி அம் மதத்தைச் சீர் செய்தார். நெருப்புத் தணலில் சாம்பர் பூத்து நிற்குங்கால் ஊதுவது எவ்

வளவு அவசியமோ அதைப் போலவே மத வளங்குன்றுங்கால், ஊதும் உத்தமர்கள் அவசியமாகிறார்கள்.

இந்தியாவில் எத்தனை சீர் திருத்தக்காரர்கள் (Reformers) உதித்தார்கள் என்பதைக் கவனியுங்கள். ஒரு சங்கரர் என்ன; ஒரு ராமானுஜர் என்ன; ஒரு நானக் என்ன; ஒரு கபீர் என்ன; ஒரு சைதன்யர் என்ன; ஒரு ராம் மோஹன் ராய் என்ன; ஒரு தயாநந்த சரஸ்வதி என்ன; இறுதியில் நம் காலத்தில் எம்மான் காந்தி என்ன: இவர்க ளெல்லாம் நம் மதத்தைச் சீர் திருத்தினார்கள். அதன்மேல் படிந்த மாசை அகற்றினார்கள்; மறுவைப் போக்கினார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் பகவத்கீதையில் "பரித்ராணாய ஸாதூனாம், விநாசாய சதுஷ்கிருதாம், தர்ம ஸம் ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே" என்று சொல்லியபடி இன்று எம்பெருமான் காந்தியடிகள் நம் மதத்தைச் சீர் திருத்த வந்துள்ளார். நமக்காக அவர் பட்டபாடு என்ன! எழுத முடியுமா? அன்றி எட்டி லடங்குமா? எனவே பல கெட்ட வழக்கங்களை ஒழிக்க, பல மகான்கள் கால தேச வர்த்தமானங்களுக்குத் தகுந்தாற் போல் தோன்றிக் கொண்டே யிருக்கிறார்கள்.

நிற்க, இத் தீண்டாமை யானது பல வழிகளிலும் கெட்டது என்று நிரூபணம் செய்வதே நமது கட்டுரையின் நோக்கமாகும். ஆகையால் அது ஆத்ம சம்பந்தமாய் (Spiritually) அபத்தம் என்பதை முதலில் நிரூபணம் செய்வாம்.

அன்பர்களே! இவ்வுலகில் எல்லா உயிர்களுக்கும் உயர்ந்ததொரு உயிர் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அவ் வுயிரைத்தான் "கடவுள்" என்று நாம் நவில்கின்றோம்; "ஆண்டவர்" என அழைக்கின்றோம். பலரும் பலவித நாமமிட்டு, பரியாயப் பெயர்கள் பல இட்டு அழைக்கிறார்கள். யார் எப்பெய ரிட்டா லென்ன? அப்பொருள் ஒன்றே. அது இரண்டல்ல. இந்த உண்மையை எல்லா மதங்களும் ஒப்புக் கொள்ளுகின்றன. ரோஜா புஷ்பம் பல பாஷைகளில் பல பெயர் இட்டு அழைக்கப்படினும், அம் மலர் ரோஜா வேயன்றி வேறொரு மலராகுமா? அந்த உயிர் இலங்காத இடமே யில்லை. எங்கும் அவ்வுயிர் நீக்கமற நிறைந்திருக்கிறது. சித்திலும் அசித்திலும் அது மிளிர்கிறது. சுருங்கக் கூறின், முத்து மாலையினூடே கோர்க்கப் பட்ட கயிற்றைப் போல் அது வியாபிக்காத இடமே யில்லை. ஆகையினாலேயே அவ்வுயிரை "சர்வ வியாபி" எனச் சான்றோர் சாற்றலானார். ஆகையினாலேயே சிறந்த ஞானிகள்,—உயிர் அறிவு பெற்ற உத்தமர்கள் "கடவுளை" எங்கும் கண்டு களிக்கிறார்கள். கண்ணப்பர் கடவுளைக் கல்லில் கண்டு களித்தார். திரு நாளைப் போவார் தில்லையில் கண்டு களித்தார். பிரஹ்லாத ஆழ்வார் தூணில் கண்டார். ஹரிச் சந்திரன் "ஸத்யத்தில்" கண்டார். குமணன் "கொடையில்" கண்டார். சிலர் கடவுளைத் "தொண்டில்" கண்டார். சிலர் "பக்தியில்" கண்டார். சிலர் "யோகத்தில்" கண்டார். சிலர் "போகத்தில்" கண்டார். சிலர் "இப் பிரகிருதியில்" காண்கிறார். சிலர் "ஏழைகளிடையே" காண்கிறார். ஸ்ரீ கேசவ சந்திரசேனர் "The first Manifestation of God is in Nature itself" எனச்செப்புகிறார். கடவுளின் முதற் றோற்றம். நாம் கண்ணால் காணும் இப்பிரகிருதியினிடமே இலங்குகின்றது. இப்படி சர்வ வியாபகமா யிருக்கும் "சக்தி"யைப் பற்றி விவேகானந்தரின் விழுமிய உரையைக் கேண்மின்." He who finds, in this world of manifoldness, that one running through all, in this world of death he who finds that one enfinite Life, in this world of insentience and ignorance, he who fiinds that one Light and Knowledge, unto him belongs eternal peace. unto none else, into none else.

"பன்மையே நிறைந்த இவ்வுலகிலே எவனொருவன், அப்பன்மையினூடே செல்லும் "அவ்வொருமை" யைக் காண்பானோ, அழிவே நிறைந்த இப்பாரிலே அந்த வரையற்ற "உயிரை" எவன் ஒருவன் காண்பானோ, அறியாமையும், அஞ்ஞானமும் நிறைந்த இம்மண்டலத்திலே எவனொருவன் அந்த "ஒரு அறிவையும் ஞானத்தையும்" காண்பானோ, அவனுக்கே "சாச்வதமான சமாதானம்" உரியது. மற்றொருவருக்குமிலது; மற்றொருவருக்குமிலது."

இதனால் நாம் காணும் இப்பன்மையினூடே ஓர் ஒருமைப் பொருள் ஒளிர்வது விளங்கவில்லையா! இவ்வுண்மையை "விஞ்ஞான" சாஸ்திரமும் ஒப்புக் கொண்டு விட்டது. அதையும் உலகத்திற்கு விசதமாக விளக்கியவர் நமது ஜகதீச சந்திர போசன்றோ! மாங்

களுக்குக் கூட உயிரும் உணர்வும் உண்டு என்பதை அவர் உலகத்துக்கு நிரூபணம் செய்துவிட்டார். இஃ துண்மை யானுல் "தீண்டாமை" என்பதும் "நெருங்காமை" என்பதும் அபத்த மல்லவா? அது மாத்திர மல்ல; "What temple is greater than the body of a Man!" மனிதனுடைய தேகத்தைக் காட்டிலும் சிறந்ததொரு ஆலயம் உலகத்தில் உளதோ? அப்படிப் பட்ட ஆல யத்தில் எம்பெருமான் ஈசனைக் கண்டு களிப்ப தைவிட்டு,—அந்த ஆலயத்தின் முன் ஆனந்த மாக இரண்டு கைகளையும் கூப்பித் தொழு வதை விட்டு, அது அசுத்தம், தீண்டத்தகாது, நெருங்கத் தகாது என்று சொல்லுவதும் அறிவாளிகளுக் கழகாகுமா? என் அன்பர் களே! பிள்ளை என்பதற்காக ஒருவன் தன் மனைவியை நேசிப்பதில்லை. நண்பன் என்பதற் காக ஒருவன் தன் அன்பனை நேசிப்பதில்லை. ஆனுல் எதற்குக்கோ என்ருல், இவர்களிட மெல்லாம் எம்பெருமான் ஈசனின் பிரகாச மின்சாரம் மிளிர்ந்து கொண் டிருக்கிறது. என் அன்பர்களே! யோசித்துப் பாருங்கள். இந்த ஒளி ஒருவனை விட்டு அகலுமானுல் யாராவது நேசிப்பார்களா? பெண்சாதி உயிர் நீங்கினுல் புருஷன் அவளது உடலை மருவ ஒருப்படுவானு? உயிர் நீங்கிய பிள்ளையை வீட்டில் வைத்துக் காபாற்றிக் களிப்பானு? பிணத்தைப் பார்த்து என் அன்பன் என்று அறைவானு? ஒன்றுஞ் செய்ய ஒருப்படான் அல்லவா? ஆகையால் உயிரோடு கூடிய உடலில் ஏதோ "தெய்வீக சக்தி" இயங்குவது உங்க ளுக்குத் தெரியவில்லையா? அவ்வித சக்தியே அன்பின் அடிப்படை. அந்த சக்திதான் இப் பிரகிருதியில் எங்கும் இலங்குகின்றது. அச் சக்தி நீக்கமற நிறைந்திருப்பினும் மனித விடமே அதிகமாகக் காணப்படுகிறது. ஆகை யினுலே தான் கண்ணப்பர் அதைக் கல்லில் கண்டார். பிரஹ்லாதர் தூணில் கண்டார். அவ்விதமான அசேதனப் பொருள்களில்,— உயிரற்ற பொருள்களில்-நாம் கடவுளைக் காணப் போவதில்லை. ஆனுல் நம்மைப்போல மனிதன், நமது சகோதரன், மானிடன், இவனிடத்தி லாவது "கடவுளிருப்பை" நாம் காண வேண் டாமா? இதை முன்னிட்டே எம்பெருமான் "இயேசு" அடிக்கடி பார்த்துப் பழகியிருக்கும் சகோதரனுகிய உன் அயலானிடம் நீ அன்பு கொள்ளா விட்டால், என்றுமே கண்டிராத "கடவுளிடம்" நீ அன்பு கொள்வது எங் ஙனம்"? என்று கேட்டார். ஆகையினு லேயே சிறந்த பக்தர்கள் "அடியார்க்கு மடி யேன்" என அறைந்தார்கள். சிவநேசச் செல்வராகிய "அப்பர்" "ஆ வுரித்துத் தின் றுழலும் புலையரேனும், கங்கைவார் சடைக்கரந் தார்க் கன்பராகில், அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளரே" எனக் கழறினர். ஆகை யினுல், அன்பர்களே! ஆத்ம சம்பந்தமாய்ப் பார்க்குங்கால், எல்லாப் பொருளிலும் எம்பெரு மான் ஒளி மிளிர்ந்து கொண்டிருப்பதால், நாம் கல்லையும் மண்ணையுங்கூடக் கேவலமாகக் கருது வதற்கில்லை. அப்படியிருக்க ஆறறிவு படைத்த மனிதனை எப்படி இழித்துக் கூறுவது இயலும் என்று யான் கேட்கின்றேன். எனவே உயிர்க் கூறறிந்த எவரும் "தீண்டாமை"யைத் திண்ண மாய் ஒப்புக் கொள்ளார் என்பது வெட் டெனத் தெளிவாகிறது.

அடுத்தபடியாக நீதியின் மூலமும் ஒழுக்கத் தின் மூலமும் (Ethically and Morally) தீண்டாமை அர்த்தமற்றது என்பதை நிரூ பணம் செய்வாம்.

என் அன்பர்களே! நமது ஜாதியை, நமது சமூகத்தை, நமது உடலுக் கொப்பாக வைத் துக் கொள்ளுங்கள். காலில் ஒரு விஷக்கல் பட்டு, புரையோடும் புண் ஏற்பட்டு விட்ட தென்றும் வைத்துக் கொள்ளுங்கள். அப் பொழுது ஏனைய அவயவங்கள் தாம் தாம் செய்ய வேண்டிய கடமையை உணராமல் இருந்து விடுமானுல் இந்த யாக்கைக்கே அழிவு ஏற்பட்டு விடும் என்பதைச் சொல்ல வேண்டுவ தில்லை. அதைப் போலவே நமது சமூகத்தில் ஒழுக்கமற்றவர் பலர் இருந்தால், அதனுல் சமூகத்தின் உயிர்வளங் குன்றி, அது தினே தினே அழிந்து இருந்த இடம் தெரியாமல் இறந்துவிடும். எனவே ஒழுக்க மற்றவர்கள் இருந்தால் அவர்களுக்கு நீதி சாஸ்திரங்களைப் போதித்து சமயக் கல்வியையுங் கொடுத்து உயர்த்துவோ மானுல் சமூகம் சீர்பட்டு நாளடை வில் ஓங்கி வளரத் தலைப்படும். அதைவிட்டு ஒரு பெரிய சமூகத்தைத் தாழ்த்தியே வைத்திருந் தால் அதனுல் பல கெடுதிகள் ஏற்பட்டு நமது மதமும் மக்களும் அழிந்துபடுவர். எல்லோரும் இன்புற்றிருந்தால் எவ்வளவு இனிதாக இருக்கு மென்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். தன்னலங் கருதிச் சிலர், பிறரைத் தாழ்த்தி வைப்பதே சாலச்சிறந்தது எனக் கருதுகிருர் கள். அது எவ்வளவு முட்டாள்தனம்? உதா

ரணமாக நான் ஒரு கிராமத்திற்குச் செல்ல நேரிட்டது. அவ்வூரிலுள்ள நிலச் சுவான்தாரர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசுமாறு என்னைப் பணித்தனர். ஆனால் "கள் குடியாமை" என்னும் விஷயம் பற்றிப்பேச அநுமதியளிக்க ஒருப்படவே யில்லை. ஏனெனின் கட்குடியா விட்டால் தம் கீழ் வேலை செய்வோர் சிக்கனமாயிருந்து செல்வம் சேர்ப்பராம். தொழிலாளி யிடம் செல்வம் சேர்ந்தால் நிலச்சுவான்தாரர்கள் வேலை தடைபட்டுப் போமாம். இஃதுண்மையே! எனினும் சமூகத்தில் பலர் ஏழையாகவும், வறியராகவும், இருந்தால் அதனால் வரும் துன்பம் இன்னதென்று இவர்கள் அறியவில்லை போலும். நமது தென்னாட்டிலே 1918ம் வருஷத்திலே எங்கு பார்த்தாலும் பகற்கொள்ளை நடந்த தென்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அரசாங்கத்திற்கும், அதன் வீரஞ் செறிந்த போலீஸிற்கும் எளிய மக்கள் அஞ்சினார்களில்லை. கடைத் தெருவிலேயே புகுந்து பகலிலேயே பஹிரங்கமாகப் பலபொருள்கள் கொள்ளை யிடப்பட்டன. காரணம் என்ன? வறுமை; பசிப்பிணி; எளியவர்கள் பசிதாங்காது உயிர்க்கிறுதி நேர்ந்தாலும் பரவாயில்லை என்று உயிரை வெறுத்தல்லவோ அவ்விதக் காரியத்தில் தலையிட்டார்கள்.

பசி வந்தால் பத்தும் பறந்து போமல்லவா? சிறந்த ஞானிகளே பசி யென்னும் கொடியோன் ஆட்சிக்கு அடிமைப் படுகிறார்களென்றால் ஒன்றுந் தெரியாத மாக்களைப்பற்றி என்ன சொல்வது? ஆகையால் பலர் ஏழையாயிருந்தால் அதனால் பண முள்ளோர்களுக்குத் துக்கமே தவிர சுகமில்லை. அன்றியும் ஒரு சமூகம் மாத்திரம் உயர்ந்த நிலையை அடைவதும் பெருத்த ஆபத்தே. ஆகையால் உயர் நிலை அடைந்த சமூகத்தின் கடமை என்னவென்றால் தன்னலத்தை யுத்தேசித்து, தன் உயிரையும் உடைமையையும் உத்தேசித்து, பாக்கி சமூகங்களையும் தன்னிலைக்குக் கொண்டுவரப் பாடுபடுவதே. இன்றேல் மனிதனின் குணத்தை எவனும் மாற்றமுடியாது. எல்லோரும் காந்தியல்ல; எல்லோரும் ராமகிருஷ்ணரல்ல. நூற்றுக்கு 95 மனிதர்கள் காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம் என்னும் இவ்வறு வகையார் ஆட்சிக்கே உட்பட்டிருக்கிறார்கள். ஆகையால் தாழ்த்தப்பட்டிருக்கும் சமூகம் ஏனைய உயர்ந்த சமூகத்தின் பெருமையையும், ஏற்றத்தையுங் கண்டு, அழுக்காறுற்று உயர்ந்த சமூகத்தை அழிக்க வழி தேடும். அதுகாலை உயர்ந்த சமூகம் தன்னிலை யிழந்து தவிக்க நேரிடும். எனவே பணக்காரர்களும், உயர்ந்தோர்கள் என்று சொல்லிக் கொள்பவரும் தன்னலத்தை உத்தேசித்தாவது எல்லோரையும் தங்கள் நிலைக்குக் கொண்டுவர முயற்சிப்பது கடனாகும்.

அடுத்தபடியாக மற்றொரு துக்ககரமான விஷயத்தைக் கவனிப்போம். கிறுஸ்துவப் பாதிரிமார்களும் முஸ்லீம் மௌல்விகளும் தம் தம் மதப் பெருமையைச் சொல்லி இவர்களைத் தங்கள் மதத்திற்கு இழுக்கிறார்கள். அந்த மதங்களில் "கல்வி" யும் நல்வாழ்வு வாழும் வகையும் நல்கப்படுகின்றன. கொஞ்சங் கல்வியும் அதன்மூலம் உலகப் பழக்கங்களும் தெரிந்தவுடன் "ஸ்வய மரியாதை," தான் மனித வர்க்கத்தை சேர்ந்தவன் என்ற உணர்ச்சி, அவனிடம் பரிணமிக் கின்றன. அதுகாலை அவன் ஹிந்து சமூகத்தில் தனக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை நினைந்து நினைந்து, உருகி "ஸநாதன தர்மத்திற்கே" ஒரு பெரும் விரோதியாகி, அதை வேருடன் பிடுங்க வழி தேடுகிறான்.

என் அன்பர்களே! உயர்ந்த ஜாதியார்களே! "ஸ்வயமரியாதை" என்ற உணர்ச்சியே யில்லாத சாலத்தில், நாம் இப்படித்தான் இருக்கப் பிறந்தோம் போலும்; உயர்ஜாதிக் குழைக்க இவ்வுடல் ஆண்டவனால் அருளப் பட்டது போலும் என அம்மனிதன் நினைக்கிறான். அது பொழுது அவன் உங்களுக்குக் கீழ்ப்படிந்து அடிமையாயிருந்து, நீங்கள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யத் தடையில்லை. என் அன்பர்களே! சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம்: பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம்; எல்லோரையும் எக்காலத்தும் ஏமாற்றுவதென்பது இயலுமா? ஆகையால் நம்மதத்திற்குப்பகைவர்கள் தினே தினே விருத்தியாகி வருகிறார்கள். அப்படி விரோதிகளைத் தயாரித்து வருபவர் யார்? உயர்ந்த ஜாதியாரும் அவர் தம் இறுமாப்பு மன்றோ! நமது இறுமாப்பால், நம் மதத்திற்கு, "ஸநாதன தர்மத்திற்கு" அழிவு ஏற்படுமானால் இது நீதி சாஸ்திரத்துக்கு நேரானதல்லவா? அன்றி அது நல்லொழுக்கத்திற்கும் நஞ்சல்லவா? உயிரினு முயர்ந்த நம் மதத்தை வேண்டியாவது, நம் ஸநாதன தர்மத்தின் பொருட்டாவது உயர்ந்த ஜாதியார் தம் இறுமாப் பொழித்து தீண்டாதார் எனப் படுவோரை இனியாவது ஸமமாய் நடத்துவார்

களா? இந்தப் பெரிய ஆபத்தை உத்தேசித்தல்லவா "ஸ்வாமி சிரத்தானந்தர்" போன்ற மகான்கள், தீண்டாமையை இன்னே ஒழித்து விட வேண்டு மென்று பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள்: செய்கிறார்கள். ஸ்வாமி ஜீ என்ன படியாதவரா! வேதக்கடல் ஆயிற்றே! சிலவருடங்கள் முன்னர் சென்னைக் கடற்கரையில் ஸ்வாமிஜீ அவர்கள் பேசியது என் செவிகளில் இன்னமும் மணியோசையன்ன ஒலித்துக்கொண் டிருக்கிறது. அவர் மொழிந்ததாவது:—'உயர்ந்த ஜாதியர் என்போர் தீண்டாதாருக்கு இதுகாறும் இழைத்துவந்த இன்னல்களை நினைந்துருகி, பச்சாதாபப்பட்டு தாங்கள் செய்த குற்றங்களுக்கு பிராயச்சித்தஞ் செய்து கொண்டு, அவர்களுக்கு சமூகத்தில் சம உரிமை அளிக்காத வரையில் நான் அத் தீண்டாதாரை ஒன்று சேர்த்துப் பெரியதொரு சமூகப்போர் நடத்துவேன் என்பதை நீங்கள் கண்டிப்பாய் நம்புங்கள்" என்று சொன்னவுடன் என்னுடல் சிலிர்த்து, மயிர்க் குச்செறிந்தது.

என் நண்பர்களே! சென்னை உயர்தர நீதி மன்றத்தில் (High Court) நீதிபதியாக இருந்தவரும் ஈழவப் பெருங்குலத்தைச் சேர்ந்தவருமான ஸ்ரீ. கிருஷ்ணன் அவர்கள் "ஈழவ மகாநாடு" ஒன்றில் தலைமை வஹித்து நிகழ்த்திய சொற்பொழிவில் அடியிற்கண்ட வசனங்கள் கூர்ந்து கவனிக்கத் தக்கவை. "ஹிந்துக்கள் ஹிந்துமதத்தில் நமக்குள்ள உரிமைகளை வழங்காத வரையில் நாமெல்லாம் பௌத்த மதத்தைத் தழுவி விடுவோம்"

(தொடரும்)

---

# நட்டாஜி

அல்லது

## சிவாஜியின் சேனைத் தலைவன்.

ஸ்ரீ. மயிலை சீனி. வேங்கிடசாமியவர்கள் எழுதியது.

97-ம் பக்கத் தொடர்ச்சி.

16-ம் அத்தியாயம்.

### பவானியின் திருவருள்.

நட்டாஜி தன் காதலி காசிபாயுடன் அதிக நாள் தங்கியிருக்க முடியவில்லை. ஏனென்றால், பவானி தேவியின் கட்டளைப்படி அவன் சிவாஜியோடு தோர்ணு கோட்டைக்குப் போக வேண்டியிருந்தது. ஆகவே, ஒரு நாள் காலையில் சிவாஜியும் நட்டாஜியும் குதிரையேறிப் புறப்பட்டார்கள். பத்து மைல் தூரம் அவர்கள் சவாரி செய்த பிறகு, அம்பாவணி கணவாய் அருகில் உள்ள கோரிகாட் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு சற்று நேரம் தங்கி இளைப்பாறி விட்டு அக்கோட்டைக்குள்ளிருக்கும் கௌரி தேவி ஆலயத்திற்குச் சென்று, அம்மனை வணங்கிக் கொண்டு மறுபடியும் பிரயாணப்பட்டார்கள். அவர்கள் நெடுந்தூரம் பிரயாணம் செய்து முல்ஷி என்னும் கிராமத்தண்டை வந்தபோது உச்சிவேளையாயிற்று; வெயில் கடினமாயிருந்தது. ஆகவே அக்கிராமத்தில் இரண்டு மணி நேரம் தங்கியிருந்து தங்களையும் தங்கள் குதிரைகளையும் இளைப்பாற்றிக் கொண்டார்கள். இங்கிருந்து தோர்ணு கோட்டைக்கு இன்னும் இருபது மைல் தூரம் இருக்கிறது. நடுப்பகல் கழிந்து, சற்று வெயில் தணிந்தவுடன் அவர்கள் மறுபடியும் பிரயாணப்பட்டுக் குதிரை ஏறிச் சவாரி செய்தார்கள். பாதை காடாக இருந்தபோதிலும் நெடுந்தூரம் சவாரி செய்தனர். கடைசியாக மலைமேல் கட்டப்பட்டுள்ள தோர்ணு கோட்டையின் சிகரங்கள் காணப் பட்டன. இன்னும் சற்று நேரம் சவாரி செய்த பின் கோட்டையிருக்கும் மலையடிவாரத்தைச் சேர்ந்தார்கள்.

அடிவாரத்திலிருந்து மலையுச்சிக்குச் செல்ல செங்குத்தான படிகள் அமைந்திருக்கின்றன. இப்படிகளின் மேல் குதிரைகள் ஏறிச் செல்ல

முடியாதாகையால், அவர்கள் குதிரைகளை அடிவாரத்திலேயே நிறுத்திவிட்டுப் படிகளின் மேல் ஏறினர்கள். படிகளைக் கடந்து கோட்டை வாயிலில் நுழைந்த போது, சிப்பாய்கள் இவர்களை ஆரவாரத்தோடும் குதூகலத்தோடும் வரவேற்றார்கள். "ஜே! ஜே! சிவாஜி மகாராஜாவுக்கு ஜே!" என்று அவர்கள் கூச்சலிட்ட ஆரவாரம் செவிடு படும்படி ஆகாயத்தைப் பிளந்து சென்றது.

சிவாஜியும் நட்டாஜியும் கோட்டையிலுள்ள மாளிகையில் போய்ச் சேர்ந்தார்கள். இரவு வந்துவிட்டது. இருவருக்கும் உணவு பரிமாறப்பட்டது. ஆகாரம் முடிந்த பிறகு இருவரும் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தனர். இச்சமயத்தில், சிப்பாய் ஒருவன் வந்து, இரண்டு மனிதர்கள் சிவாஜியைப் பேட்டி காண வந்திருப்பதாகத் தெரிவித்தான். சிவாஜி அவர்களை அழைத்து வரும்படி கட்டளை யிட்டார்.

முதலில் பேட்டிக்காக வந்தவன், கோட்டையைச் செப்பனிடுவதற்காக அமர்த்தப்பட்ட ஒரு கொல்லன். அவன் வந்ததும், தாழ்ந்து வணங்கி மரியாதையாக நின்றான். சிவாஜி அவன் வந்த காரியத்தை வினவினர். கொல்லன் இவ்வாறு விண்ணப்பஞ் செய்து கொண்டான்.

"ராஜாவே! தங்கள் கட்டளைப்படியே கோட்டையைப் பழுது பார்த்து வருகிறேன். என்னுடைய ஆட்கள் பல மாதங்களாக வேலை செய்து கொண்டு வருகிறார்கள். ஆனல், அவர்களுக்கு இன்னும் கூலி கொடுக்கப்படவில்லை! இதைப்பற்றி அவர்கள் என்னிடம் அதிகமாக முறையிடுகிறார்கள். நான் அவர்களுக்குத் தவணை சொல்லிக்கொண்டு வந்தேன். இன்னும் அவர்கள் பொறுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். வேறே இடத்தில் வேலை பார்த்துக்கொண்டு போய்விடுவதாகச் சொல்லுகிறார்கள். கோட்டையின் சுவர்களை இன்னும் சரியாகப் பழுது பார்த்து முடியவில்லை. இந்த நிலைமையில் அவர்கள் போய்விட்டால் என்ன செய்வது? கோட்டைகள் பலமாக விருந்தாலல்லவா நாம் வெற்றி அடைய முடியும்? தலைவரே! என்னைப் பொறுத்த மட்டில், என் உயிர் மாய்கிற வரையில் உமக்கு ஊழியம் செய்ய சித்தமா யிருக்கிறேன். ஆனல், ஏழைத் தொழிலாளிகள் சாப்பாட்டுக் கில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டு எத்தனை நாளைக்குத் தான் வேலை செய்வார்கள்? ஒவ்வொரு நாளும், அவர்கள் வேறே இடத்தில் வேலைக்குப் போய் விடுவார்களோ என்று கவலை கொண்டிருக்கிறேன். கொஞ்சமாகிலும் பணம் கொடுத்தால் தான் அவர்கள் இனி வேலை செய்வார்கள். இனி தங்கள் சித்தம்" என்றான் கொல்லன்.

சிவாஜி கொல்லனைப் பார்த்து வருத்தத்தோடு, "அப்பா! நீ சொல்லுவது எனக்கு நன்றாகத் தெரிகிறது. பொறுத்துக்கொள். இன்னும் எனக்குப் பணம் கிடைக்கவில்லை. கூடிய சீக்கிரத்தில் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுகிறேன்" என்றார்.

"மகாராஜா! சில ஆயிரம் ரூபாய் மாத்திரம் கொடுங்கள். நம்முடைய கோட்டைகளை, அந்த டெல்லி மொகலாய சக்கரவர்த்தியாவது பீஜப்பூர் அரசனாவது, அசைக்க முடியாதபடி அவ்வளவு பலமாகக் கட்டி விடுகிறோம் பார்" என்று சொல்லிவிட்டு கொல்லன் வணக்கமாக விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

சிவாஜி நட்டாஜியைப்பார்த்து, "பார்த்தாயா! தேசிய வேலை, ஒரு பொதுவான நல்ல காரியம், பணம் இல்லாமல் எவ்வளவு முட்டுப் படுகிறது பார்! பவானி தேவி எப்பொழுது கண் திறந்து பார்ப்பாளோ தெரியவில்லை" என்று சொல்லி வருத்தப்பட்டார்.

இதற்குள்ளாக இன்னொருவன் பேட்டிக்காக அழைத்து வரப்பட்டான். இப்படி வந்தவன் நமது தேசத்தானல்லன்; ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த ஒரு பறங்கிக்காரன். நமது நட்டாஜிக்கு அவன் நூதன மனிதனாகக் காணப்பட்டான். வெண் குஷ்டம் பிடித்தது போல அவன் உடம்பு முழுவதும் வெண்ணிறமாக இருந்தது. தலை மயிருங்கூட சிவந்த நிறமாகக் காணப்பட்டது. இவன் முகம்மதியரைப்போலவே கால்சட்டையும் சொக்காயும் பாதரக்ஷையும் அணிந்திருந்த போதிலும், அவை முகம்மதியர் உடுப்பு மாதிரி யல்லாமல் முற்றும் வேறு விதமாகவே இருந்தன. கையில் ஒரு தொப்பியை வைத்திருந்தான். இந்த ஐரோபியன் போர்ச்சுகேசிய வர்த்தகக் கம்பெனியைச் சேர்ந்தவன். தன் நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட வியாபாரப் பொருள்களை நம் நாட்டில் விற்பவன். இவன் கம்பெனிக் காரருக்குப் பம்பாயில் பண்டக சாலை உண்டு. இவனுக்கு இந்துஸ்தானியாவது மராட்டி

பஷையாவது பேசத்தெரியாது; இவன் பேசும் போர்ச்சு கேசிய பாஷை சிவாஜிக்குத் தெரியாது. ஆகையால் இருவருக்கு மிடையே ஒரு துபாஷி வேண்டியிருந்தது. அந்தப் பறங்கிக்காரன் துபாஷிமூலமாக சிவாஜிக்கு இதைச் சொன்னான் :

"நான் ஒரு போர்ச்சுகேசிய வர்த்தகக் கம்பெனியைச் சேர்ந்தவன். எங்கள் கப்பல் ஏராளமான சாமான்களை பம்பாய்க்குக் கொண்டு வந்திருக்கிறது. நல்ல எஃகினால் செய்யப்பட்ட முதல் தரமான பதினாயிரம் பட்டாக்கத்திகளும், ஐயாயிரம் இரும்புக் கேடயங்களும், ஆயிரம் துப்பாக்கிகளும், பித்தளையினால் செய்யப்பட்ட பன்னிரண்டு பெரிய பீரங்கிகளும் ஏராளமான மருந்துகளும் பீஜப்பூர் அரசனுக்காவது, முகலாய சக்கரவர்த்திக்காவது விற்க எண்ணி கல்யாணி நகரத்திலுள்ள பீஜப்பூர் கவர்னரையும், ஜூன்னரிலிருக்கும் மொகலாய தளகர்த்தனையும் கண்டு பேசினேன். ஆனால், அவர்கள் ஒன்றும் முடிவாகப் பதில் சொல்லவில்லை. நான் நாடெங்கும் சுற்றிப் பிரயாணம் செய்தபோது உம்முடைய வீரத்தையும் புகழையும் கேள்விப் பட்டேன். ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் முதலிய தோட்டி முதல் தொண்டமான் வரையில் உன்னைப் புகழ்ந்து பேசுகிறார்கள். "கொஞ்சம் பொறு. இன்னும் கொஞ்ச நாளைக்குள் சிவாஜி, முகலாய அரசனையும் பீஜப்பூர் சுல்தானையும் விரட்டி அடித்து ஓட்டிவிடப் போகிறார்" என்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள். ஆனால், எவ்வளவுதான் தைரியமுள்ள வீரனாயிருந்தாலும் ஆயுதம் இல்லாமல் ஒருவன் எப்படி சண்டை செய்து ஜெயிக்க முடியும்? உம்முடைய வீரர்களுக்குப் போதுமான ஆயுதம் இல்லை என்று அறிகிறேன். ஆகையால் பூனாவிலிருந்து உம்மைப் பார்க்க வந்தேன். உம்முடைய எதிரிகள் உம்மை எந்தச் சமயத்திலாவது தாக்குவார்களென்று உமக்குத் தெரியும். உமது சிப்பாய்களுக்கு நல்ல ஆயுதங்களைக் கொடுத்து உம்மைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டாமா?" என்று பறங்கியன் சிவாஜியிடம் சொன்னான்.

இதைக் கேட்டு சிவாஜி, பணமில்லாக்குறையை நினைந்து தமக்குள் வருந்தினர். பிறகு வியாபார தோரணையாக பறங்கியனைப் பார்த்து, "உம்முடைய ஆயுதங்களெல்லாம் எவ்வளவு விலைபெறும்?" என்று கேட்டார்.

"ஆயுதங்கள் மொத்தமும் ஒன்றரை லக்ஷ ரூபாய்க்குக் குறையாது" என்றான் பறங்கியன்.

சிவாஜி, "நல்லது. யோசித்துப் பதில் சொல்லுகிறேன்." என்றார். பறங்கிக்காரன் வணங்கி விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

சிவாஜி, நட்டாஜியைப் பார்த்து, "நண்பனே! பார்த்தாயா? எல்லாம் பணத்தில் இருக்கிறது. இப்பொழுது என்னிடம் இரண்டு அல்லது மூன்று லக்ஷ ரூபாய் கிடைக்குமானால்,சிப்பாய்களுக்கு முதல்தரமான ஆயுதங்கள் கிடைத்து விடும்; கல்யாணி நகரம் நமது கையில் வந்து விடும். பிறகு பீஜப்பூர் அரசனை மகாராட்டிரத்திலிருந்து ஓட்டி விடலாம். சுயராஜ்யம் பெறலாம். ஆனால், பணம்தான் "என்று சொல்லியவர், திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு, "ஆ! நட்டாஜி! நான் என் இவ்விதம் கவலைப்படவேண்டும். பவானிதேவி இங்கு வரும்படி சொன்னதாலல்லவா நாம் இங்கே வந்தோம். அதை மறந்து, ஏதேதோ பேசுகிறேனே! நான் பவானி தேவியின் ஆலயத்துக்குப்போய் வருகிறேன். நீ இவ்விடத்திலேயே இரு" என்று சொல்லிவிட்டு சிவாஜி, அக்கோட்டையிலுள்ள பவானி அம்மன் கோயிலுக்குப் போனார்.

சிவாஜி, பவானியம்மன் கோயிலுக்குப்போன பிறகு, நட்டாஜி தானிருந்த மாளிகையிலேயே உட்கார்ந்தவண்ணம் ஏதேதோ சிந்தித்தவண்ணமிருந்தான். சாளரங்களின் வழியாகப் பார்த்த போது, நிலவு பால்போல் காய்வதும், அந்த நிலாவெளிச்சத்தில் கோட்டைக் கட்டிடங்களெல்லாம் சலவைக்கற்கள்போல் பளபளப்பாய் தோன்றுவதும் நட்டாஜியின் கண்களைக் கவர்ந்தன. அன்று முழுவதும் பிரயாணம் செய்தவனாகையால் அவன், நிலாவெளிச் சத்தைப்பார்த்துக்கொண்டே மெல்லத்தூங்கிப் போனான். தூக்கத்திலும் ஏதேதோ யோசனைகளும் கனவுகளும் அவனுக்குத் தோன்றின. கடைசியாக ஒரு விசித்திரமான கனவைக் கண்டான்: அந்தக் கனவில் பவானி தேவியின் கோவில் அவனுக்கு முன்பாகக் காணப்பட்டது. கோயிலுக்கருகிலுள்ள ஒரு வளையிலிருந்து நல்ல பாம்பு ஒன்று வெளிவந்தது. திடீரென்று

அந்தப் பாம்பு, வளையலணிந்த ஒரு பெண் மகளின் கைபோல் மாறியது. உடனே பொன் மயமான, ஒரு தெய்வ மகள் வடிவம் தோன்றியது. ஆ! தெய்வ மகளல்ல. பவானியம்மன் வடிவமாகக் காணப்படுகிறது. அம்மன் உருவத்தைச் சுற்றிலும் பொன் மயமான பேரொளி வட்டமாகக் காணப்படுகிறது. பவானியம்மன் நட்டாஜியைக் கூர்ந்து பார்க்கிறார்; இதோ பேசுகிறார். "நட்டாஜி! நான் பவானி அம்மன். சிவாஜியுடனிருந்து நீ மகாராட்டிர தேசத்தின் விடுதலைக்காகப் பாடுபடுவாய்! இப்பொழுது சிவாஜி என் கோயிலில் பூஜைசெய்து கொண்டிருக்கிறான். அவன் விரும்பும் பொருளை நான் கொடுக்கிறேன். நாளை காலையில் எனக்குப் பூஜையானபிறகு இந்த இடத்தைத் தோண்டிப்பாருங்கள். அங்கு, உங்களுக்கு என்ன வேண்டுமோ அதனைக் காண்பீர்கள்.'' என்று இவ்விதம் பவானியம்மன் நட்டாஜிக்குச் சொன்ன உடனே மறைந்தார். அம்மனுடன் பேரொளியும் மறைந்தது. நட்டாஜி திடுக்கிட்டெழுந்தான். கண் விழித்தான். ஒன்றையும் காணவில்லை. நிலவு மாத்திரம் பால்போல் காய்ந்து கொண்டிருக்கிறது. ஆச்சரியத்தோடு தான் கண்ட கனவைப் பற்றிச் சிந்தித்தான். உண்மையாக நடந்தது போலவே அவன் மனதிற்குத் தோன்றிற்று. இது சாதாரண கனவல்ல. இதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று தேர்ந்தான். சாளரத்தினருகில் எழுந்து சென்று அம்மன் கோயிலைப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! நல்ல பாம்பு வெளிவந்த வளை நிலா வெளிச்சத்தில் இன்னும் காணப்படுகிறது!

இச்சமயத்தில், தானிருந்த அறைக்குள் யாரோ ஒருவர் நடக்கும் சத்தம் கேட்டது. நட்டாஜி திரும்பிப் பார்த்தான். சிவாஜி வருவதைக் கண்டான்.

"நட்டாஜி! என் மனதில் நம்பிக்கை பிறந்துவிட்டது. தேவி நமக்கு உதவிசெய்வாள். ஆனால், உன்னைக் கேட்டால்தான் தெரியுமென்று அம்மன் சொன்னாள்" என்று சொல்லிக்கொண்டே சிவாஜி நட்டாஜியருகில் வந்தார். நட்டாஜி தான் கண்ட புதுமையான கனவை சிவாஜிக்குச் சொன்னான். சிவாஜி, அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார். அந்த இடத்தைச் சோதித்துப் பார்க்க வேண்டுமென்றும் அவ்விடத்தில் பணப் புதையல் கிடைக்கும் என்றும் அவர் நம்பினார். பிறகு இரவு நெடுநேரமாய்விட்டபடியாலும் அன்று அவர்கள் நெடுந்தூரம் பிரயாணம்செய்து களைப்படைந்தபடியாலும் இருவரும் படுக்கைக்குச் சென்றார்கள்.

(தொடரும்)

---

# மைனர்

(ஸ்ரீ. கே. எஸ். சுந்தரம் பிள்ளை)

நாடக பாத்திரங்கள்.

குப்புராயர்:— ஒரு மிராஸ்தார்.

இராமகிருஷ்ணன்:—மிராஸ்தார் பையன் (மைனர்)

நடேசன் .—பத்மாவதியின் சகோதரன்.

எம்டன்:—இராமகிருஷ்ணனைத் தீயவழியில் திருப்பும் நண்பன்.

வால்:—எம்டனின் வேலைக்காரன்,

பத்மாவதி:—இராமகிருஷ்ணன் மனைவி.

சரோஜனி:—நடேசன் மனைவி. சுந்தரராயர் மருமகள்.

கனகமணி:—இராமகிருஷ்ணன் வைப்பாட்டி.

கடு: தேவி:—எம்டன் மனைவி.

முதல் அங்கம்.

முதற் களம்.

(இடம்) சரோஜனி வீடு (காலம் மாலை)

(தோழிகள் தெய்வத்தைக் கை கூப்பி வணங்கிப் பாடிக் கொண்டிருத்தல்)

(ராகம்—தன்யாசி)

பல்லவி.

எத்தனை கோடி இன்பம்
வைத்தாய்-எங்கள்
இறைவா ! இறைவா ! இறைவா !
(ஓ எத்தனை)

சரணங்கள்.

சித்தினை அசித்துடன்
இணைத்தாய்-அங்கு
சேருமைம் பூதத்து வியனுல
கமைத்தாய்
அத்தனை யுலகமும் வர்ணக்
களஞ்சிய
மாக பல பல நல்லழகுகள்
சமைத்தாய் (ஓ எத்தனை)

முக்தி யென்ெருரு நிலை
சமைத்தாய்—அங்கு
முழுதினையு முணரு முணர்
வமைத்தாய்
பக்தி யென்ெருரு நிலை
வகுத்தாய்—எங்கள்
பரமா பரமா பரமா! (ஓ எத்தனை)

முதல் தோழி:—பார்த்தீர்களா ! சகிகளே அந்தச் செடியின் புஷ்பத்தை. ஆஹா! என்ன ஆனந்தம். எத்துணை உல்லாசமாய் மகிழ்ந்து பூத்திருக்கின்றன. இயற்கையின் அழகல்லவா அழகு ?

இரண்டாந் தோழி :—ஆம். இச் சமயத்தில் யாராவது உருக்கமாய்ப் பாடினல் ஸோபிதமாயிருக்குமல்லவா ?

மூன்ருந் தோழி:—சகிகளே வாயை மூடுங்கள்! ஊன்றிக் கவனியுங்கள் !

முதல் தோழி :—அதோ! அதோ ! சரோஜனி தேவி வருகின்ருர். கூச்சல் போடாதீர்கள்! வாருங்கள் கும்மி யடிக்கலாம்.

(சரோஜனி தேவி வருகிருள். தோழிகள் கும்மி யடிக்கிருர்கள்)

கும்மியடி தமிழ்
நாடு முழுவதும்
குலுங்கிடக்
கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த
பிசாசுகள் போயின
நன்மை கண்டோ
மென்று கும்மியடி (கும்மி)

எட்டையும் பெண்கள்
தொடுவது தீமை யென்
றெண்ணி-யிருந்தவர்
மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்
பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர்
தலை கவிழ்ந்தார் (கும்மி)

மாட்டை யடித்து
வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக்
கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங்
காட்ட வந்தா ரதை
வெட்டி விட்டோ
மென்று கும்மியடி (கும்மி)

கற்பு நிலை யென்று
சொல்ல வந்தாரிரு
கக்ஷிக்கு மஃது
பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக்
கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி
மிதித் திடுவோம். (கும்மியடி)

வேதம் படைக்கவும்
நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ
மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ்
செய்திடுவோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ்
செய்திடுவோம். (கும்மியடி)

காதலொருவனைக்
கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங்
கைகொடுத்து
மாதர றங்கள்
பழமையைக் காட்டிலும்
பெரிய மாட்சிபெறச்
செய்து வாழ்வ மடி. (கும்மியடி)

சரோஜனி :—தோழிகளே ! பேஷ் ! பேஷ்! என்ன குதூகலம்.

முதல் தோழி:—அம்மா ! என் கேட்க மாட்டீர்கள். இன்று குதூகலந்தான்.

இரண்டாந்தோழி :—தேவி ! பாரத நாட்டிலே எங்கு பார்த்தாலும் பெண் விடுதலை, விடுதலை யென்ற கூச்சலா யிருக்கிறது. இன்று கவி சக்கரவர்த்தி பாரதியார் பாடலொன்றை வாங்கினோம். அதில் ஒரு கும்மியைக் கண்டோம். அதைத் தான் பாடினோம். தவிர, அம்மா நாங்கள் உங்கள் பணிப் பெண்களல்லவா ? நாங்கள் குதூகலப்படுகிற நாளல்லவா ? இன்று.

சரோஜனி :—அது என்ன, ஏன்?

மூன்றாந்தோழி:—ஏனென்று எங்களிடமா கேட்கின்றீர்கள். ஆமாம். எங்களுக்குத் தெரியாமல் போய்விடுமென்று நினைத்தீர்களா? நன்று நன்று! எங்களுக்கு எல்லாம் தெரியும்.!

நான்காம் தோழி:— ஆமாம், எஜமான் குப்புராயர் சகல சொத்தையும் உங்களுக்கு உயில் எழுதி வைத்து விட்டதற்குத்தான் இந்த ஆர்ப்பாட்டம் செய்கிறோம். ஏண்டி சகிகளே! அப்படித்தானே.

எல்லோரும்:—ஆம், ஆம். அதற்குத்தான்.

முதல் தோழி:—அம்மா ! எங்களுக்கெல்லாம் என்ன கொடுக்கப் போகிறீர்கள்?

இரண்டாந் தோழி:—தேவீ, எங்களுக்கெல்லாம் மிட்டாய் வாங்கிக் கொடுங்கள்.

மூன்றாந் தோழி.—எனக்கொரு வைர மோதிரம் செய்து கொடுங்கள், அம்மணி.

நான்காம் தோழி:—காசிப் புடவை ஒன்று காசி, முத்தையா கம்பெனியில் வாங்கிக் கொடுங்கள் தேவி.

சரோஜனி:—தோழி மார்களே ! உண்மை. உண்மை. மாமா அவர்கள் தனது பையன் கொடிய நடத்தையைக்கண்டு வெறுத்து, எனக்கு உயில் இன்று எழுதி வைத்திருக்கிறார்களாம். ஆனால் சத்தியமாய் இன்று அத்தான் ராமகிருஷ்ணன் தன்னை சீர்திருத்திக் கொண்டு நல்லொழுக்கம் கொள்வானாகில், இந்த க்ஷணமே அவனுக்குத் திரும்ப சகலத்தையும் கொடுத்துவிட தயாராயிருக்கிறேன். என்று வரை அவனுக்கு கனகமணி சகவாசமும் அவன் கொடிய நண்பன் எம்டன் சினேகிதமுமிருக்குமோ, அன்று வரை உலகம் இவனை தூற்றத்தான் போகிறது. கர்மம் இவன் தலைவிதி போலும்.

முதல் தோழி:—ஹா தேவி ! அந்த வேசை கனகமணி யார்?

இரண்டாவது தோழி:—ராமகிருஷ்ணனை பாழ் படுத்தும் வேசை.

சரோஜனி:—மூடமே! என்ன பிதற்றுகிறாய்! மூடு வாயை. கனகமணி பெரிய கௌரவமுள்ள குடும்பத்திலுள்ள பெண் ... ஆனால் கர்மம் ... ஹா ... தலையெழுத்து ; என் செய்வது ? இவள் கணவன் உயிரை வெறுத்து தற்கொலை செய்துகொண்டாராம். இவள் மதங்கொண்டு பர புருஷன் ராமகிருஷ்ணனுடன் வந்து விட்டாள்.

முதல் தோழி:—தேவி! அம்மணி, தற்கொலையாவது ? இல்லை. இல்லை. இந்தப் பாதகியே விஷமிட்டு புருஷனைக் கொன்று விட்டாளாம்.

இரண்டாந் தோழி:—பாருங்கள். இந்த மண்டுவின் புத்தியை.

அழகுள்ள, குணமுள்ள, சீதாதேவி புண்ணியவதி வீட்டிலிருக்க, இந்த வேசையைக் கட்டி அழுகிறதைப்பார்.

மூன்றாந் தோழி:—ஆம். ஆம். சீ! என்ன உலகம். பாழ் உலகம் இது. பாழ் உலகத்தில் அநேக புருஷர்கள் இப்படித்தானிருக்கின்றார்கள். வீட்டில் வெண்ணெயை வைத்துவிட்டு நெய்க்கு ஊரெல்லாம் அலைவதுபோல் அழகுள்ள தெய்வலோக ரம்பையைப்போல் ஸ்திரீ வீட்டிலிருந்தாலும், காறி உமிழக்கூடிய, கோரமுள்ள, வியாதியுள்ள காசுக்கு மானத்தை விற்பவள், தளுக்கு, பிலுக்கு, டிமிக்கி கொடுத்து சைனா பஜாரில் கிடைக்கும் . . . அது என்னடி . . . டாய்லட்டா, சீமை சுண்ணம்பை மூஞ்சி யெல்லாம் பூசிக்கொண்டு மானத்தை விற்கும் வேசைகள் . ., பெண்ணுலகத்திற்கே அபக்யாதி உண்டு பண்ணுகிறவர்கள் தான்.—இவர்களுக்குப் பிடிக்கும்.

“ முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற்
கூட்டி முக மினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளை
யோலை விளக்கியிட்டுப்
பட்டப்பகலில் வெளிமயக்கே
செய்யும் பாவையர் மே
லிட்டத்தை நீ தவிர்ப்பாய்
இறைவா கச்சியே கம்பனே”

“ மண்காட்டி பொன்காட்டி மாய
விருள் காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப்
போற்றாமல்

கண்காட்டும் வேசியர் தங்கண்
வலையிற்சிக்கி மிக
அங்காடி நாய்போலலைந்தனையே நெஞ்சமே.

சரோஜ:—என்னடி! சரமாரியாய்ப் பேசுகிருய். இன்னும் கொஞ்சம் போனுல் லெக்சர் கொடுப்பாய் போலிருக்கிறதே. சரி இருக்கட்டும். மாமா என்ன செய்வார்? எத்தனை தரம் மார்வாடி அண்டிமாண்டுகளுக் கெல்லாம் பணம் கொடுத்தார். ரூ. 1,000 வாங்கிக் கொண்டு ரூ. 5,000-க்கு எழுதிக் கொடுத்த நோட் ஒன்ரு, இரண்டா? கணக்கில்லை. அந்தப் படுபாவி எம்டன் தூண்டுதலுக்குக் கணக்குண்டா. ஒருகொலைக் கேசில்கூட தண்டனையாவதை நார்ட்டனை வரவழைத்துத் தப்ப வைத்தார். அதில் ரூ. 50,000 செலவு. (ஒரு வேலைக்காரி வருகிருள்)

வேலைக்காரி:—(கும்பிட்டுக் கொண்டு) தேவி .. அம்மா கூப்பிடுகின்ருர்கள்.

சரோஜனி:—எந்த எம்மா ?

வேலை:—பத்மாவதி அம்மா.

சரோ:—சரி, நீபோ-இதோ வந்து கொண்டிருக்கிறேன். (தோழிகள் போகிருர்கள்) (தனக்குள்ளே) இந்த உலகத்தில் என்னை அன்புடனும், வாஞ்சையுடனும் பெருமையுடனும் நோக்குகிறவர்கள் யாராவதிருந்தால் பாவம். இந்த பத்மாவதி தான். மாமாவையும் சும்மா சொல்லக்கூடாது. தன் பையனைவிட, அதிக பாசமாய் பார்க்கிருர். (பாடுகிருள்)

"பிறக்கும்பொழுது கொடு வந்ததில்லைப் பிறந்து மண் மே, லிறக்கும் பொழுது கொடு போவதில்லை, யிடை நடுவிற் குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா, திறக்குங்குலாமருக்கென் சொல்லுவேன் கச்சியே கம்பனே."

(சரோஜனி போவதும் பத்மாவதி வருவதும்)

"நான் படும் பாடு சிவனே உலகர்
நவிலும் பஞ்சு
தான் படுமோ சொல்லத்தான் படுமோ
எண்ணத்தான் படுமோ
கான் படுகண்ணியின் மான் படுமாறு
கலங்கி நின்றேன்
என் படு கின்றனை என்றிரங்காய் என்னில்
என்செய்வனே."

பத்மாவதி:—(தனக்குள்) ஹே! அனாத ரக்ஷகா. சகலவல்லபா! நான் படும் பாட்டை என்னென்று சொல்வேன். யாரிடம் முறையிடுவேன். உனக்கேன் இந்த இளம் பிராயத்தில் என்ன பாவம் செய்தேனே?

எம்பெருமானே! எனக்காதர வளிக்காயோ? காத லென்ற கொடிய விஷத்தை உட் கொண்டிருக்கிறேன. ஹா என்னைக் கொல்கிறது; வாட்டுகிறது. கணவரோ! கவனிப்பதில்லை. ஐயனே உன்னுல் ஆகாதது ஒன்றுமில்லை. நீயே கதி. அவர் எப்படி யிருந்தாலும், அவரே எனக்குக் கதி. என் கடவுள். அவர்மனம் கோணுமல் நடப்பதே பதிவிரதா தர்மம். பாரத நாட்டில் சந்திரமதி, சாவித்திரி, நளாயினி, தமயந்தி முதலியவர்கள் நாமங்கள் இன்று மிருப்பது, பதிவிரதா தர்மத்தைக் கடைப்பிடித்து நடந்ததால் அல்லவா? பாரத தேவியே எனக்குப்போதுமான தைரியத்தையும், சாந்தத்தையும் அளிப்பாயாக (தனக்குள்ளே) பத்மாவதி என் பிதற்றுகிருய். வா கோயிலுக்கு போவோம்.

தெய்வந் தொழாஅள் கொழு நற்றெழு
தெழுவாள்
பெய் யெனப் பெய்யுமழை.

(பத்மாவதி போவதும் கனகமணி வருவதும்)

கனகமணி:—"என்ன இது! இராம கிருஷ்ணனை ஆகவிட்டாமல் செய்வதற்குப் போடும் கூச்சல் அல்லவா இது! என்னடா பக்தி! ஸ்திரீ தர்மமாம்! நன்று நன்று. இராம கிருஷ்ணனை ஆகாவிட்டாமல் செய்துவிட்டால், அவரின் சகல சம்பத்தும் எனக்குக் கிடையாமல் போய் விடுமாம். நானு! இல்லை இல்லை. இந்த உலகத்தில் என்றுவரை உயிர் வைத்திருக்கிறேனே; இந்தக் காற்றை நான் சுவாசிக்கும் வரை; நீ பத்மாவதியாவது செய்வதாவது. ஒரு நாளும் முடியாது. ஏ மூட ஸ்திரீயே! பயப்படு பயப்படு. எவள் ஒருவள் தர்மத்தை நாசம் செய்தாளோ, தன் பெயரை உலகத்தார் இகழும்படி செய்தாளோ, எவள் அக்னி சாக்ஷியாக மணந்த கணவனைவிஷத்தால் விண்ணுலகம் அனுப்பினளோ... அவள் எதிரில் நீ நிற்க முடியுமா! யோசி, யோசி. உயிரை வைத்துக் கொண்டு வாழ முடியுமா? கடுகளவுள்ள விஷம் உன்னையும் பரலோகம் சேர்த்து விடாதா? என்னை என்ன நினைத்தாய் (பல்லைக் கடிக்கிருள்) விஷத்தைப்போட்டு விடுவேன். உலகத்தைவிட்டு விரட்டி விடுவேன். யாரென்று நினைத்தாய்...ஹா ஹா...என்னை கரு நாகமென நினை.'!

(தொடரும்)

# தமிழ்மொழி வளர்ச்சி.*

ஸ்ரீமாந் திருகூட சுந்தரம் பிள்ளை M.A, B.L., எழுதியது.

## தற்கால நிலைமை.

தற்காலத்திய தமிழர்க்குத் தங்கள் தாய்ப் பாஷையிடமுள்ள அன்பின் தன்மையென்ன? அவர்கள் அன்பு தமிழின் பண்டைச் சிறப்பைப் பலபடப் பகர்வதிலும்,அவர்கள் கருதும் தமிழின் தூய்மையைத் தவருது காப்பதிலுமே யடங்கும். அவர்களின் தாய்மொழிப் பற்று முன்னோர் முயற்சியால் விலையிலா நிதி கொண்டனம் என்று மகிழ்ந்து அதைத் தான் அனுபவியாமலும் அதோடு வேறு நிதியம் புதிதாகச் சேர்க்க முயலாமலும், தன்குடும்பத்திலுள்ளாரில் யாரேனும் சிறிது புதுப்பொருள் சேர்க்கவந்தால் அதைத் தடுத்தும் வாழும் ஒருவனுடைய மூடபக்தியை ஒக்கும். இக்காலத்திலுள்ள தமிழ் மக்களில் புலமைவாய்ந்த பலர் தங்கள் தினசரி வாழ்க்கையில் தமிழ் மொழியை உபயோகிப்பதில்லை. அவர்கள் அநுதினமும் ஆண்டுவருவது அநேகமாக ஆங்கிலமொழியேயாகும். அவர்கள் சாதாரணமாய்த் தங்கள் ஜாதியாரோடு பேசும்பொழுதும் உபயோகிக்கும் பதங்களும், ஒருவர்க்கொருவர் கடிதப்போக்குவரத்து செய்து கொள்வதும், தமிழில் எழுதினும் கையெழுத்து இடுவதும், கடிதங்களில் தலைப்பில் அச்சிடும் விலாசம் முதலிய வைகளும், வியாபார, உத்யோக ஸ்தலங்களின் வெளியே தொங்கவிடும் பலகைகளில் வரைவதும், இது போன்ற இன்னும் பல தினசரி வாழ்க்கை நடைமுறைகளிலும் உபயோகிப்பது ஆங்கிலமொழியொன்றே. தமிழ்ப்பிரசங்கம் செய்வதென்றால் அதன் விளம்பர அறிக்கை ஆங்கிலத்திலேயே அச்சிடப்படும்; தமிழ்நூல்கள் இயற்றுவதென்றால் அதன் முகவுரை ஆங்கிலத்திலேயே அமைக்கப்படும். இவ்வாறு எடுத்ததற்கெல்லாம் இங்கிலீஷ் பாஷையை உபயோகித்தாலும் அவர்கள் பிரசங்கமேடைமீது ஏறிவிட்டால், தமிழ்மொழியைப்பற்றிக் கூற சந்தர்ப்பம் கிடைத்துவிட்டால், இடைவிடாது கடல் மடைதிறந்ததுபோல் பலமணிநேரம் தமிழின் பெருமையைப் பேசுவதில் சலிப்படையார். அதுபோலவே தமிழ்மொழியைப்பற்றி எழுத ஆரம்பித்துவிட்டாலும் அவர்கள் வரையும் வான்புகழ் மொழிகள் அளவில் அடங்கா. ஆகவே தற்காலத் தமிழ்ப்புலவர் பலரின் தாய்மொழிப்பற்று தம்பேச்சு அளவிலேயே நிற்கின்றது என்பது தெளிவாகும்.

## தாய்மொழி ஊழியம்.

ஆனல் அன்பின் உண்மை இலக்கணம் அணுவளவும் சுயநலம்பாராது அயலார் நலம் தேடுவதேயாகும். ஆகையால் தாயிடம் ஒருவனுக்கு அன்புள்ளது உண்மையானல் அவன் அவளை எப்பொழுதும் போற்றி அவளுக்கு ஊழியஞ் செய்தல் வேண்டும். வீட்டிற்குள் தாய் என்று கூறி அல்லது தாயின் பெருமையை அயலார்க்கு எடுத்துரைத்து வெளியில் தாயென்றுகூற—அவளுக்கு ஊழியஞ்செய்ய வெட்கும் பேதைக்கு உண்மையில் தாயிடம் அன்பு இருப்பதாக யாரும் கூறுவரோ? ஆகையால் வீணே வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் அமிழ்தினுமினிய தமிழ் என்றும் கடல்வரைப்பின் இதன் பெருமையை யாவரே கணித்தற் பாலார் என்றும் கூறுவதோடு அமையாது நம் அன்னைமொழியை நாம் எப்பொதும் நம் தினசரி வாழ்க்கையில் உபயோகித்து ஊழியஞ்செய்வோமாக.

## தமிழின் "தூய்மை"

இங்ஙனம் எப்பொழுதும் இங்கிலீஷ் மொழியையே உபயோகித்து வந்தாலும் இத்தமிழ்ப் புலவர்கள் ஏனைய பாஷைப் பதங்கள் தமிழ்ப் பாஷையில் கலப்பதையும் சாதாரணமாய்த் தினசரி வாழ்க்கையில் தமிழ் மக்கள் பயிலும் தமிழ்ப் பதங்களைத் தமிழ் நூல்களில் பயில்வதையும் தடுக்க விரும்பிப் பெரு முயற்சிசெய்து வருகின்றனர். இனிமேல் புதிதாக சேரவொட்டாது தடுக்கும் முயற்சியோடு நில்லாது இதுகாறும் சேர்ந்துவிட்ட அயல் பாஷைப் பதங்கள் அதிலும் முக்கியமாக சமஸ்கிருத பாஷைப் பதங்கள் அனைத்தையும் விலக்கிவிடவும் வழி தேடிக் கொண்டிருக்கின்றனர். ஆகையால் அவர்கள் உதாரணமாக மாதம் என்பதற்குப்பதிலாக திங்கள் என்றும், தேதி என்பதற்குப்பதிலாக நாள் என்றுமே கூறுவர். அங்ஙனம் அவர்கள் தமிழ்ப்பாஷையில் வெகு காலமாய் வழங்கப்பட்டு வரும் அன்னிய

---

* சுதேசமித்திரன் வருஷ அனுபந்தத்தில் வெளிவந்த ஒரு அழகிய கட்டுரையின் பிற்பகுதி.

மொழிகளை அகற்றி அவற்றிற்குப் பதிலாக தமிழ்ப் பதங்களை உபயோகிப்பது சில சமயங்களில் விநோதமாகவும் விபரீதமாகவும் தோற்றுகின்றது. சாதாரணமாய் ஜனங்கள் திங்கள் என்னும் பதத்தைக் கிழமையைக்குறிப்பதற்கும் தாள் என்னும் பதத்தை எழுதும் காகிதத்தைக் குறிப்பதற்கும் உபயோகித்து வருவது யாவரும் அறிந்தவிஷயம். அங்ஙனமிருக்க இத் "தூய தமிழ்"ப் புலவர்கள் திங்கள் என்னும் பதத்தை மாதத்தைக் குறிப்பதற்கும் தாள் என்னும் பதத்தை பத்திரிகையைக் குறிப்பதற்கும் உபயோகித்து அதன் பலனாக மாதப் பத்திரிகை என்று சொல்லாமல் "திங்கள் தாள்" என்று சொன்னால், அது ஜனங்களுக்குப்பொருள் விளங்குமோ? அங்ஙனம் கூறுவதால் தமிழின் தூய்மையோ பெருமையோ அதிகரித்துவிடும் என்று யாரேனும் அறைதல் கூடுமோ? இவ்விதம் உபயோகிப்பதில் இன்னொரு விநோதம் "திங்கள் தாள்" என்று உபயோகிப்பின் ஒருவேளை ஒரு சிலராவது கஷ்டப்பட்டாகிலும் பொருள் தெரிந்து கொள்ளக்கூடும்; ஆனால் இத்தூய தமிழாளர் இலக்கணப் புணர்ச்சி விதியின்படியே நடப்பவர்களாதலின் அவர்கள் திங்கள் தாள் என்று கூறாமல் அவ்விரண்டையுஞ்சேர்த்து "திங்கட்டாள்" என்றே கூறுவர். திடீரென்று இதைக் கேட்டவர் எத்தனைபேர் இதன்பொருளை அறிந்துகொள்ளக்கூடும் என்பதை நேயர்கள் கவனிப்பாராக.

இத் "தூயதமிழ்" செய்துவரும் விநோதங்கள் பல. இரண்டொன்று மட்டும கூறி நிறுத்துகின்றேன். விவாக முகூர்த்தப் பத்திரிகை என்றும் கூறமாட்டார். திருமண அழைப்பு என்றே கூறுவர். அதனால் பாதகமில்லை; பொருளும் எளிதில் விளங்குகின்றது; சொற்றொடர் அழகாயும் அமைந்திருகின்றது. ஆனால் அவ்வழைப்பில் எல்லாப் பதங்களும் தமிழில் இருக்கும்பொழுது உதாரணமாக மணமகன் பெயர்மட்டும் ஏன் "எம். சுப்பிரமணிய பிள்ளை பீ. ஏ., என்று பெயருக்கு முன்னும் பின்னும் ஆங்கிலப்பதங்கள் காணப்படுகின்றன, என்பது எனக்கு விளங்குவதில்லை. அந்த ஆங்கில எழுத்துக்களையும் ஏன் தமிழில் எழுதலாகாது? சமஸ்கிருதப்பதங்களை நீக்குபவர் ஏன் ஆங்கிலப் பதங்களை நீக்க முயல்வதில்லை என்பதை அறிய விரும்புகிறேன். தூய தமிழின் விநோதத்திலும் விநோதம் எதுவெனின் தமிழ் மக்கள் தங்களுக்குத் தங்கள் தாய்தந்தையரா லிடப்பட்டு வெகு வருஷங்களாக வழங்கிவரும் பெயர்களையும் மாற்றித் தனித் தமிழ்ச் சொற்களால் ஆக்க முற்படுவதே யாகும். உதாரணங்கள் கல்யாணசுந்தரம் என்பது மணவழகு என்று மாறும். ஆதிநாதன் முதற்றலைவனாவான். பரிதிமால் என்பது சூரிய நாராயணனுக்கு அமைக்கப்படும் புதுப்பெயர்.

## வழக்குச்சொற்கள் வெறுப்பு.

இவ்வாறு அன்னிய மொழிகளை விலக்க விரும்புவது போலவே தமிழ்மொழிகளை இலக்கியச் சொற்கள் என்றும் வழக்குச் சொற்கள் என்றும் வேறு படுத்தி வழக்குச் சொற்களை நூல்களில் உபயோகிப்பதைத் தடுக்கவும் விரும்புகின்றனர். சாதாரண ஜனங்கள் உபயோகிக்கும் தமிழ்ப் பதங்களை நீக்கிவிட்டு அகராதியில் பழய இலக்கிய நூல்களில் காணப்படும் பதங்களை மட்டுமே உபயோகிக்க வேண்டுமென்று கூறுவதால் ஜனங்களின் அறிவு வளர்ச்சியைத் தடுப்பதாகும் என்பதை அவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை.

## தூய தமிழ் முயற்சி தவறு.

இவ்வாறு அயல் மொழிகள் கலவாமலும் வழக்கச்சொற்கள் விரவாமலும் தமிழ்ப் பாஷையின் தூய்மையைக் காப்பாற்றுவதாகக் கூறும் இவ்விபரீத முயற்சிகள் (1) வீணானவை (2) அனாவசிய மானவை (3) கேடு விளைப்பவை என்பது என் அபிப்பிராயம். எந்தக் காலத்திலும் ஒரு ஜன சமூகம் இவ்வுலகில் பிற ஜன சமூகங்களை விட்டுப் பிரிந்து தனித்து வாழ்தல் என்பது சற்றும் கூடாத காரியம். ஒருவேளை முன்னாளில் முடியக் கூடியதா யிருந்தாலும் இந்நாளில் பௌதீக ஞான வளர்ச்சியின் பயனாய் கப்பல், தந்தி, டெலிபோன் முதலிய சாதனங்கள் மலிந்து வியாபாரம் கல்வி, அரசியல் முதலிய பல துறைகளிலும் உலகில் உள்ள ஜன சமூகங்கள் எல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு வருவதால் தமிழ் மக்கள்மட்டும் தனியாக வாழ்தல் என்பது பகற்கனவே யாகும். பல ஜாதியாரோடு பழகும்பொழுது அவர்கள் மொழிகளில் சில நம் பாஷையில் புகுவதும், நம் மொழிகளில் சில அவர்கள் பாஷையில் புகுவதும் சகஜமே. அங்ஙனம் புகுவதைத் தடுக்க முயல்வது வெள்ளத்தைப் புல்லொன்று விலக்கப் புகுவதையொக்கும். தவிர, வேறு ஜாதியாரோடு பழகும் பொழுது, அவர்கள் கண்ட உண்மைகளைக் கூறக் கேட்கும்பொழுது, அவ்வுண்மை

களை அர்த்தம் நிறைந்து அழகுள்ள தனித் தமிழ்ப் பதங்களில் அமைப்பது சில சமயம் சிரமமாயிருக்கும். அக்காலத்தில் அவ்வுண்மைகளுக்கு அவர்கள் அமைத்துள்ள மொழிகளையே நாமும் உபயோகிக்க வேண்டிவரும். அப்படி உபயோகிப்பது அத்யாவசியமாகும்; அதனால் தமிழ்ப் பாஷைக்கு எவ் விதத்திலும் இழுக்கு ஏற்பட்டு விடாது.

மேலும் ஒரு பாஷையின் அஸ்திவாரம் அதன் இலக்கண அனுஷ்டானத்திலேயே அமைந்திருக்கின்றது. அதாவது பாஷைகளின் வேறுபாடு அவைகளின் மொழி வேறு பாட்டிலன்றி, அவைகளின் இலக்கண வேறுபாட்டிலேயே காணப்படும். ஆகையால் அன்னிய பாஷை மொழிகள் கலந்தால் அதனால் பாஷையின் இலக்கணம் அழிந்து விடாது; மாறிவிடவும் செய்யாது; தினந்தோறும் புதிது புதிதாக தீனி சாப்பிட்டாலும், அப்புது உணவுகள் யாக்கையின் அமைப்பை ஒரு சிறிதும் மாற்றாமல் அதன் வளர்ச்சிக்கும் வன்மைக்கும் மட்டுமே பயன் படுதல் போல் அன்னிய பதங்கள் நமது தமிழ்ப் பாஷையின் இலக்கணத்தை மாற்றாது, அதன் மொழிச் செல்வத்தையும் அதன் மூலம் பொருட் பெருக்கத்தையுமே அதிகரிக்கச் செய்யும். அது வேண்டற்பாலதாகியதோர் விஷயமே அன்றி வெறுத்து விலக்கற் பாலதாகிய தோர் விஷயமன்று என்பதை தமிழ்ச் சகோதரர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

இவ்வுண்மையை அறியாது இங்கிலீஷ், சமஸ்கிருதம், ஹிந்தி முதலிய பல பாஷைகளில் உள்ள மொழிகள் நாளடைவில் வந்து சேர்வதைத் தடுப்பது தமிழ் மொழிக்குச் செய்யும் பெருந் துரோகமாகும். முன் கூறியபடி மொழி யென்பது ஒரு உயிருள்ள வஸ்து போன்றதாகும். உயிருள்ள ஒரு மரத்தை ஒருவன் தன் சுருங்கிய நிலமொன்றில் நட்டு வளர்த்து வரும்பொழுது, அம்மரம் தான் இடும் எருவையும் தன்னிலத்திலுள்ள பூசாரத்தையும் மட்டுமே கிரகித்து வளரவேண்டுமென்றும் பிறர் நிலத்தின் பூசாரத்தைக் கிரகித்தல் கூடாது என்றும் கருதி தன்னிலத்திற்கு வெளியே போகும் வேர்களை யெல்லாம் வெட்டி விடுவானே யானால், அவனை அறிவுள்ளவன் என்று யாரேனும் கூற முடியுமோ? அவன் போற்றி வளர்த்துவரும் மரம் வளராது இறந்துபடும் என்பது உண்மையே யன்றோ? அதுபோல் தமிழ் பாஷையும் பிற பாஷைப் பதங்கள் கலக்கவொட்டாமல் தடுக்கப் பட்டுவிட்டால் நாளடைவில் பலம் குன்றி பழைய காலத்திருந்த சமஸ்கிருதம் லத்தீன், கிரீக் முதலிய பாஷைகள்போல் உலக வழக்கழிந் தொழிந்துபோகும் என்பது நிச்சயம். காவிரி நதியில் கன்னடதேசத்து மழை நீரைக் கொண்டுவரும் சிறு நதிகள் வந்துசேருகின்றன; அதனால் காவிரி ஜலத்தின் தூய்மை கன்னட ஜலத்தால் கெட்டுவிட்டது என்று தமிழ்த் தஞ்சை வாசிகள் கூறி காவிரி ஜலத்தைத் தொடாமலோ அல்லது கன்னட நதிகள் கலவாமல் இருக்கவேண்டும் என்று நினைத்தோ இருந்தால் கேடு யாருக்கு? எந்த தேசத்து மழை ஜலமாயினும் காவிரியில் வரும் நீர் எல்லாம் காவிரியின் ஜலமேயன்றோ? அது போல எந்த பாஷை மொழியும் தமிழ் மொழியில் வந்துசேர்ந்து விட்டால் அம் மொழிகள் எல்லாம் அதன் பின் தமிழ் மொழிகளே யாகுமல்லவோ?

## பண்டைய வழக்கம்.

இவ்வுண்மையை யறிந்தே இதற்குமுன் திகழ்ந்த பல தமிழ்ப் புலவர்கள் எல்லாரும் வேற்று பாஷைப்பதங்களை உபயோகிப்பதில் பின்னடையவுமில்லை, நாணங்கொள்ளவுமில்லை. அதனால் தங்கள் தமிழ் நடைக்கு அழுக்கு ஏற்பட்டு அழகு குறைந்துவிடுமென்று கருதவுமில்லை. வள்ளுவர் திருக்குறள், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், தீந் தேனாகிய திருவாசகம், தெய்வீகத் தேவாரம் இந்நூல்களே தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்களில் இணையற்ற ஏற்றமுடையவை என்பது யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். தலைசிறந்த அந்நூல்களில் தமிழ்ச் சொற்கள் தவிர வேறு அன்னிய பாஷைப் பதங்கள் அவைகளில் காணக் கிடையா என்று யாரேனும் கூற முடியுமோ? கம்பர் கவிகளில் எத்தனை சமஸ்கிருத மொழிகள் காணப்படுகின்றன; அப்படியிருந்தும் அவைகளில் அமைந்துள்ள உண்மைக் கவிச்சுவை வேறு எச்செய்யுள்களில் காணலாம்? தூய தமிழ், தூய தமிழ் என்று தொண்டை கிழியச் சொல்லித் திரிபவர் அத்தகைய கவிரசம் கனியத்தக்க தமிழ்ப் பாக்கள் ஆக்கவல்லரோ?

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபாதலால் பண்டைக் காலத்தில் இருந்த பவணந்தி முனிவர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் அன்னிய மொழிகளைத் தங்கள் அன்னை மொழியில் சேர்த்துக் கொள்

வதில் தயங்கவில்லை. அவர்கள் கூறும் "திசைச்சொல்" அவனியின் நான்கு திசைகளி னின்றும் வந்து சேர்ந்த அயல் மொழிகள் அல்லவோ? அங்ஙனம் ஆன்றோர் வழக்கம் அமைந்திருக்க நாம் மட்டும் ஏன் அன்னிய மொழிகளை அனுவசியமாய்ப் புறக் கணிக்க வேண்டும்?

நான் இவ்விதம் கூறுவதால் நமது மொழியோடு முன்பின் யோசியாமல் அனுவசியமாய் அநேக அன்னிய பதங்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கூறுவதாய்க் கருத வேண்டாம். சில ஜைனர்களும் சில வைஷ்ணவ உரையாசிரியர்களும் உபயோகித்த மணிப்பிரவாள நடையை நான் ஒரு சிறிதும் ஆதரிக்கவில்லை. நான் வேண்டிக்கொள்வ தெல்லாம் இதற்குமுன் வந்துசேர்ந்து இலக்கியத்திலும் உலக வழக்கிலும் பயிலப்பட்டுவரும் அன்னிய மொழிகளை விலக்க வேண்டாம்; பல ஜன சமூகங்களோடு பழகும் பொழுது பல பாஷைகளிலிருந்து வந்துசேரும் மொழிகளை வேண்டாமென்று தள்ளிவிட வேண்டாம். வேற்று நாட்டார் உரைக்கும் புதுக் கருத்துகள் புது உண்மைகள் முதலியவைகளை நமது இலக்கியங்களில் அமைக்க நேரும் பொழுது அயல் நாட்டு மொழிகளிலிருந்து சில பதங்களை எடுத்தாளத் தயங்க வேண்டாம் என்பதே யாகும்.

இவ்விதம் அயல்மொழிக் கலப்பை அறவே நீக்காத காரணத்தினால்தான் ஆங்கில பாஷை உலகிலுள்ள பாஷைகளில் அனைத்திலும் மொழிப் பெருக்கமும் இலக்கிய மேன்மையும் உடையதாய் இலங்குகின்றது. "எந்தக் கருத்தையும் எழில் மொழிகளில் இசைக்கத்தக்க வன்மை இங்கிலீஷ் பாஷைக்கு இருப்பது போல் வேறெந்த பாஷைக்கும் இல்லை" என்று கிரிம் என்னும் ஜெர்மன் பாஷா நிபுணர் கூறுகின்றார். அதற்குக் காரணம் ஆங்கில மொழியைப்போல் வேறெந்த மொழியிலும் அன்னிய பாஷைக் கலப்பு அதிகமாய்க் காணப்படமாட்டாது என்று மாக்ஸ் முல்லர் என்னும் ஆசிரியர் மொழிகின்றார். இவர்கள் கூறும் விஷயங்களில் காணக்கிடக்கும் உண்மைகளை ஏன் நாமும் அறிந்துகொள்ளக்கூடாது?

## இலக்கிய வளர்ச்சி.

ஒரு மொழியின் பெருமை அதன் சொற்சுவை பொருட்சுவை இரண்டிலுமே அமைந்துளது என்று கூறினேன். ஆகையால் ஒரு மொழியை வளர்க்கவேண்டுமானால் அதன் மொழி வளத்தைப் பெருக்குவதோடு அதன் இலக்கியச் செல்வத்தையும் செழிக்கச்செய்தல் அவசியமாகும். அங்ஙனம் செய்ய முயல ஆரம்பிக்கையில் நாம் அவசியம் அறிந்து கொள்ளவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது இலக்கியச் சுவையின் உண்மை லட்சணம் யாது என்று அறிவதே. அதை நன்கு அறிந்துகொண்டால் தான் நம் முன்னோர் வைத்துப்போன நூல்களில் எவை உண்மையான இலக்கிய இனத்தைச் சேர்ந்தவை என்று அறிந்து அவைகளை மட்டும் / காப்பாற்றவும் ஏனையவற்றை விலக்கிவிடவும் புதிதாக இலக்கியங்கள் இயற்ற ஆரம்பிக்கும்பொழுது அவை உண்மையான இலக்கியமாய் இருக்கவேண்டும் என்று கண்ணுங் கருத்துமாய்ச் செய்யவும், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை மொழி பெயர்க்கும் பொழுதும் அவைகளின் தலை சிறந்தவைகளையே அறிந்து எடுத்துக் கொள்ளவும் இயலும். ஆகையால் தமிழ்ப் புலவர்கள் முதற்கண் செய்யவேண்டிய வேலை "இலக்கியச் சுவையின் இலட்சணத்"தை நிர்ணயிப்பதே. அங்ஙனம் நிர்ணயிக்க எழும்பொழுது அதற்கு ஆதாரமாக நமது தமிழ் மொழியில் உள்ள இலக்கணங்களை மட்டும் கொள்ளுதல் தவறு. இலக்கிய இலட்சணத்தை அறிவதற்கு இலக்கண நூல்களைவிட இலக்கிய நூல்களே பெரிதும் பயன்தரக் கூடியவை. தவிர உண்மை இலக்கியச் சுவை ஒரு பொழுதும் இலக்கண வரம்பிற்குள் கட்டுப்பட்டுக் காணப்படமாட்டாது. அநேகமாக எல்லா பாஷைகளிலும் கவியரசர்கள் என்று புகழ்ந்து போற்றப் படுவர்கள் எல்லாரும், அவர்கள் காவ்யங்களில் இலக்கண வரம்பை மீறி நடந்தவர்களே யாவர்.

மேலும் இலக்கியச்சுவை ஒரு பாஷைக்கென்று தனியாக ஏற்பட்டதன்று. அல்லது அது பாஷைக்கு பாஷை மாறிமாறித் தோன்றும் தன்மை வாய்ந்ததன்று. மனிதனுடைய சிந்தனை உலகம் எங்கும் ஒரே தன்மையுடையதாய் இருப்பதால் இலக்கியச் சுவை என்பதும் எல்லா பாஷைகளுக்கும் பொதுவானதே யாகும். ஆகையால் இலக்கியச் சுவையின் பண்பை அறிய விரும்புவோர் ஏனைய மொழிகளில் இலக்கியங்களையும் அம்மொழியாளர் ஆராய்ந்து கூறும் உண்மைகளையும் கவனித்தல் வேண்டும். இதுவரை இருந்ததுபோலில்லாமல் தமிழ்ப் புலவர்கள் ஏனைய மொழிச் செல்வக் களஞ்சியத்தில் புகுந்து புதுப்பொருள் தேடுவாராக. நமது நாட்டில் சமஸ்கிருதமும் தமிழும் பல

ஆயிரக் கணக்கான வருஷங்கள் ஒருங்கு வாழ்ந்து வந்தும் சமஸ்கிருத நூல்களில் வெகு சிலவே தமிழ் மொழியில் காணக்கிடக்கின்றன ; அவையும் அநேகமாய் இலக்கியங்கள் அல்ல ; மதம் வைத்தியம் போன்ற அறிவு நூல்களேயாகும். காளிதாஸருடைய சாகுந்தலம் என்னும் தலை சிறந்த சமஸ்கிருத நாடகம் தமிழர்களாயுள்ளவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? வெகு வெகு சிலர்க்கேயாம். ஆனால் ஆங்கிலேயர் நமது நாட்டுக்கு வந்து சில நூற்றாண்டுகளேயாயினும் அவர்கள் சில சமஸ்கிருத நூல்கள், தமிழ் இலக்கியங்கள், கன்னட காவ்யங்கள் முதலியவைகளைத் தங்கள் பாஷைகளில் மொழி பெயர்த்து அனுபவித்து வருகின்றனர். அவர்கள் நம்மைப் போல் கிணற்றுத் தவளையாய் இருப்பதிலர். எப்படித் திரைகடலோடியும் திரவியந் தேடுகின்றனரோ, அப்படியே தேசங்கள் தோறும் சென்று அங்குள்ள இலக்கிய பொக்கிஷத்தினின்றும் எழில் மணிகளைப் பொறுக்கித் தங்கள் பாஷை இலக்கியங்களோடு சேர்த்துக் கொள்ளுகின்றனர். ஆவ்பெரி பிரபு என்னும் ஆங்கில ஆசிரியர் "உலகிலுள்ள இலக்கியங்களில் தலை சிறந்த நூறு" என்று குறிப்பிட்டு ஒரு ஜாபிதா தயார் செய்திருக்கின்றனர் ; அதில் உலகில் உள்ள சகல பாஷை இலக்கியங்களும் காணப்படும். "ஏனைய மொழிகளிலுள்ள இலக்கியங்களை வாசித்தறிய முடியாவிட்டாலும் அவைகளின் பெயர்களையாவது அறிந்திருக்க வேண்டும் ; அதுவே ஒரு பெருங் கார்யமாகும். அங்ஙனம் பெயர்மட்டுமாவது அறிய வேண்டிய நூல்களில் வால்மீகி ராமாயணம், வியாசர் பாரதம் முக்கியமானவை" என்று பிரஞ்சு, இலக்கியச் சுவை அறிஞர்களில் கீர்த்தி பெற்றவராகிய ஸெயின்ட் பூவ் என்பவர் கூறுவதை நேயர்கள் கவனிக்க வேண்டுகிறேன். நமது தமிழ்க் குறள் அன்னிய பாஷைகள் பலவற்றில் மொழி பெயர்க்கப் பட்டிருப்பதை யாவரும் அறிவர் ; ஆனால் அதுபோல் நாமும் பிறபாஷை நூல்களை மொழிபெயர்த்து உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்று கருதுவதில்லை.


## புது நூல்கள் இயற்றல்.

இறவாத புகழுடைய புது நூல்களும் தமிழ் மொழியில் இயற்றவேண்டும். ஆனால் அந்நூல்களை இயற்றும் பொழுது பழய இலக்கண விதிகளை யொட்டியே செய்தல் வேண்டுமென்று கருதற்க. இலக்கியங்கள் ஜனங்களுடைய வாழ்வின் சாராம்சமான பிரதிபிம்பங்களே யாதலால், தற்கால வாழ்வின் தன்மைக்குத் தக்கவாறே புதிய இலக்கியங்கள் இயற்றுதல் வேண்டும். இலக்கியச் சுவை குன்றாமலிருக்கமட்டும் பார்த்துக்கொள்ள வேண்டுமே தவிர, அது எந்த நடையில், எந்தப் பாவினத்தில், எந்த உருவில் அமைக்க வேண்டுமோ அவற்றைப் பழய நூல்களின் வரம்பிற்குள் கட்டுப்படுத்தி விடவேண்டாம். "எளிய பதங்கள், எளிய நடை எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சந்தம், இவற்றினை யுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான் என்று சுப்ரமண்ய பாரதியார் கூறுவதை மறக்கலாகாது.

ஆகவே சொற்சுவை பொருட்சுவை பொருந்திய புது நூல்கள் செய்வதில் சொற்சுவையின் இலக்கணம் தூய்மை என்றும், பொருட்சுவையின் இலக்கணம் பழய இலக்கண இலக்கிய வழியில் ஒழுகல் என்றும் பொருள் செய்து இடர்ப் படலாகாது. மொழியின் அழகு அதன் "தூய்மை" யிலும் எளிதில் பொருள் விளங்கா இலக்கியச் சொற்களிலும் இல்லை. எளிய நடையும் விஷயத்திற்கேற்ற மொழிகளுமே சொல்லழகின் அஸ்திவாரமாகும். தற்காலத்தில் தமிழ்மொழியில் ஆக்கப்பட்டுள்ள நூல்களில் அழகு வாயந்தவை உரை நடையில் ஆறுமுக நாவலர், வேதநாயகம் பிள்ளை, வ. வெ. ஸு. அய்யர் போன்றவர்கள் நூல்களையும், கவி நடையில் பாரதியார் பாடல்களையும் உதாரணங்களாக உரைப்பேன். சென்ற ஐம்பது வருஷங்கட்கு இடையில் எத்தனையோ செய்யுட்கள் செய்யப்பட்டிருக்கின்றன ; அவைகள் எல்லாம் அன்னிய மொழிகளையும் வழக்குச் சொற்களையும் விலக்கி இலக்கண வரம்பு மீறாமல் ஆக்கப்பட்டவையே யாகும். பாரதியார் பாடல்களோ இலக்கண வரம்பிற்குட்படா ; பல பாஷை மொழிகளும் வழக்குச் சொற்களும் மலிந்து காணப்படும். ஆனால் அவர் பாடல்களில் சொட்டும் கவிரசம் ஏனையோர் செய்யுட்களில் சிறிதேனும் உண்டோ? பாரதியார் செய்த பாக்கள் மரத்திற் பழுத்த மல்கோவா மாங்கனியை ஒக்கும்.

ஏனையோர் காரிகை கற்றுச் செய்த கவிகள் மரத்தால் செய்த மாம்பழமே யாகும். ஆகையால் தமிழ்ப் புலவர்கள் முக்கியமாகக் கருதக் கடமைப் பட்டது மொழித் தூய்மை யன்று ; கவிச் சுவையே யாகும்.

# ஸ்ரீ. கு. கிருஷ்ணசாமி பிள்ளை.



இவர் தஞ்சாவூரில் 1867-ல் பிறந்தவர். 1884-ல் தென்னாப் பிரிக்காவிற்குச் சென்றார். 1887-ல் டிரான்ஸ்வாலில் சில வருஷங்கள் இருந்தார். 1903-ம் வருஷத்தில் கிரீன்வுட் நந்தவனத்தில் ஸ்ரீரங்கநாதர் கோயிலையும் தேசீய பாடசாலையையும் ஸ்தாபித்து, அப்பாடசாலையில் ஆங்கிலத்தையும் தமிழையும் போதித்து, இவ் வழியில் 19-வருஷங்கள் தென்னாப்பிரிக்க இந்தியருக்காகப் பாடுபட்டார். மகாத்மா நடத்திய சாத்வீகப் போரிலும், 3-பவுன் தலைவரி விஷயமாகவும் முன்னணியில் நின்று போராடியவர்களில் இவரும் ஒருவர். 1917-லிருந்து தர்பன் வைத்திய நாதேச்வரர் கோயிலின் டிரஸ்டியாக இருந்து வருவதோடு அதைப் புதுப்பிப்பதற்காகவும் இடைவிடாது உழைத்து வருகிறார். 1926-முதல் சிசௌலேக் வைதீக சன்மார்க்க சபையின் பாடசாலை நிர்வாகியாகவுமிருந்து வருகிறார். நேட்டால் இந்திய காங்கிரசின் நிர்வாகிகளில் முக்கியமானவர். அம்தேனில் சொந்த வர்த்தகம் நடத்திக்கொண்டு, கிரீன் உட் பார்க்கில் வசித்து வருகிறார். இவர், தாய் நாட்டை தரிசிக்க வேண்டுமென்ற விருப்பத்தால் இந்தியாவிற்கு வந்திருக்கிறார். சென்னையில் டாக்டர். பி. வரதராஜுலு நாயுடு அவர்களின் விருந்தினராகச் சில நாள் இருந்தபிறகு வடநாட்டில் காசி முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கிறார்.

# சுதேசத் துணியும் விதேசத் துணியும்.

(ஆசிரியர் மு. மாணிக்க நாயகரவர்கள், புதுவை.)

---

தாயை மறந்தொருவன்—பிறர்தந்
தாயினைக் காப்பது போல்
தூய கதர் நீக்கிப்—பிறர்தம்
துணியைக கட்டுவதா? (1)

கத்த ரழுத்த மென்றும்—அதிக
காசுக்கு விற்ப தென்றும்
நித்தந் தைப்பதற்கே—கஷ்டமே
நேருகிற தென்பர். (2)

வீட்டுத் தமிழ்க் கல்வி—நீக்கி
வேணுஞ் செலவிற் பிறர்
நாட்டி லுறுங்கல்வி—கற்கவே
நாளும் விழைவது போல். (3)

தேவர்க் குமரிதாம்—முக்கனித்
தேனைக் கசப்பென்று
மேவும் பிற நாட்டுக்—கனிகள்
மேன்மையா மென்பது போல். (4)

ஆதி நவ மணிகள்—ஒளிரும்
ஆன்ற திருநாட்டில்
ஓதும் புதுப் போலி—நகைகள்
ஒன்ற நினைப்பது போல். (5)

அங்கியர் மென்று கிற்கும்—உள்ளூர்
அமையுங் கதர்த்துணிக்கும்
துன்னிடும் பேதம் பல—தூக்கித்
தொடர்ந்து சாற்றுகிறார். (6)

அன்னியர் நாட்டுத்துகில்—விரைவில்
அழுக்கு பிடிப்பதில்லை
மன்னுமிந் நாட்டுத்துணி—அழுக்கால்
மயக்கம் பெறுமென்பர். (7)

அன்னியர் நாட்டுத்துணி—துவைப்பின்
அழுக்கு போவதில்லை
இந்நகர் நாட்டுத்துணி—துவைப்பின்
இரிந்தோடு மெவ்வழுக்கும். (8)

அன்னியர் நாட்டுத்துணி—விழிகட்
கழகு தருமுள்ளூர்
மன்னு முநாட்டுத்துணி—கட்டவே
மனம் வரவில்லை யென்பார். (9)

தாயின் மணியுடல் தான்—சுகமே
சாராக் குறையினாலே
சேயின் விழிக் கின்பம்—மிகவும்
செய்யமுடிய வில்லை. (10)

பார்வைக் கழகுமில்லை—அன்னையாள்
பண்பு பலவுமுண்டு
ஏர்சிறந் தயலார்—எழிலால்
என்ன பயனுண்டு. (11)

செலவு மிகவுமெனில்—அன்னையைச்
செல்லென் றுரைப்ப துண்டோ
விலைகள் மிக வென்று—கதரை
வெறுப்பதும் அழகோ? (12)

தூய கத ராடை—என்றைக்கும்
சுதந்தரம் கொடுக்கும்
வாய்மை மனத்தூய்மை—யுடனே
வழங்கும் பல குணங்கள். (13)

---

# துருக்கி ராஜ்யம்.

ஐரோப்பிய மகாயுத்தத்துக்கு முன் துருக்கி ராஜ்யம் அநாகரீகம் நிலைபெற்ற அசட்டு நாடாகக் கருதப்பட்டு வந்தது. ஐரோபியர்கள் அதற்கு (Sick man of Europe) ஐரோப்பாவின் நோயாளிஎன மகுடம் சூட்டிக் கேலிசெய்து வந்தனர். ஆனால் நான்கு வருஷங்களுக்குள், ஐரோப்பிய நாட்டாரும் வியப்புறும் வண்ணம் அது சுதந்தரம் பெற்று சீர்திருத்தம் அடைந்துவிட்டது.

இந்தியாவில் சமுதாயச் சீர்திருத்த விஷயமாக யாரேனும் முயற்சி செய்தால்—"அவசரப்பட்டு ஒன்றும் செய்யக் கூடாது. மெல்ல மெல்லத்தான் போகவேண்டும்: பையப் பையத் தின்றால் பனையையும் தின்னலாம்" எனப் பழமை விரும்பிகள் எச்சரிப்பது சர்வ சாதாரணமாயிருக்கிறது.

துருக்கித்தலைவர் முஸ்தபா கமால் இத்தகைய பயங்காளிகளான பழமை விரும்பிகளை ஆதரிப்பவரல்ல. ஒரு சீர்திருத்தம் அவசியமெனக் கண்டால் உடனே அதை அமுலுக்குக் கொண்டுவருவதுதான் அவரது முறை. எதிராக ஆயிரம் தடைகள் குறுக்கிட்டாலும் அவர் அஞ்சுவதில்லை.

சமீபத்தில், லண்டன் "டெய்லி எக்ஸ்பிரஸ்" பத்திரிகை நிருவாகிகள் துருக்கியின் நிலைமையை ஆராய்ந்து வரும்படி ஸ்ரீ. எச். ஜெ. கிறீன்வால் என்ற தமது பிரதிநிதியை துருக்கிக்கு அனுப்பினார்கள்.



முஸ்தபா கமால்.

அவர் துருக்கியில் சிலநாள் சுற்றுப் பிரயாணம் செய்த பிறகு கூறுவதாவது:—

"நான் நாலைந்து வருஷங்களுக்கு முன் துருக்கிக்குச் சென்றபொழுது துருக்கி ஒழுங்கான அரசியவில்லா நாடாயிருந்தது. கைக்கூலி தாண்டவமாடிற்று. அநாசாரங்கள் மிகுந்திருந்தன. பார்க்குமிடமெல்லாம் அசுத்தமே குடிகொண்டிருந்தது. ஜனங்கள் ஊக்கமும் உற்சாகமும் மற்று உயிரில்லாப் பிராணிகளாய்க் காணப்பட்டனர். இப்பொழுதோ துருக்கி அமெரிக்காவையும் வெல்லும் முற்போக்கடைந்த நாடாயிருக்கிறது. எங்கும் சுறுசுறுப்பு; எங்கும் உற்சாகம்: எங்கும் முன்னேற்றம்: துருக்கியரின் பழைய உடை மாயமாய் மறைந்துவிட்டது. துருக்கியரின் சிவப்பு பெஃச் தொப்பி மதாசாரத்துக் குட்பட்ட ஒரு தலையணி. மதப்பற்றுள்ள துருக்கியர் அதை எவ்வாறு ஒழித்துவிட்டனரோ தெரியவில்லை.

"மதத்துக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்பு அறுக்கப்பட்டு விட்டது. பள்ளிக்கூடங்களில் சமய போதனை அளிக்கப்படவில்லை. வெளிநாட்டுக் கிறிஸ்தவப்பாதிரிகள் பள்ளிக்கூடம் வைத்து நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மதப்பிரசாரம் செய்யக் கூடாது. ஷோல்ஜர்கள் என்னும் துருக்கி வைதீகர்கள் தொகையும் குறைக்கப்பட்டு விட்டது. யாவரும் ஒரே மாதிரியான ஐரோப்பிய உடை அணிகின்றனர்.

"கல்வி விஷயமாகவும் பிரம்மாண்டமான சீர்திருத்தங்கள்செய்யப் பட்டிகின்றன. சாங்கேதிகக் கல்வியைத் தேசமுழுதும் பரப்பும் நோக்கத்துடன் பிரான்சு, சுவிட்சர்லாந்து முதலிய தேசங்களிலிருந்து நிபுணர்கள் வரவழைக்கப் பட்டிருக்கிறார்கள். துருக்கிப் பள்ளிகூடங்களெல்லாம் சகல அம்சங்களிலும் ஐரோப்பிய பள்ளிக்கூடங்களை ஒத்து விளங்குகின்றன. தேகப் பயிற்சியை விருத்தி செய்யவும் ஏராளமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லா பள்ளிக்கூடங்களிலும் டென்னிஸ், கால்பந்து, ஹாக்கி, சிலம்பம் முதலிய விளையாட்டு வசதி அமைக்கப்பட்டிருக்கிறது. சில தினங்களுக்குமுன் நடந்த ஒரு பொதுக்காட்சி விளையாட்டில் சுமார் 3000 மாணவர்களும் மாணவிகளும் பங்குகொண்டனர்.

பர்தா வழக்கம் அடியோடு ஒழிந்துவிட்டது. புருஷர்களும் பெண்களும் தாராளமாகப் பொதுஸ்தலங்களில் உலாவுகிறார்கள். புருஷர்கள் தம் மனைவி மக்களுடன் சிற்றுண்டிச்சாலைகளுக்கு வருகிறார்கள்.

அறைகளில் அடைபட்டுக்கிடந்த கோஷாப் பெண்கள் வானம்பாடிப் பறவைகளைப்போல் உல்லாசமாக உலவுவதைப் பார்க்க மிக ஆனந்தமாயிருக்கின்றது.

“இவ்வளவெல்லாம் சீர்திருத்தங்கள் செய்த மூஸ்தபா காமலுக்கும் சத்துருக்கள் இல்லாதில்லை. தன் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே அவர் அரசு புரிந்து வருகிறார். எனினும் சத்துருக்களை விட அவரிடம் அன்பும் பக்தியும் மிகுந்த நண்பர்களே மிகுதியாக இருக்கிறார்கள். ஜனங்கள் எல்லாம் அவரை காஜி அல்லது “வெற்றிக்கொடியோன்” எனக் கொண்டாடுகின்றனர்.

“சீர்குலைந்து தத்தளித்துக் கொண்டிருந்த துருக்கியை மூஸ்தபா கமால் எவ்வாறு ஒன்று படுத்திச் சீர்திருத்தினர்?” என்று அவரது நண்பர்களில் ஒருவரிடம் கேட்டேன். அதற்கு அவர்விடையிறுத்ததாவது :—மூஸ்தபா கமால் ஒரு விநோத மனிதர். போர்க்களத்தில் அணிவகுப்பது போலவே அரசியல் சீர்திருத்தங்களை நடத்துகிறார். கேட்போர் திடுக்கிடும்படி சீர்திருத்த விஞ்ஞாபனம் செய்வார். ஜனங்களின் திகைப்படங்கும் முன்னமேயே அதை அமுலுக்கும் கொண்டுவந்து விடுவார். சீர்திருத்தங்களெல்லாம் வாயுவேகம் மனோவேகமாகவே நடைபெறுகின்றன. ஆகவே ஜனங்கள் அவரது சீர்திருத்தங்களை எதிர்ப்பதுமில்லை; முணுமுணுப்பதுமில்லை.

“அவர் ஒருபொழுதும் தப்புச் செய்ததில்லையா” என்று மீண்டும் கேட்டேன். அதற்கு அவர் நகைத்துக்கொண்டு கூறியதாவது :—ஆம், ஒரு முறை அவர் ஒரு பெரிய தப்புச்செய்தார். அவர் ஒரு அழகிய மாதைக் கலியாணம் செய்தார்.

“ஆம் மூஸ்தபா கமாலின் கலியாணம். அவரது வாழ்நாளில் மிகவும் துக்ககரமான ஒரு சம்பவம். ஆதியில் துருக்கி சைனியத்தில் நமது கமால் ஒரு ஜெனரலாக இருந்தார். கழிந்த ஐரோப்பா மகா யுத்தத்தில் துருக்கி ஜெர்மனியுடன் கூடிப் போர் புரிந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். துருக்கி அந்தக்கொடும் போரில் தலையிட்டது கமாலுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே போரின் உண்மை நிலையை அறியும் பொருட்டு அவர் ஜெர்மனிக்குச் சென்றார். கெய்சர் சக்கரவர்த்தியை ஹின்டன் பர்க்கையும் கண்டு பேசினார். போர்முனைகளையும் சுற்றிப் பார்த்தார். துருக்கிக்கு மீண்டுவந்ததும், யுத்தத்தில் ஜெர்மனிக்கு தோல்வியுண்டாவது உறுதியென்றும், துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்து சண்டை செய்வதில் பயனில்லையென்றும் பிரசாரம் செய்தார். பல பத்திரிகைகளுக்கும் வியாசங்கள் எழுதினார்.

ஆனால் ஒருவரும் அவரது எச்சரிக்கையை மதிக்கவில்லை. கடைசியில் ஜெர்மனிக்குத் தோல்வியுண்டாகவே, கமால் ஒருபெரிய தீர்க்கதரிசியென ஜனங்கள் உணர்ந்து கொண்டனர். கீழைத்தேசங்களில் தீர்க்கதரிசிகளுக்கு ஒருதனி மதிப்புண்டு. ஆகவே ஜனங்களெல்லாம் அவரைப் போற்றிப் பின்பற்றத் தொடங்கினர்.

அந்த நற்றருணத்தைக் கமால் கை நழுவ விடவில்லை. துருக்கிக்குத் தொல்லை விளைத்த கிரேக்கர்களோடு பொருது தோற்கடித்தார். ஆனால் சேவர்ஸ் உடன்படிக்கைப்படி துருக்கி சுதந்தரமிழக்க நேர்ந்தது.

எனவே அரசியலைச் சீர்திருத்த கமால் முயற்சி செய்யத் தொடங்கினார். இராணுவப் பாதுகாப்பில்லாத கான்ஸ்டாண்டிநோபிளில் இருப்பது ஆபத்துக்கிடமான தென்றுணர்ந்து அங்கோராவில் ஒரு புதிய நகரை அமைத்தார். அரசிருக்கையையும் அந்நகருக்கு மாற்றினார். இக்காலத்தில் அவரது பேரும் புகழும் பிரசித்தி பெற்றதாயினும் அவர் சாமனிய ஜெனரல்களைப்போலவே கூடாரத்திலேயே வாழ்ந்துவந்தார். ஆடம்பர வாழ்க்கையை அவர் விரும்பவே இல்லை. அத்தருணத்தில் லாத்திபா ஹானேன் என்னும் ஒரு சுந்தர மாது அவரைக் காதலிக்க இருவருக்கும் மணமும் நடந்தது.

மணப்பெண்ணான லாத்திபாவுக்கு கமாலின் கூடாரவாழ்க்கை பிடிக்கவில்லை. ஐரோப்பிய அரசர்களைப் போல் அழகிய அரண்மனைகளில் ஏவலாளர் புடைசூழ ஆடம்பரமான ராஜச் சின்னங்களுடன் வாழ்க்கை நடத்த அவள் விரும்பினாள். கமாலும் சிறிதுகாலம் அவள் இஷ்டப்படி நடந்தனராயினும், சொற்ப காலத்தில் அந்த உல்லாச வாழ்க்கையில் அவருக்கு வெறுப்புத் தோன்ற, லாத்திபாவை விவாக விடுதலை மூலம் பிரித்தனுப்பிவிட்டார். இதுதான் கமாலின் துக்ககாமான திருமணக் கதை.”

“திடீரென்று கமால் இறந்துவிட்டால் அரைகுறையான சீர்திருத்தங்கள் எவ்வாறு முடிவுபெறும்” எனக் கேட்டதற்கு கமாலின் நண்பர் கூறியதாவது.

“சீர்திருத்தங்களெல்லாம் முற்றுப்பெற பத்து வருஷமாவது வேண்டும். ஆகவே பத்துவருஷம் உயிருடனிருக்க அவர் உறுதிசெய்து விட்டார். உயிருடனிருந்தே தீர்வார்!”

இத்தகைய தீரன் கையில் இருக்கும் துருக்கி நான்கு வருஷத்தில் வியக்கத்தக்க சீர்திருத்தம் பெற்றது அதிசயமா?



# பத்திராசிரியர் குறிப்புகள்

கல்கத்தா காங்கிரசுக்குப் பின்:—சென்ற நவம்பர் மாதப்பத்திரிகையில் "ஒரு சோதனை" என்னும் தலைப்பின்கீழ் நாம் எழுதியகுறிப்பில், கல்கத்தா காங்கிரஸ் ஒத்துழையாமையைப் புதுப்பிக்கத் தீர்மானித்தால், சைமன் பகிஷ்கார ஆர்ப்பாட்டம் செய்யும் தற்காலத் தலைவர்கள் என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லையென்று நாம் பிரஸ்தாபித்திருந்தது நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். நமது சந்தேகம் உறுதிப்பட்டுவிட்டதைப்பற்றி நாம் மிக மகிழ்ச்சியடைகிறோம். 1929—டிசம்பர் 31-உக்குள் நேருயாதாஸ்து ஒப்புக் கொள்ளப் படாவிட்டால் ஒத்துழையாமை இயக்கம் மீண்டும் ஆரம்ப மாகுமென்று கல்கத்தா காங்கிரஸ் தீர்மானித்ததும் சைமன் பகிஷ்காரத்தலைவர்கள் நானு பக்கங்களிலும் சிதறி யோடிவிட்டனர். அயர்லந்து தேசத்தாரைப்போல், இந்தியரும் போட்டி அரசாங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு கிராமத்தையும் பர்தோலி ஆக்கவேண்டுமென்றும் சர்வ கட்சி மகாநாட்டில் வீர முழக்கம்செய்த டாக்டர் பெசண்டு அம்மையார், ஒத்துழையாமை என்ற பேரைக்கேட்டவுடனேயே கோபாவேசம் கொண்டு துள்ளுகின்றார். "மாஜி காங்கிரஸ் தலைவியான நான் சும்மா இருக்கமாட்டேன். காங்கிரஸ் தீர்மானத்துக்கு எதிரிடையாகத் தீவிரமாகப் பிரசாரம் செய்வேன்" என்று கர்ஜிக்கிறார். டாக்டர் சாப்ரு முதலிய மிதவாதத் தலைவர்களின் போக்கும் மேற்படியாகவே இருக்கிறது. சென்னை காங்கிரஸ் கட்சியும் கரையத் தொடங்கிவிட்டது. சட்ட சபை சுயராஜ்யக் கட்சித்தலைவர் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் தமது தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்யப்போகிறாராம். அவர், பெசண்டு-ராமசாமி கட்சியில் அநுதாபம் காட்டிவருவதும் யாவரும் நன்கு அறிந்ததே. நேருயாதாஸ்தை ஆதரித்துப் பிரசாரம் செய்யப் போவதாக பெசண்டு—ராமசாமி கட்சியார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்டளையை நிறைவேற்றிவைக்க அதிதீவிரப்பிரசாரம் செய்யப் போவதாக மயிலை ஸ்ரீமான் கட்சியார் விஞ்ஞாபனம் செய்திருக்கிறார்கள். கடைசியில் நடக்கப் போகிறதென்ன? இவர்கள் பிரசாரமெல்லாம் அடுத்த தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு நடத்தும் தேர்தல் பிரசார மாகவே முடியும்.

* * *

ஜஸ்டிஸ்கட்சி:—பனகால் ராஜாவுக்குப் பதிலாக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாய் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. பிதாபுரம் ராஜா, ஸர் அண்ணாமலை செட்டியார், டாக்டர் சுப்பராயன் முதலியவர்கள் பெயர்கள் இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்படுகின்றன. பிதாபுரம் ராஜா ஒருபெரிய மனிதராயினும் அவர் இதுகாறும் அரசியல் விஷயங்களில் மும்முரமாகக் கவனம் செலுத்தியவரல்ல. ஸர் அண்ணாமலை செட்டியாரவர்கள் அந்த ஸ்தானத்துக்கு எவ்வகையானும் தகுதியுடையவரே யாயினும், ஒருகட்சித்தலைமை வகித்து அரசியல் போராட்டம் நடத்த, ஏற்கனவே பெரும் பொறுப்பான வேலைகளை மேற்போட்டுக் கொண்டிருக்கும் ஸர் செட்டியாரவர்கள் துணிவார்களோ வென்பது சந்தேகத்துக்கிடமாகவே இருக்கிறது. ஆகவே டாக்டர் சுப்பராயன் தான் தலைவர் பதவிக்கு ஏற்ற மனிதர். வயதில் சிறியவராயினும் பெரிய மதியுடையார். ராஜ்ய தந்திரத்தில் காலஞ்சென்ற பனகால்ராஜா சாணக்கியருக்கு ஒப்பானவர் என்று டாக்டர் வரதராஜுலு அபிப்பிராயப்பட்டார். இரண்டு பனகாலும் இரண்டு சாணக்கியனும் சேர்ந்தால் தான் டாக்டர் சுப்பராயனுக்கு இணையாகும் என்பது நமது தாழ்மையான அபிப்பிராயம். டாக்டர் சுப்பராயன் மந்திரிபதவி ஒப்புக்கொண்டது முதல் அவரதுசெயல்களை நுட்பமாகக் கவனித்து வருகிறவர்களுக்கு நமது அபிப்பிராயம் சரியான

தென்று புலனாகாதிராது. ஆனால் ஒரு நிபந்தனையின் பேரில் அவர் கட்சித்தலைமை வகிக்க சம்மதிப்பதாகத் தெரிகிறது. அதாவது சர்வ சமூகத்தாருக்கும் சம சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்ற ஜஸ்டிஸ்கட்சிக் கொள்கையை ஒப்புக்கொள்ளும் பிராமணர்களையும் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக்கொண்டால், தாம் தலைமை வகிக்கத் தயாராயிருப்பதாக டாக்டர் சுப்பராயன் கூறுகிறாராம். இந்த நிபந்தனை ஜஸ்டிஸ்கட்சித் தலைவர்களுக்கு ஒருகால் பீதியை உண்டு பண்ணலாம். ஆனால் உற்று நோக்கினால் அந்நிபந்தனையைப் பார்த்துப் பயப்படுவதற்கு ஒன்று மில்லை. பின்னணியில் நிற்கும் சமூகங்களை முன்னணியில் நிற்கும் சமூகங்களுக்குச் சமமான நிலையில் கொண்டு வந்து தேசமுன்னேற்றத்துக்கு வழிதேடுவதே ஜஸ்டிஸ்கட்சியின் அடிப்படையான நோக்கம். ஜஸ்டிஸ் கட்சிபோன்ற ஒருகட்சியே தேவையில்லையென்று ஆதியில் பிராமணர்கள் கூக்குரலிட்டதினால் பிராமணர்களை ஆதியில் ஜஸ்டிஸ் கடசியில் சேர்க்காதிருந்தது நியாயமா யிருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது பிராமணர்களின் அபிப்பிராயமும் சிறிது மாற்ற மடைந்திருக்கிறது. யாவருக்கும் சம சந்தர்ப்ப மளிக்க வேண்டியது அவசியமென்று பிராமணர்களும் வாய்ப் பேச்சளவிலாவது ஒப்புக்கொள்ளத்தான் செய்கிறார்கள். இது ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி யல்லவா? பிராமணர்களை மட்டும் அகற்றி நிறுத்தும் ஒருகட்சி அரசியல் கட்சியாகுமா வென்றும் அவர்கள் கேட்கிறார்கள். அந்தக் கேள்வி அர்த்த புஷ்டியுடையது என்று சம்மதிக்கத்தான் வேண்டும். "பிராமணர்கள் தந்திரசாலிகள். சூழ்ச்சிக்காரர்கள். அவர்களைச் சேர்த்தால் கட்சியைத் தொலைத்து விடுவார்கள்" என்று சமாதானம் கூறுவது நம்மை நாமே பேடிகள் என்று கூறிக் கொள்வதற்கு ஒப்பாகும். "வகுப்புவாதப் பிரதிநிதித்துவ" எலக்ஷன் புரூப் (Election Proof) சொக்காயை அணிந்து கொண்டு நாம் எந்நாளும் அரசியல் உலகத்தில் தலைதூக்கி நடக்க முடியாது. அவ்வாறு நடக்க முயல்வதும் கோழைத் தனமாகும். பொதுத் தேர்தலில் ஆண்மையோடு போராடி வெற்றிபெறுவதே சுத்த வீரர்களுக்கு அழகு. சுமார் எட்டு வருஷ உழைப்பின் பிறகும் பிராமண ரல்லாதார் எழுச்சி பெறவில்லையென்பது ஜஸ்டிஸ் கட்சிக்குப் பெருமை யளிக்கத் தக்கதல்ல. பிராமணர்களும் நமது நாட்டில் பிறந்து, நம் நாட்டிலேயே வளர்ந்து நம்முடன் கூடிவாழும் சகோதரர்களே. அவர்களை ஒழித்து நமக்கும், நம்மை ஒழித்து அவர்களுக்கும் வாழ முடியாது. அரசியலிலும் பொதுவாழ்விலும் எல்லா சமுதாயத்தாரும் சமவுரிமை பெற வேண்டியது அவசியமே ஏதேனுமொரு சமுதாயத்தார் மட்டும் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெறுவதை தயவு தாட்சண்யமின்றி ஒழிக்கவேண்டியதுதான். ஜாதி இறுமாப்பும் வைதீகத் திமிரும் அழியவேண்டியதுதான். அவை ஒழியும் போது பிராமணரும் பிராமண ரல்லாதாரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த மக்களைப்போல் ஐக்கியமாக வாழ்வர். எனவே பிராமணர்களும் ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைகளை ஒப்புக்கொண்டு நம்மவர்களுடன் ஒத்துழைக்க முன் வந்தால் அவர்களை நாம் ஆதரவோடு ஏற்றுக்கொள்வதே முறையாகும். ஆகையால் டாக்டர் சுப்பராயன் யோசனையை ஒப்புக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சியைப் பலப்படுத்த அதன் தலைவர்கள் முன்வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

* * *

இன்னும் ஒரு யோசனை:—ஜஸ்டிஸ் கட்சி தோன்றி சுமார் 10 ஆண்டுகள் ஆய்விட்டன. இதுகாறும் அக்கட்சிக்குத் தலைவர்களாயிருந்த ஸர். பி. தியாகராயரும், பனகால் அரசரும் அக்கட்சி முன்னேற்றத்துக்கு எவ்வளவோ பாடு பட்டிருக்கிறார்கள். ஆரம்பத்தி லிருந்த எதிர்ப்புகளை யெல்லாம் வென்று அக்கட்சியை தற்காலநிலையில் கொண்டு வருவதற்கு அவ்வீரத் தலைவர்கள் செய்த முயற்சிகள் அபாரமானவை. எனினும் திரு ஈ. வே. ராமசாமி நாய்க்கர் ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரத்தை மேற்போட்டுக் கொள்ளும்வரை ஜஸ்டிஸ் கட்சி குடத்திலிட்ட விளக்காகவே இருந்தது. தற்காலம் ஜஸ்டிஸ் கட்சிக்கு இருக்கும் செலவாக்குக்கு திரு ராசாமி நாயக்கரே காரண புருஷர் என்பதை தென்னாடு நன்கறியும். ஸர். பி. தியாகராயரும் பனகால் ராஜாவும் மேற்பரப்பாக வேலைசெய்து வந்தார்களேயன்றி சாமானிய ஜனங்களிடையே அவர்கள் ஊடாடிப் பழகவில்லை. டாக்டர் சுப்பராயனோ அல்லது வேறுயாரேனுமோ தலைவர் ஸ்தானத்துக்கு வந்தாலும் அவர்களும் ஸர். தியாகராயர், பனகால் அரசர் முதலியவர்களைப் போல் மேற்பரப்பு வேலை செய்யக் கூடியவர்களாகவே இருப்பார்கள். ஒருகட்சியின் உயிர்

நாடி கிராமங்களிலே இருக்கிறது. சாமானிய கிராம ஜனங்களெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைகளை உணரவேண்டும். எழுதப் படிக்கத் தெரியாத ஏழைச் சகோதரர்களும் ஜஸ்டிஸ் கட்சியின் உண்மைக் கொள்கைகளை நன்குணர்ந்து விழிப்படைந்தால் தான் ஜஸ்டிஸ் கட்சி வலுப்பெறும். தேசமும் நலம் பெறும். கிராமத்தைத் தட்டியெழுப்பத் தகுதியுடைய தலைவர் திரு. நாயக்கரவர்களே. ஆகவே டாக்டர் சுப்பராயனவர்களை சட்டசபைக் கட்சித் தலைவராகவும், திரு. நாயக்கரை பொதுக் கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுத்தால் பழம்நழுவிப்பாலில் விழுந்ததற்கு ஒப்பாக இருக்குமென்று எண்ணுகிறோம். மதுரை மகாநாட்டில் எவ்வளவோ தீர்மானங்கள் நிறைவேறின. கோவையில் நிறைவேறிய தீர்மானங்களும் அநந்தம். ஆனால் அவைகள் எல்லாம் வெறும் காகிதத் தீர்மானங்களாகவே இருக்கின்றன. ஒன்றாவது அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரப் படவில்லை. தலைவர்களில் மிக்காரும் உத்தியோக வேட்டையிலேயே நோக்குடையவரா யிருக்கிறார்கள். பொது ஜனங்களின் நிலைமையை உணர்வாரைக் காணோம். பொதுஜன நன்மைக்காகப் பாடுபடுபவர்களையும் காணோம். தொழிலாளர்கள் எல்லாம் பிராமணரல்லாதவரா யிருந்தும் அவர்களுடைய துன்பந்துடைக்க ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் முன்வராதது வருந்தத்தக்கது. தொழிலாளர் நிலைமையைப்பற்றி விவாதம் செய்ய சட்டசபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று ஸ்ரீ. சத்தியமூர்த்தி கொண்டுவந்த தீர்மானத்தை, அக்காலத் துண்டான கோபாவேசத்தினால் அவர் வற்புறுத்தாது இருந்துவிட்டன ராயினும், ஏனைய பிராமணரல்லாத மெம்பர்கள் ஒருவராவது அத் தீர்மானத்தைப்பற்றிப் பேச முன்வரா தொழிந்ததிலிருந்தே பிராமணரல்லாத தலைவர்கள் ஏழைப் பிராமணரல்லாதார் விஷயத்தில் எவ்வளவு கவலையற்றவராயிருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கிவிட்டது. இந்த துர்ப்பாக்கிய நிலை ஒழிய வேண்டுமானால்—ஜஸ்டிஸ் கட்சியினால் ஏழை மக்களுக்கு நலம் விளைய வேண்டுமானால்—ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக்காரர் கட்சி என்ற அவப்பேர் நீங்க வேண்டுமானால்—திரு. நாயக்கர் ஜஸ்டிஸ் கட்சித் தலைவராக வந்துதான் தீரவேண்டும். இன்றேல்—ஜஸ்டிஸ் கட்சி அற்பாயுளுடையதாகவே முடியும்.

ஆனால் திரு. நாயக்கர் டாக்டர் சுப்பராயன் யோசனையை ஒப்புக்கொள்வரா என்று ஒரு கேள்வி பிறக்கலாம். தன் சொந்த அபிப்பிராயம் எதுவாயாக இருப்பினும், பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காகத் அவ்வபிப்பிராயங்களையும் விட்டுக் கொடுக்கக்கூடிய உத்தம குணம் அவருக்குண்டென்பதைக் கோவை மகாநாட்டின் போது நாம் அறிந்துதான் இருக்கிறோம். சுயநலங் கருதிப் பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் தம் சொந்த அபிப்பிராயங்களை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பர். சமூக நலங் கருதுவோர் சமூக நன்மைக்காகத் தம் சொந்த அபிப்பிராயத்தை விட்டுக் கொடுக்கத்தான் செய்வார்கள். திரு. நாயக்கர் பின்னைய வகுப்பைச் சேர்ந்தவர் என்பது நமது முழு நம்பிக்கை. எனவே டாக்டர் சுப்பராயன் யோசனை மூலம் ஜஸ்டிஸ் கட்சி வலுவடையக் கூடுமானால், திரு. நாயக்கர் அதற்கு எதிரிடையாக விருக்க மாட்டாரென்று நாம் உறுதி கூறுகிறோம்.

* * *

**ஆப்கன் அரசர் துறவு:—**

"வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறி சொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடாதாகுமே."

என்னும் பாடல் ஆப்கான் அரசர் அமானுல்லா விஷயத்தில் முழுதும் உண்மையாய் விட்டது. காட்டு மிருகாண்டிகளா யிருந்த ஆப்கானியரை நாகரீக மக்களாக்கி ஆப்கானிஸ்தானத்தை ஒரு உத்தம சுதந்தர நாடாக உருப்படுத்த அமீர் அமானுல்லா பகீரதப் பிரயத்தனம் செய்தார். மதவெறி கொண்ட முல்லாக்களுக்கு அது பிடிக்கவில்லை. எனவே கொள்ளைக்காரர்களான பாச்சா சாகு கோஷ்டியாரைத் தூண்டி விட்டனர். பாச்சா சாகு கோஷ்டியாருக்கு ருஷ்யர்கள் துப்பாக்கிகளும் பணமும் கொடுத்து உதவி செய்வதாகச் சொல்லப் படுகிறது. முல்லாக்கள் நோக்கம் அமானுல்லாவை விரட்டி தம் ஆதிக்கத்தை நிலை நிறுத்துவது; பாச்சா சாகு கோஷ்டியார் நோக்கம் கொள்ளையடித்தல். எனவே இரு கூட்டத்தாரும் சேர்ந்து கொண்டு அமானுல்லாவைத் தொலைக்க எண்ணினர். நிலைமை நெருக்கடியா யிருப்பதை உத்தேசித்து முல்

லாக்களின் வேண்டுகோளுக்கு இசைவதாகவும் அமீர் ஒப்புக்கொண்டார். முல்லாக்கள் நிபந்தனைகளோ வெகு விநோதமானவை. அவைகளாவன. (1) 5-அங்கத்தினரடங்கிய ஒரு செனட் சபை நியமிக்க வேண்டும். அவைகளில் பெரும்பான்மையாக முல்லாக்களும மற்றும் பிரபலஸ்தர்களும் இருக்கவேண்டும். அரசியல் இராணுவம் மதம் முதலிய விஷயங்களில் அவர்கள் தீர்மானம் இறுதியானது (2) முஸ்லீம் மத வழக்கங்களை ஆப்கான் அரசரும் அவரது குடும்பத்தாரும் அனுசரித்து நடத்தல் (3) வைத்தியக் கல்விக்காக துருக்கிக்கு அனுப்பியிருக்கும் ஆப்கன் பெண்களைத் திருப்பி அழைத்தல். (4) இந்தியாவிலுள்ள தேவபந்து கலாசாலை குருக்களுக்கு ஆப்கானுக்குள் நுழைய அனுமதியளித்தல். (5) மீண்டும் கண்டிப்பான முக்காடு முறைமை ஏற்படுத்தல். (6) கட்டாய ராணுவப் பயற்சியை ரத்துசெய்தல். (7) முல்லாக் களுக்கும் பூரண சுதந்தர மளித்தல் (7) வெள்ளிக் கிழமையை ரஜா நாளாக ஏற்படுத்தல். (8) பெண்களுக்கு ஐரோப்பிய உடை விலக்கு (9) கல்விச்சாலை மாணவர்களுக்கு விவாகம் செய்து கொள்ள சுதந்தரம். (10) பெண் கல்வி நிறுத்தம். (11) ஆண்களுக்கு உடை விஷயத்தில் சுதந்தரம். (12) முல்லாக் களுக்குத் தடையா யிருக்கும் விதிகளை ரத்து செய்தல். (13) இஸ்லாம் சட்டத்தை மீறுபவருக்குத் தண்டனைவிதிக்க முல்லாக்களுக்கு உரிமை கொடுத்தல்.



அமானுல்லா.

மேற்கூறிய நிபந்தனைகள் எவ்வளவு பிற்போக்கானவை என்று நாம் சொல்லத் தேவையில்லை.

எனினும் வீண் உயிர்ச்சேதத்தைத் தடுக்கும் பொருட்டு அமீர் அவைகளையும் ஒப்புக்கொண்டார். பின்னும் கலகம் அடங்கவில்லை. எனவே தனது தமயனரான இனயத்துல்லா கானுக்கு முடி சூட்டி விட்டு அமானுல்லா காந்தாரம் சென்று விட்டார். முல்லாக்கள் இனயத்துல்லாக் கானை புது அமீராக ஒப்புக்கொண்டு கலகத்தை நிறுத்தும்படி கலகக்காரருக்குக் கட்டளையிட்டனர். கொள்ளைக்காரர், முல்லாக்கள் கட்டளைக்குச் செவி கொடுக்காது, இனயத்துல்லா அரண்மனையை முற்றுகை போட அவர் வேறு வழியின்றி, பட்டந்துறந்து காந்தாரத்துக்குச் சென்று விட்டார். இப்பொழுது கலகக்காரர் தலைவரான பாச்சா சாகு அமீர் அபிபுல்லா கான், காஜி என்ற புனை பெயருடன் ஆப்கான் அரசர் ஆய்விட்டார். இந்தப் புதுத் தொல்லையை முல்லாக்கள் எதிர்பார்க்க வில்லையாதலால் அவர்களும் இப்பொழுது நடுக்கிட்டுப் போயிருக்கிறார்கள். அமானுல்லாவின் சீர்திருத்தங்களை முல்லாக்கள் வெறுத்தாலும் ஒரு கொள்ளைக்காரத்தலைவன் கீழடங்கிவாழுமாறு முல்லாக்கள் அவ்வளவு மானவுணர்ச்சி யற்றவர்களல்ல. எனவே புது அமீர் நீண்ட நாள் ராஜ பதவி அனுபவிப்பார் என்று நம்புவதிற்கில்லை.

பட்டந்துறந்த அமானுல்லாவோ காந்தாரத்தில் சுகமாக விருக்கிறார். முடியிழந்தும் அவர் பொதுஜன மதிப்பை இழந்துவிடவில்லை. காந்தாரம், கஜனி மாகாணங்களிலுள்ள ஜனங்கள் அவரை ஆதரிக்க முன் வந்திருப்பதாகவும் தெரிகிறது. அமானுல்லாவின் தாத்தாவான அப்துர் ரஹ்மான் 15 வருஷம் வனவாசஞ் செய்த பிறகு மீண்டும் அரசாட்சியைப் பெற்றார். எனவே அமீர் அமானுல்லாவும் மீண்டும் ஆப்கான் அரசராவார் என்றும் நம்ப இடமிருக்கிறது. அமானுல்லா நினைத்திருந்தால் கலகக்காரர்களை அடக்க முடிந்திருக்குமென்றும் தம் பிரஜைகளை வீணே கொன்று தொலைக்க மனமின்றியே அவர் வெகு சாதுரியமாக, பட்டம் துறந்து, மீண்டும் அர

சைக் கைப்பற்ற ஒரு சௌகரியமான சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமென்றும் ஊகிக்க இட மிருக்கின்றது. காந்தாரத்தி லிருந்து அவர் கலகக்காரருக்கு விடுத்திருக்கும் கீழ்வரும் செய்தியே நமது ஊகத்துக்குக் காரணமாகும். அச்செய்தி கூறுவதாவது:—

"கடவுள் ஒருவர்தான் என்றும், முகமது அவரது ஊழியரென்றும் நபி என்றும் நான் உண்மையாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். எனது இஸ்லாமிய சகோதரர்களே! கடவுளாலும் அவரது நபியாலும் போதிக்கப்பட்ட சத்திய நெறியை ஜனங்கள் பின்பற்றி நடக்கும்படி செய்வதற்காக ஆப்கானிஸ்தானத்தில் எல்லோருக்கும் கல்வி போதிக்க நான் உத்தேசித்தேன். அவர்கள் மூட நம்பிக்கை, ரத்தம் சிந்துதல், கொள்ளையடித்தல் திருடுதல், முதலியவற்றைத் தவிர்ப்பதன் மூலம் உலகில் நாகரீகம் வாய்ந்த ஜாதியார்களுள் தங்களுக்குரிய பதவியை அடைய முடியுமென்று நான் நம்புகின்றேன். ஆனால் நீங்கள் தற்பொழுது அறியாமையும் சுயநலமும் மிகுந்த நண்பர்களுடைய தூண்டுதலுக்கிணங்க கலகமாகக் கிளம்பியிருக்கின்றீர்கள். இதன் பயனாக, தீரர்களான பல இஸ்லாமியர்கள் உயிர் துறந்திருக்கின்றார்கள். ஜனங்களுடைய விருப்பத்திற்கிணங்க நான் பல துராணிப் பெண்களைக் கல்வி கற்று வருவதற்காகத் துருக்கிக்கு அனுப்பி யிருக்கின்றேன். ஆனால் அவர்களது கணவர்கள் ஆதரித்தபோதிலும் நீங்கள் இந்த முறையை ஆதரிக்கவில்லை. உங்களுடைய கலகத்தால் ஆப்கானிஸ்தானத்திற்கு ஏற்படும் கேடுகளைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை. முஸ்லிம்களெல்லாரையும் சகோதரர்களாகப் பாவிக்கும்படி இஸ்லாம் உங்களுக்குப் போதிக்கவில்லையா? இப்படி யிருக்கையில் அவர்களைக் கொல்லுவதை நீங்கள் எப்படி நியாயமென்று கருதுகின்றீர்கள்? என்னைச் சிலர் காபிர் என்று அழைத் திருக்கின்றார்கள். அதற்கான தண்டனையைக் கடவுளே அவர்களுக் களிக்கும்படி நான் விட்டு விடுகின்றேன். நான் மனதில் பக்கா முஸ்லிமாக இருக்கையில் அவர்கள் எவரும் என்னை இஸ்லாத்தை விட்டுத் தூரத்த முடியாது. காசதண்டையும் மற்றவற்றையும் நீங்கள் சூறையாடினீர்கள். அங்குள்ள ஆயுதங்களைக் கைப்பற்றினீர்கள். இது நல்லதுதான். அந்நிய தேசத்தாரிடமிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக நானே இந்த ஆயுதங்களை உங்களிடை வழங்கி யிருக்கின்றேன். இந்த ஆயுதங்களை நான் உங்களுக்கு வெகுமானமாகக் கொடுக்கின்றேன். அவற்றை நீங்கள் இஷ்டப்படி உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் எதிர்காலத்தில் ஜாக்ரதையாக இருங்கள். கலக எண்ணத்திற்கு எவ்விதத்திலும் இடங்கொடுக்காதீர்கள். நீங்கள்தான் எனக்குப் படைபலம். நீங்கள் நாசமடைவதைக் குறித்து நான் வருத்தப் படுகின்றேன். என்னிடம் பல ஆகாய விமானங்களிருந்த போதிலும் அவை உங்கள் மீது வெடி குண்டுகளை எறிய நான் உத்தரவிடவில்லை என்பதிலிருந்தே உங்களிடம் என்க்குள்ள அனுதாபம் ருசுவாக வில்லையா? நீங்கள் உங்களுடைய தீயநெறியில் செல்லுவதில் பிடிவாதங் காட்டினால் 60000 ஹஸாரிகளும் உங்களைத் தாக்கத் தயாராக இருக்கின்றனர். ஆகாய விமானங்கள் உங்களுடைய கிராமங்களை அடியோடு நாசம் செய்துவிடும். உங்களுக்கு எச்சரிக்கை செய்வதே எங்களுடைய கடமையாகும்."

ஆப்கானிஸ்தானத்தின் க்ஷேமத்துக்கு மட்டுமல்ல—ஆசியாவின் க்ஷேமத்துக்கும் அமானுல்லா, ஆப்கான் அமீராக வரவேண்டியது இன்றியமையாததாகும். தெய்வத் திருவருளும் அமானுல்லா வழி நிற்பதாக!

* * *

**நமக்கு எத்தனை எஜமான்:**—1929—டிசம்பர் 31-உக்குள்ளோ அதற்கு முன்னோ குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்குரிய பொறுப்பாட்சி வழங்கப்படாவிட்டால் ஒத்துழையா இயக்கம், மீண்டும் ஆரம்பமாகு மென்று காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறது. 1930-ல் இந்தியா சுயராஜ்யம் பெற்றுவிடு மென்று ஒரு வடநாட்டு ஜோசியர் தீர்க்கதரிசனம் கூறுகிறார். ஆனால் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகையின் லண்டன் நிருபர் அப்பத்திரிகையில் எழுதியுள்ள ஒரு நிருபத்தைக் கவனித்தால் இந்தியர்களுக்கு எத்தனை எஜமான்கள் இருக்கிறார்கள் என்பதும் இந்திய சுயராஜ்யப் பிரச்சினை எவ்வளவு சிக்கலாக இருக்கிறதென்பதும் நன்கு விளங்கும். 1932-க்குள் சைமன் கமிஷன் ரிபோர்ட்டைத் தழுவிய சீர்திருத்த மசோதா பார்லிமெண்டில் நிறைவேற முடியாதென்று அந்நிருபர் உறுதி கூறுகிறார். சைமன் கோஷ்டியாரின் இந்திய விசாரணை நாடகம் பூர்த்தியாவதோடு மட்டும் இந்தியாவின் விதி நிர்ண

யிக்கப்பட முடியாதாம். லண்டன் தலைவர்கள் அபிப் பிராயத்தையும் கமிஷனர்கள் அறிய வேண்டியது அவசியமாம். இந்தியா மந்திரி காரியாலய உத்தியோகஸ்தர்கள், கடற்படை உத்தியோகஸ்தர்கள், இந்தியாவில் உத்தியோகம் வகித்த மாஜி ஆங்கிலோ இந்திய உத்தியோகஸ்தர்கள், மற்றும் இந்திய விஷயங்களில் பாண்டித்திய முடைய நிபுணர்கள் முதலியவர்கள் அபிப்பிராய மெல்லாம் அறிந்த பிறகே சைமன் கோஷ்டியார் முடிவான ரிப்போர்ட்டுத் தயார் செய்வார்களாம். மேலே கூறிய வெள்ளை எஜமான்களின் அபிப்பிராயம் எத்தகையதா யிருக்கக்கூடு மென்பதை ஜோசியர்களின் உதவியன்றியே நமக்கு எளிதில் அறிந்து கொள்ளலாம். நமது லண்டன் நிருபரின் கடிதத்தை வாசிக்கும்போது, ஓதுங்க வந்த பிடாரி உள்ளூர் பிடாரியை ஓட்டிய கதை நமது ஞாபகத்துக்கு வருகிறது. பரஸ்பர நம்பிக்கையும் முன்னேற்ற விருப்பமும் விசால சிந்தனையும் இல்லாத ஒரு தேசத்தாரின் கதி இம் மாதிரியாகத்தான் இருக்கும். வெள்ளையர்களை நொந்து சொல்வதில் ஒரு பயனுமில்லை.

* * *

சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு :—தென்னிந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடு இம்மாதம் 14-உ திருவனந்தபுரத்தில் ஸர்



எம். விசுவேசுவரய்யா தலைமையில் வெகு சிறப்பாகக் கூடி முடிவு பெற்று விட்டது. தலைவர் ஸர். எம். விசுவேசுவரய்யா ஒரு பழுத்த அரசியல் வாதி. மைசூர் சமஸ்தான திவானாயிருந்ததோடு உலகமுழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து பல தேச அரசியல் நிலைமைகளை நன்குணர்ந்தவர். ஆகவே அவரது அபிப்பிராயங்கள் பொன்னே போல் போற்றத் தக்கனவாகும். காலதேச வர்த்தமானங்களை நோக்கி சமஸ்தானப் பிரஜைகளுக்குப் பொறுப்பாட்சி வழங்கவேண்டியது இன்றியமையாத தென்று ஸர். விசுவேசுவரய்யா கூறுகின்றார். பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளுக்குள்ள உரிமைகள் கூட சுதேச சமஸ்தானப் பிரஜைகளுக்கு இல்லாமல் இருப்பது வருந்தத்தக்க தல்லவா? சில விஷயங்களில் பிரிட்டிஷ் இந்தியாவைவிட முற்போக்கடைந்திருக்கும் மைசூர், திருவிதாங்கூர் சமஸ்தானங்களில் பத்திரிகை வாய்ப்பூட்டுச் சட்டம் அனுஷ்டானத்தி லிருந்து வருவதை நாகரீக உலகத்தார் ஆதரிக்கமாட்டார்கள். எனவே ஸர். விசுவேசுவரய்யா கூறுகிறபடி சுதேச சமஸ்தானப் பிரஜைகளுக்கு பொறுப்பாட்சி வழங்கவேண்டியது மிக அவசியமாகும். இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு சுதேச சமஸ்தானங்கள் முட்டுக் கட்டைகளா யிருக்குமானால் அதுவும் கண்டிக்கத் தக்க தாகும். பட்லர் கமிட்டியாரும் சைமன் கோஷ்டியாரும் சுதேச சமஸ்தானங்களை முட்டுக்கட்டையாக உபயோகிக்க முயற்சி செய்யத்தான் செய்வார்கள். இந்திய ரத்தம் ஓடும் சுதேச மன்னர்கள் இந்தியாவை எந்நாளும் அடிமைப் படுகுழியில் ஆழ்த்திவைத்திருக்க உதவிபுரிதல் கூடாது. இந்தியா சுயராஜ்யம் பெறுவதற்கு சுதேச மன்னர்கள் தடையாக இருக்கமாட்டார்கள் என்று சமீபத்தில் ஆள்வார் மகாராஜா கூறியதை ஏனைய சுதேச மன்னர்களும் கவனித்து ஒப்புக்கொள் வார்களாக!

* * *

சபாஷ் சாப்ரு !:—

பால்ய விவாகத்தடை மசோதா விசாரணைக் கமிட்டியார் முன் சர். தெஜ்பகதூர் சாப்ரு கூறிய சாட்சியத்தைத் தென்னாட்டு வைதீக கோஷ்டியாருக்கு சமர்ப்பிக் கிறோம். அவர் கூறிய தாவது :—"ஆண்களுக்கு 21-வயதுக்குள்ளும் பெண்களுக்கு 18 வயதுக்குள்ளும் விவாகத்தை நிர்ணயிக்கக் கூடாது. முல்லாக்களும், புரோகிதர்களும், சாஸ்திரங்களும் சமூக முன்னேற்றத்துக்கு எப்பொழுதும் ஜன்ம விரோதிகள். ஆகையால் அவர்கள் அபிப் பிராயத்தை இவ்விஷயத்தில் நான் கொஞ்


சங்கூட மதிக்கப் போவதில்லை. பால்யவிவாக விஷயத்தில் வைதீகர்களை நேருக்கு நேர் எதிர்த்துப் போராட நான் தயாராக விருக்கிறேன். சாஸ்திரங்களுக்காகவும் வைதீகத்துக்காகவும் நமக்குள்ள பகுத்தறிவை நாம் இழந்துவிட முடியாது. சமூகச் சீர்திருத்தம் சட்டதிட்டங்களினால் மட்டுமே வெற்றிபெற முடியும். பால்ய விவாகம் செய்ய முற்படும் பெற்றோரையும் தம்பதிகளையும் தண்டிக்கத் தான் வேண்டும். பால்ய விவாகத்தில் சம்பந்தப்பட்டவர்கள் பி. ஏ. பட்டதாரிகளாயிருந்தாலும் அவர்களுக்குச் சவுக்கடி கொடுக்கவேண்டுமென்றே நான் கூறுவேன்".

டாக்டர் சாப்ருவின் இவ்வீர மொழிகளைத் தென்னாட்டார் தெய்வ மொழிகளாகக் கொள்ள வேண்டும். சமூகச் சீர்திருத்தம் பெற்றபிறகே மக்கள் சுதந்தரம் பெறமுடியும். சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக சீர்திருத்த முயற்சிகள் செய்யப்பட்டு வரினும் நாம் விரும்பும் பயன் கைகூடாமைக்குக் காரணம் சீர்திருத்தக்காரர்களின் "மெல்ல, மெல்ல, பையப் பைய"ப் போக்கே யாகும். நாம் தப்பெனக் கண்டவைகளைத் தயவு தாட்சண்யமின்றி ஒழிக்கவேண்டியது தான். அவ்வாறு சமூக ஊழல்களைத் தொலைத்த நாடுகளே இப்பொழுது நாகரீக உலகத்தில் முன்னணியில் நிற்கின்றன. ஜப்பானைப் பாருங்கள்! துருக்கியைப் பாருங்கள் !

"அவசரச் சீர்திருத்தத்தினால் ஆப்கன் அமீருக்கு நேர்ந்த கதி தெரியாதா" என்று வைதீகர்கள் கேட்கலாம். ஆப்கன் அமீருக்கு ஒரு குடிகேடும் உண்டாய் விடவில்லை. அவருக்குத் தோன்றி யிருக்கும் கஷ்டங்கள் எல்லாம் தற்காலக் கஷ்டங்களே. இறுதியில் அவர் வெற்றி பெறுவர் என்பது திண்ணம். ஒரு கால் அவர் வெற்றி பெறாது போயினும் அவர் விதைத்த சீர்திருத்த விதைகள் பயனளியாது போகா.

* * *

செங்குந்தர் மகாநாடு:—தென்னிந்திய செங்குந்தர் மகாநாட்டின் முதலாவது கூட்டம் இம்மாதம் 19-ம் 20-ம் தேதிகளில் புதுச்சேரி ஸ்ரீமான் ஏ. வி. முத்தையா முதலியாரவர்கள் தலைமையில் ஈரோட்டில் வெகு விமரிசையாக நடந்தேறியது. தென்னாட்டில் செங்குந்தர் ஒரு முக்கிய சமூகத்தார். பொருளாதார முன்னேற்றத்துக்குக் காரணமான வர்த்தகமும் நெசவுத் தொழிலும் அநேகமாக அவர்கள் கைக்குள்ளேயே இருந்து வருகின்றனவென்று சொல்லலாம். பூர்வத்தில் ஏனைய சமூகங்களைப்போல் முன்



ஸ்ரீ. ஏ. வி. முத்தையா முதலியார்.

னணியில் நின்ற செங்குந்தர் பற்பல காரணங்களால் அநாமதேயராய் வாழ்ந்து வருகின்றனர். தேசப் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஆதாரமான தொழில்களைப் பின்பற்றும் அந்த சமூகத்தார் பல துறைகளிலும் வளர்ச்சியடைவது தேச க்ஷேமத்துக்கு இன்றியமையாததாகும். ஆகவே செங்குந்த மகா ஜனங்களின் முன்னேற்ற முயற்சியை நாம் முழுமனதோடு ஆதரிக்கிறோம். வரவேற்புக் கழகத்தலைவர். ஸ்ரீ. வி. சோங்கோடையாவும் மகாநாட்டுத்தலைவர். ஸ்ரீமான் முத்தையா முதலியாரும் சமூக முன்னேற்றத்துக்கான வழிகளைத் திறம்பட விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி மகா நாட்டில் நிறைவேறிய தீர்மானங்களை செங்குந்த மகா ஜனங்கள் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவர முயல வேண்டுமென்று விரும்புகிறோம். மகா நாடுகள் கூடுவதும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதும் தற்காலத்திலே ஒரு பொழுது போக்காகி விட்டது. இந்த மகா நாட்டுத் தீர்மானங்களும் பொழுது

போக்குத் தமாஷாக முடியாதிருக்குமாறு செங்குந்தத் தலைவர்கள் உழைப்பர்களாக!

* * *

செங்குந்த வர்த்தகர் மகாநாடு :—

மேற்படி மகா நாட்டையொட்டி ஈரோட்டில் ஒரு வர்த்தக மகாநாடும் நடைபெற்றது. தென்காசி பாங்கர் திரு. T. P. K. ஆறுமுக முதலியார் அம்மகா நாட்டுக்குத் தலைமை வகித்தார். திரு. முதலியார் ஒரு பெரிய வர்த்தகர்; தென்காசி யூனியன் போர்டு தலைவராயிருந்து ஸ்தல ஸ்தாபன நிருவாகத்திலும் அனுபவம் பெற்றவர். எனவே செங்குந்தர் வியாபார அபிவிர்த்திக்காக அவர் கூறும் யோசனைகளை செங்குந்தர்களும் ஏனைய தமிழ் மக்களும் ஊன்றிக் கவனிக்குமாறு வேண்டுகிறோம். வர்த்தக அபிவிர்த்திக்குக் கூட்டுறவு வர்த்தகம் இன்றியமையாத தென்று தலைவர் முதலியாரவர்கள் வற்புறுத்திக் கூறுகிறார்கள். தலைவர் முதலியார் வெறும் வாய்ப்பேச்சு வீரரல்ல. செங்குந்தருக்காக ஒரு தனிப் பாங்கி ஸ்தாபனம் செய்து அதை வெகு திறமையாக நடத்தி வருகிறார். அவரைப் போலவே ஏனைய செங்குந்தத் தலைவர்களும் கூட்டுறவு வர்த்தகத்தை விருத்தி செய்து தென்னாட்டின் செல்வ நிலையை உயர்த்த முயற்சி செய்வார்களாக!

* * *

தாருல் இஸ்லாம் :—நமது சகஜீவியான தாருல் இஸ்லாம் பத்திரிகையின் பத்தாவது வருஷ பூர்த்தி விழா மிக மங்களமாக நடைபெற்றதை அறிந்து மகிழ்ச்சி யடைகிறோம். புற்றீசல்கள் போல் பத்திரிகைகள் தினந்தோறும் தோன்றி மறையும் இந்நாட்டில் ஒரு பத்திரிகை பத்தாவது வருஷ பூர்த்தி விழாக் கொண்டாடுவது மதிக்கத்தக்க ஒரு சம்பவமேயாகும். தாருல் இஸ்லாத்தின் வெற்றிக்கு அதன் ஆசிரியர் ஜனாப். பா. தாவூத்ஷா அவர்களின் நன்முயற்சியே காரணமாகும். ஜனாப் தாவூத்ஷா கலாசாலைப் பட்டம்பெற்ற பிறகு ஸப் மாஜிஸ் டிரேற்றாக இருந்து, இஸ்லாம் மதச் சீர்திருத்தத்துக்காக, தமது ஸர்க்கார் உத்தியோகத்தையும் துறந்து, இந்த தாருல் இஸ்லாத்தைத் தொடங்கினார். ஏனைய சர்க்கார் தாசர்களைப்போல் காக்காய் பிடிக்கும் சம்பிரதாயத்தை அவரும் கைக்கொண்டு ஒழுகியிருந்தால் இப்பொழுது ஒரு பக்கா டிப்டி கலக்டராகவோ, அல்லது அதனிலும் பெரிய உத்தியோகஸ்தராகவோ இருந்திருக்கக் கூடும். ஆனால் தெய்வத் திருத்



ஜனாப்—பா. தாவூத்ஷா, B. A.

தொண்டாற்ற வேட்கை கொண்ட தாவூத்ஷாவின் மனம் சர்க்காருக்கு அடிமைப்பட்டுக் கிடக்க எவ்வாறு ஒருப்படும்? இஸ்லாமிய உலகத்துக்காக ஜனாப் தாவூத்ஷா செய்திருக்கும் நன்மைகள் அளவிறந்தனவாகும். இஸ்லாம் மத விளக்கச் சார்பாக பல அழகிய நூல்கள் அவர் வெளியிட்டிருக்கிறார். குர்ஆன் ஷரீபையும் தமிழில் மொழி பெயர்த்து வருகிறார். மதாசார சமூகாசார சீர்திருத்த விஷயங்களில் அவரை முஸ்லீம் ராமசாமி நாயக்க ரென்று சொல்லலாம். அவரது நோக்கங்களாவன—“இக்கால முஸ்லீம்களிடமுள்ள மௌட்டியம் ஒழிய வேண்டும். அநாகரீகம் ஒழிய வேண்டும். அனாசாரம் ஒழியவேண்டும். அறியாமை ஒழியவேண்டும். அழகிய இனிய தீனுல் இஸ்லாத்தைக் கெடுத்து வைத்திருக்கும் பௌராணிகம் ஒழிய வேண்டும். புரோகிதம் ஒழிய வேண்டும். கொடியேற்றம் ஒழிய வேண்டும். ஆலிம், பீர், மஷாயிக் வழிபாடு அடியோடு ஒழிய வேண்டும். ஒளலியா பூஜை ஒழிய வேண்டும். அல்லாசாமி என்னும் பஞ்சா சாமியும் இவ்

வுலகி லில்லாமல் அடியோடு தொலைய வேண்டும்."

இத்தகைய உயரிய கொள்கைகளை யுடைய பரிசுத் தாத்மாக்களுக்கு மூட உலகத்தில் மதிப்புண்டா? ஸ்ரீ. ராமசாமி நாயக்கர் ஹிந்துக்களால் தூற்றப் படுவது போலவே ஜனாப் தாவூத்ஷாவும் தமது பரிசுத்த மதக் கொள்கை களுக்காக தற்கால போலி முஸ்லீம்களால் தூற்றப்பட்டு வருகிறார். எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தும் தாருல் இஸ்லாம் பத்து வருஷங்களையும் தாண்டி ஒரு தினசரிப் பத்திரிகை யாகக்கூடிய உறுதி நிலையில் வந்திருப்பது சிலாக்கியமானதே. பத்திரிகைத் தொழிலிலும் ஜனாப் தாவூத்ஷா வெகு நிபுணர். அவரது தமிழ் நடை மிகவும் மனோகர மானது. ஆழ்ந்த கருத்தும், அழகிய இசையும், வீர மணமும் அவரது நடைக்கு இயல்பாக வுள்ள குணங்கள். சென்னையில் கலாசாலைப் பட்டம்பெற்ற தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர், சுதேசமித்திரன் ஆசிரியர் நீங்கலாக, ஜனாப் தாவூத்ஷா ஒருவரே என்பதும் ஈண்டுகுறிப் பிடத் தக்கது.

தேசியம், சுயராஜ்யம், பூரண சுயேச்சை ஆதிய பகட்டொலிகள் ஒருபக்கம் முழங்கிக் கொண்டிருந்தாலும், செல்வாக்குடைய சமூகத்தார் செல்வாக்கற்ற சமூகத்தாரை விழுங்கி ஏப்பமிட சூழ்ச்சிசெய்து கொண்டிருப்பது தென்னாட்டிலே அங்காடி ரகசியமாயிருக்கிறதினால், முஸ்லீம்களுக்கென ஒரு தனித் தமிழ்த் தினசரிப் பத்திரிகை வெளிவர வேண்டியது மிக முக்கியமாகும். ஆகையால் தாருல் இஸ்லாம் வெகு விரைவில் ஒரு தமிழ் தினசரி யாகவேண்டுமென்று விரும்பு கிறோம். ஜனாப் தாவூத்ஷாவின் முயற்சிகள் வெற்றி பெற இறைவன் அருள் புரிவானாக!

---



பாஞ்சாலக் கவி ஸர். முகம்மது ஹிக்பால்.



செங்குந்த மகா நாட்டுக் காரியதரிசி
ஸ்ரீ. நடராஜ முதலியார்.




சுயராஜ்ய அமைப்பு:—இந்திய சுயாராஜ்ய அமைப்புத் திட்டமாய் கருதப்படும் "நேரு அறிக்கை" இந்திய ராஜீயஉலகில் மிகவும் விசேஷமாகக் கருதப் படவேண்டிய ஒரு ராஜீய நூலாகும். தற்காலம் மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ தலைமுறைகளுக்கும் இந்நூல் ஒரு ஆதாரமாய் விளங்கக் கூடியது. எனவே தமிழர்களுக்கென அதை ஒரு புஸ்தகரூபமாக வெளியிட்ட கூடன் கம்பெனியாரைப் போற்றுகிறோம். விலை அணா 12 தபாற்செலவு வேறு. கிடைக்குமிடம். கூடன் கம்பெனி, சௌகார்பேட்டை P.O; சென்னை.

முன்னேற்றம்:—இது சிங்கப்பூரிலிருந்து, ஸ்ரீமான் வே. சி. நாராயணசாமி அவர்களைக் கௌரவ ஆசிரியராகக் கொண்டு வியாழக்கிழமை தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப் பத்திரிகை. வறுமை காரணமாக கடல்கடந்து மலாய் நாடு சென்றுவாழும் தமிழர்கள் முன்னேற்றத்துக் கெனத் தோன்றியிருக்கும் இப்பத்திரிகையை நாம் ஆதரவோடு வரவேற்கிறோம். நமது பார்வைக்கு வந்திருக்கும் முதல் பத்திரிகையில் தமிழர் முன்னேற்றத்துக்குத் தேவையான பல அரிய விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன. வருஷ சந்தா இந்தியா, பர்மா சிலோனுக்கு ரூ. 5. கிடைக்குமிடம் 'முன்னேற்றம் ஆபீஸ்" 152 சிலிசி ரோடு, சிங்கப்பூர்.

இந்தியன்:—இது சேலம் ஜில்லா அதமன் கோட்டையிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ் தேசிய மாதப்பத்திரிகை. அதன் ஆசிரியர் திரு. வெங்கடராயர். சில தமிழ்ப் பத்திரிகாசிரியர்களைப் போலல்லாது பத்திரிகைத் தொழிலில் அனுபவ முடையவராகக் காணப்படுகிறார். பத்திரிகையின் நோக்கத்துககேற்ற விஷயங்கள் அழகுபெறத் தேர்ந்தெடுக்கப் பட்டு அதில் பிரசுரமாயிருக்கின்றன. அழகிய தமிழ் நடை அங்கங்கே காணப்படும் ரகர றகரத் தொல்லைகளை நீக்க ஆசிரியர் முயற்சி செய்வாராக. வருஷசந்தா ரூ. 2. கிடைக்குமிடம்; நிருவாக ஆசிரியர் "இந்தியன்" அதமன்கோட்டை P. O; சேலம் ஜில்லா.

தாருல் இஸ்லாம் பத்தாம் ஆண்டுப் பூர்த்தி விழா மலர்:—இது தாருல் இஸ்லாத்தின் பூரண சரித்திரம் அடங்கிய ஒரு அழகிய வெளியீடு. கண்ணைக்கவரும் சித்திரப்படங்கள் பல இதில் வெளிவந்திருக்கின்றன. விலை அணா 5. கிடைக்குமிடம் "தாருல் இஸ்லாம்" ஆபீஸ், தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

இந்து நேசன் 1929-வருஷ அனுபந்தம்:—முன்வருஷ அநுபந்தங்களைப் போலவே இவ் வருஷ இந்துநேசன் அநுபந்தமும் மிக அழகாக வெளிவந்திருக் கின்றது. தமிழ் மக்கள் அவ்சியம் படித்தறிய வேண்டிய பல அரிய ஆங்கில, தமிழ் கட்டுரைகளும் சித்திரப்படங்களுடன் அதில் விளங்கு கின்றன. விலை ரூ. 1. கிடைக்குமிடம் இந்து நேசன் ஆபீஸ், 65, அரமனைக்காரத்தெரு, சென்னை.

குமரன் காங்கிரஸ் மலர்:—இது கல்கத்தாவில் காங்கிரஸ் வாரத்தில் நடைபெற்ற மகா நாட்டு நடவடிக்கைகள் அடங்கிய ஒரு அழகிய வெளியீடு. காங்கிரஸ் தலைவர், உபசரணைக் கமிட்டித் தலைவர், ஆசார சீர்திருத்த மகாநாட்டுத் தலைவர், அகில இந்திய மாதர் மகாநாட்டுத் தலைவர் முதலியவர்களின் பிரசங்கங்கள் அவரவர்கள் படத்துடன் இதில் பிரசுரிக்கப் பட்டிருக் கின்றன. கண்ணைக் கவர்ந்து, கருத்தைக் கனிவிக்கும் இவ்வெளியீட்டின் விலை அணா 4. கிடைக்குமிடம் "குமரன் காரியாலயம்," காரைக்குடி.

# இந்தியப் பத்திரிகைகள்

## இரக்ஷண்ய சேனை.

கிறிஸ்தவ சமயிகள் என்போர் உலக மெங்கும் செய்து வரும் பல வகை வேலைகளைப் பற்றி எத்தகைய கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருப்பினும், அவர்களது அரிய ஊக்கத்தைப் போற்றாதவர்கள் உலகத்தில் இரார். அலைகடல் கடந்தும், மலை, வனம் கடந்தும் கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் நாடுகளை விட்டு அயல் நாடுகளில் சென்று செய்து வரும் அரிய சமய வேலைகள் உண்மையிலே வியப்பானவை. இந்தப் பாதிரிகளின் பேரூக்கமே கிறிஸ்தவ சமயம் உலக மெங்கும் பரவிவளர்ந்து வருவதற்குக் காரணமாகும். கிறிஸ்து சமயம் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகவில்லை. ஆயினும், பூமண்டலத்தில் பரிதியொளி பரவும் எந்த நாட்டிலும், எந்தக்காட்டிலும், எந்தப் பகுதியிலும் கிறிஸ்தவப்பாதிரி இல்லாத இடம் இல்லை. கிறிஸ்து நாதரின் சிலுவைக் கொடி செல்லாத இடம் இல்லை.

இரக்ஷண்ய சேனை என்ற சால்வேஷன் ஆர்மி யென்பது பழைமையான கிறிஸ்தவ ஸ்தாபனங்களில் ஒன்றாகும். இதனை ஜெனரல் வில்லியம் பூத் என்ற பாதிரியார் 1865-ம் ஆண்டில் லண்டன் நகரத்திலே தோற்றுவித்தார். இது ஒரு சேனையைப் போல ஒழுங்காக நடைபெறுவதுடன், இது ஒரு சேனையைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் அவர்கள் எந்த நாட்டிலே வேலை செய்கிறார்களோ அந்தந்த நாட்டுக்குரிய உடைகளை அணிந்து வேலை செய்கிறார்கள். இவர்கள் சமயப் பிரசாரத்துடன், கஷ்ட நிவாரண வேலை, கைத் தொழில், குற்றஞ் செய்யும் ஜாதியார்களை நல் வழிப் படுத்தல் முதலிய வேலைகளும் செய்து வருகிறார்கள்.

உலகத்திலுள்ள பல நாடுகளிலும் இவர்கள் வேலை செய்கிறார்கள். எழுபத் தொன்பது நாடுகளில் இவர்கள் வேலை செய்கிறார்கள். சுமார் 14000 கிளைச் சபைகளையும், 1500 பொது ஸ்தாபனங்களையும், 33 ஹாஸ்டல்களையும் இவர்கள் நடத்தி வருகிறார்கள். இந்தச் சேனையில் சுமார் 22,000 பெரிய உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். 92,000 சிறிய உத்தியோகஸ்தர்கள். இவர்களைத் தவிர, சுமார் 7000 பேரைச் சம்பளத்திற்கு வைத்திருக்கிறார்கள். இந்தச் சேனையின் தொழிற்சாலைகளில் சுமார் 6000 பேர்கள் வேலை செய்கிறார்கள். 600 பள்ளிக்கூடங்களை இவர்கள் நடத்துகிறார்கள். இவர்கள் 40 பாஷைகளில் பிரசாரஞ் செய்வதோடு 24 பாஷைகளில் 63 பத்திரிகைகளும் நடத்தி வருகிறார்கள். இவர்களின் சர்வ தேச மகா நாடு 1904-லும் 1914-லுமாக இருமுறை நடந்திருக்கிறது!

இந்த அற்புதமான இரட்சண்ய சேனையைத் தோற்றுவித்த பெரியாரான ஜெனரல் வில்லியம் பூத் தமது தலைமைப் பதவியைத் தமது மூத்த புதல்வரான ஜெனரல் ப்ராம்வெல் பூத் என்பவருக்கு அளித்து விட்டு 1912-ல் காலஞ் சென்றார். அவரே அதற்குரிய சட்ட திட்டங்களையும் ஏற்படுத்தி வைத்திருக்கிறார். தந்தையும் மைந்தனும் செய்த பெரு முயற்சியின் பயனாக இந்த இரக்ஷண்ய சேனை விந்தையான பெருமை யடைந்திருக்கிறது. இதற்குக் கோடிக் கணக்கான மதிப்புள்ள நிலபுலங்களும் வேறு ஆஸ்திகளும் இருக்கின்றன.

ஜெனரல் ப்ராம் வெல் பூத்துக்கு இப்பொழுது வயது 72. அவர் சில காலத்திற்கு முன் சுகவீன மடைந்திருந்தார். அதனையொட்டி அவர் தமது கடமையைச் சீராகச் செய்ய முடியாதென்றும் அவரை நீக்கி விட்டு அவருக்குப் பதில் வேறு ஒருவரை நியமித்து விட வேண்டுமென்றும், ரக்ஷண்ய சேனைப் பஞ்சாயத்தார் முடிவு செய்து புதிய தலைவர் ஒருவரை நியமித்தும் விட்டார்கள். ஆனால் ஜெனரல் பூத் தமது உடல் நிலை சீரா யிருக்கிறதென்றும், தாம் தமது கடமையைச் செய்ய முடியுமென்றும் தமது பதவியை விட முடியாதென்றும் பிடிவாதஞ் செய்கிறார்.

இதனை யொட்டி வழக்குகளும் குழப்பங்களும் ஏற்படும் போல் தோன்றுகிறது. ஆயினும் இறைவன் அருளால் இது ஒரு சமரசமான முடிவுக்கு வந்து இரட்சண்ய சேனையின் வேலைகள் எப்பொழுதும் போல நடைபெறு மென்று நம்புகிறோம்.

நாம் இவ்வளவு தூரம் இரக்ஷண்ய சேனையின் வேலை விவரங்களை விவரித்ததன் கருத்தை நமது நேயர்கள் அறிய வேண்டுகிறோம். நமது நாடு பழைமையான நாடு என்று பேசுகிறோம். நமது சமயம் ஆதி யந்த மற்றது, சனாதன மானது, உலகம் தோன்றிய நாளில் தோன்றியது என்று பெருமையாகச் சொல்கிறோம். சமய சமாஜங்களும், சங்கங்களும் சபைகளும் திருக் கூட்டங்களும் ஆண்டு தோறும் ஆடம்பரமாக ஆண்டு விழாக் கொண்டாடுவதைத் தவிர, வேறு சமயப் பிரசாரம் ஏதேனும் நாட்டிலே நடைபெறு கிறதா? என்று சிந்திக்க வேண்டுகிறோம். மகா சன்னிதானங்க ளெல்லாம் உறக்கத்திலே இருக்கின்றன. நமது மகா சந்நிதானங்களுக்கும் மடாதிபதி களுக்கும் சமயாபி மானிகளுக்கும் மேற் கண்ட இரக்ஷண்ய சேனையின் விவரங்களைச் சமர்ப்பிக்கிறோம்.

—லோகோபகாரி.

## விவாதமா அல்லது காரியமா?

உபயோகமற்ற வாக்கு வாதங்களில் காலத்தைக் கடத்திக்கொண்டு போகாமல் உபயோகமான காரியஞ் செய்யக் காங்கிரஸ் மகாசபை வழிகாட்டி யிருக்கையில், மறுபடியும் வாக்கு வாதத்தைக் கிளப்பச் சிலர் பிரயத்தனப் படுகிறார்கள். காங்கிரஸ் முடிவாக அங்கீகரித்த ராஜீத் தீர்மானம் பூரா சுவாதீனக் கட்சியின் வெற்றியைக் குறிப்பிடுவதாக அவர்கள் சொல்லி நேரு கமிட்டி யாதாஸ்திற்கு அந்தத் தீர்மானப்படி ஏற்பட்டு விட்ட ஆதரவை பங்கப்படுத்தப் பார்க்கிறார்கள். இந்த விவாதமானது கைமேல் ஒரு பலனையும் கொடுக்கக் கூடியதல்ல வாகையால், பலனை உத்தேசித்து இனிச் செய்யவேண்டிய வேலையின் முக்கியத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. காங்கிரஸில் நிறைவேறின தீர்மானத்தை நன்றாக அறிந்து கொண்டால் தான் இனிச் செய்ய வேண்டியிருக்கிற வேலையின் முக்கியத்தை உணரக் கூடும். காங்கிரஸில் ராஜீத் தீர்மானத்திற்குச் சாதகமாக 1350 ஓட்டுகளும் விரோதமாக 973 ஓட்டுகளும் கொடுபட்ட விஷயம் நேயர்களுக்குத் தெரியும். ஸ்ரீமான் சுபாஷ் சந்திர போஸின் திருத்தப் பிரேரணைக்குச் சாதகமாக ஓட்டுச்சேர்க்க மும்முரமாக வேலை செய்யப்பட்டது. மகாத்மாஜீயின் பிரேரணைக்குச் சாதகமாக ஓட்டுச் சேர்க்க எவரும் வேலை செய்யவில்லை. ஆகையால் காங்கிரஸ் மகா சபைக்குப் போயிருந்த பிரதிநிதிகளில் எத்தனை பெயர்களைச் சுபாஷ் பாபுவின் திருத்தப் பிரேரணைக்குச் சாதகமாகத் திரட்டக்கூடுமோ அத்தனைப் பெயர்களும் 973 பிரதிநிதிகள்தான் என்று ஏற்படுகிறது. சுபாஷ் பாபு கட்சியினர் ஓட்டுத் திரட்ட எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டார்களோ, அவ்வளவு பிரயாசை மகாத்மாஜீயின் பிரேரணையின் பொருட்டும் எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பின், ஓட்டு சங்கியைகளின் வித்தியாசம் இன்னும் பெரிதாக இருந்திருக்கு மென்றே நினைக்கிறோம். இது ஒரு புறமிருக்க, ஓட்டுக் கொடுக்காதவர்களின் தொகையே விசேஷப் பொருளை விளக்குகிறது. காங்கிரஸ் மகா சபைக்கூட்டத்திற்கு வந்ததாகப் பதிவு செய்து கொண்டவர்கள் 100-க்கு 40 பெயர்கள் வீதமே ஓட்டு கொடுத்தனர். ஆகையால் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் இந்த விஷயமாக ஓட்டுக்கொடுக்க வேண்டியது அவசியமல்லவென்று நினைத்தார்கள் என்றே ஏற்படுகிறது. குடியேற்ற நாட்டு அந்தஸ்து போதுமா? அல்லது பூரா சுவாதீனமே வேண்டுமா என்ற விவாதம் முக்கியமான பிரச்னை என்று ஏராளமான பிரதிநிதிகள் நினைத்திருப்பின், ஓட்டு கொடாமல் அவர்கள் சும்மா விருந்திருக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறோம். ஆகையால் இந்த விவாதம் வீண் விவாதமென்றும், உடனே செய்யவேண்டிய வேலைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை யென்றும் பெரும்பாலான பிரதிநிதிகள் நினைத்தார்கள் என்றே யூகிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் பிரதிநிதிகள் குடியேற்ற நாட்டு அந்தஸ்தையாவது பூரா சுவாதீனத்தையாவது ஆதரித்து ஓட்டுக் கொடுத்தவர்களன்று. ஆனால் பூரா சுவாதீனத்தையோ குடியேற்ற நாட்டந்தஸ்தையோ பெறுவதற்கு அவசியமான வேலைகளைச் செய்ய வேண்டுமென்பதில் கருத்துக் கொண்டவர்கள். ஆகையால் எதில் கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அதில் செலு

(164-ம் பக்கம் பார்க்க)




### பத்தாயிரம் வருஷத்திய க்ஷவரக் கத்தி.

பிரஞ்சு கல்வெட்டு ஆராய்ச்சிக்காரராகிய டார்வென்ட் என்பவர் மொடியரெஸ் லெஸ் ஆமியன்ஸ் என்ற இடத்திலே பத்தாயிரம் வருஷத்துக்கு முன்னர் உபயோகிக்கப்பட்டதான ஓர் க்ஷவரக் கத்தியைக் கண்டெடுத்திருக்கிறார். இத்துடன் கிறிஸ்து பிறப்பதற்கு 8000 வருடங்களுக்கு முன்பு உபயோகிக்கப்பட்ட பல இரும்பு, எஃகுக் கருவிகளும் கிடைத்திருக் கின்றன. மேற்படி க்ஷவரக் கத்திக்குக் கைப் பிடி ஒன்றுமிருக்கிறது.

* * *

### அலுமினிய சட்டை.

இத்தாலி தேசப்பெண்கள் அலுமினியத்தால் சட்டைகள் ரவிக்கை பாதரட்சை முதலியவற்றைச் செய்து போட்டுக் கொண்டிருப்பதாக ஒரு மேனாட்டு பத்திரிகை கூறுகின்றது.

ஸ்காட்லாண்டு தேசத்தில் நடக்கும் மணங்களில் 100-க்கு 88·12 ஒழுங்கானவையாம். 11·88 ஒழுங்கற்றவையாம்.

* * *

அங்கு விவாகம் செய்து கொள்ளுபவர்களின் சராசரி வயது 27·9 ஆம். 1927-ம் ஆண்டில் நடந்த கலியாணங்களில் 14-வயதுதான் மிகவும் குறைந்ததாம். இவ்வயதில் கலியாணமானவள் ஒருத்திதானாம்.

* * *

மேற்படி யாண்டில் வயதான இரண்டு கிழங்களுக்கு மணம் நடந்ததாம். இவர்கள் வயது 80-ம் 84-ம் ஆகும். இவ்விருவரும் விதவைகளையே மணம் புரிந்தனராம்.

* * *

75 வயதிலிருந்து 80 வரையிலுள்ள பதினாறு பேர்களுக்கு விவாகம் நடந்ததில் இருவர் பிரம்மசாரிகளா யிருந்தவர்களாம். ஸ்திரீகளில் 75; 77 வயதான இருவர் விவாகம் செய்து கொண்டனராம்.

* * *

ஸ்காட்லண்டு தேசத்தில் க்ஷய ரோகத்தினால் இறப்பவர் வருடத்துக்கு 100 பேர்களாம்.

* * *

தமது மகனுக்கு 21 வயதாகி விட்டதைக் கொண்டாட பர்க்கென் ஹெட் பிரபு லண்டனில் சமீபத்தில் ஓர் விருந்து நடத்திய காலையில், தமது 21-வது வயது விழாவின் போது தமக்கு ஒரே ஒரு சன்மானம் தான் கிடைத்ததெனவும் மிகவும் கஷ்டப்பட்டுத் தமது தாயார் தமக்கு மூன்று பவுன் மணியார்டர் செய்ததாகவும் கூறினார்.

* * *

“இப்பரந்த உலகின் கண்ணே அவனது பிற்கால வாழ்வுக் கானவற்றை அவனே பார்த்துக் கொள்ள வேண்டும்; இது அவனது திறமையையே பொறுத்துளது” என்று பர்க்கென் ஹெட் தமது புதல்வரைக் குறித்துக் கூறினார்.

* * *

தங்களுடைய இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக்கொண்டு கால் கட்டை விரல்களை மாத்திரம் தரையில் ஊன்றிப் பின்னங் காலைத் தூக்கி, உடலும் தலையும் நிமிர்ந்த வண்ணமாய் நடப்பது தான் ஸ்திரீகளுக்குச் சிறந்த தேகாப்பியாச முறை என்கிறார் மேனாட்டு பிரபல வைத்தியர் ஒருவர்.

* * *

“இன்ஸோம்னியா” என்னும் சரியான தூக்க மின்மையால் வருந்துபவர்கள் தங்களது முகங்களைக் கீழ்ப்புறமாக வைத்துப் படுத்துக் கொண்டால் சரியான நித்திரை வந்து விடும்” என லண்டன் “டெயிலி கிரானிகிள்” பத்திரிகையில் ஓர் நிருபர் எழுதுகிறார்.

* * *

ரோட் தீவைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ தன் கணவனுடன் நாடகத்துக்குச் சென்றிருந்த காலத்து அவர் குறட்டை விட்டு உறங்கியதால்

அங்குக் கூடியிருந்தோர் நகைத்தனர். இதன் காரணமாக அம்மாது வழக்குத் தொடர்ந்ததில் கணவன் மனைவியைக் கொடுமைக் காளாக்கினன் என்ற குற்றஞ் சாட்டப்பட்டு விவாகரத்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

* * *

ஜெர்மானியர் ஒருவர் கண்டு பிடித்திருக்கும் காகிதமொன்று கண்ணாடியையும் உருகச் செய்து விடக்கூடிய தீயினாலும் எரிக்கப்பட முடியாதாம்.

* * *

பதினேழு வயதுள்ள ஓர் ஆங்கில ஸ்திரீக்குப் பிறந்த சிசு ஒரு பவுண்டு 12 ஔன்ஸ் கனமுள்ளதாக இருந்ததாம். அந்த மாது பிரசவித்திருந்த காலத்தில் அவளுக்கு பவுன்டன் பேனாவை நிரப்பும் குழாய் மூலமாக ஆகாரம் உட் செலுத்தப்பட்டதாம்.

* * *

ஒரு சட்டையைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட அமெரிக்க மாது அவள் குற்றத்தை ரூபிக்கக் கூடிய சாக்ஷியில்லாததினால் விடுதலை செய்யப்பட்டாள். அவள் அதைப் பொத்தான்களுட்பட விழுங்கிவிட்டாளாம்.

* * *

ஸ்பெயின் அரசரின் அரண்மனையே ஐரோப்பாவில் மிகப் பெரிய அரண்மனையாகும். அதிலுள்ள எல்லா அறைகளையும் பார்த்து வர நான்கு நாள் பிடிக்குமென்றும், நடக்கவேண்டிய தூரம் மொத்தம் 120 மைலென்றும் கூறப்படுகின்றது.

* * *

---

(162-ம் பக்கத் தொடர்ச்சி)

னுத்தப்படாமல் செய்யக்கூடிய வீண் விவாதங்களைக் கிளப்புவதைப்பற்றி நாம் ஆட்சேபிக்கிறோம். இனிச்செய்ய வேண்டிய வேலை என்ன வென்பதைக் காங்கிரஸ் நிர்ணயித்திருக்கிறது. அந்த வேலையைச் சிரத்தையுடன் செய்யவேண்டும். அதை நாம் எவ்வளவு செய்து முடிக்கிறோமோ அவ்வளவு பூரா சுவாதீனத்திற்கோ அல்லது குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கோ தகுதி பெறுவோம். ஆகையால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியானது விவாதங்களைக்கட்டி ஒரு மூலையில் வைத்து விட்டு வேலை செய்ய இறங்குமென்று நம்புகிறோம்.

—சுதேச மித்திரன்.

## ஒரு கடிதம்:

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, தலைமை உபாத்தியாயர் எழுதுகிறார்:—

அன்பு நிறைந்த பெரியீர்!

வணக்கம் பல. நான் சென்னையில் தங்களை இரு முறை சந்தித்தபோது, நமது பள்ளியை வந்து பார்வையிட மன மிசைந்தீர்கள். மற்றுமோர் முறை போந்த போது தாங்கள் மதுரைக்குச் சென்றதாக நவின்றார்கள்.

உலக அனுபவமும், பல கலை ஞானமும் நிறைந்த தங்களது அரிய “இராமாமிர்தம் அய்யர்” M.A. என்னும் நாடகத்தைக் கண்ணுற்றோம். அதை நமது இளஞ்சிறுவர்கள் நடிக்கப் போகின்றனர். அதுபோது தங்களையே அவைத் தலைமை வகிக்கப் பெரிதும் வேண்டுகிறோம். நிகழ்ச்சி தினத்தை வெகு சீக்கிரத்தில் தங்களுக்குத் தெரிவிக்கின்றோம். தங்களது அன்பார்ந்த பதிலை எதிர் பார்க்கின்றோம்.

தங்கட்கு எல்லா நலங்களையும் அருள இறைவனை என்றென்றும் துதித்து நிற்கும்,

தங்கள்,

உண்மையுள்ள

தலைமை ஆசிரியர்,

(ஐயாப்பம்).

[“இராமாமிர்தம், M.A.” அல்லது பயனற்ற படிப்பு என்ற சிறிய பொழுது போக்கு நாடகம் முதல் முதலில், சென்னையில் தலைவர் டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் நடிக்கப் பட்டது. அப்பால், தஞ்சை, கண்டி முதலிய இடங்களில் பள்ளிச் சிறுவர்களால் நடிக்கப் பட்டதாகத் தெரிந்து மிகவும் சந்தோஷப்படுகிறோம். இன்னும் அநேக இடங்களி லிருந்து நடிக்க அனுமதி கேட்கிறார்கள். தொழில் தாகம் தமிழ் நாட்டில் செழித்தோங்குக. அநேகர், சிறு புத்தக ரூபமாய் வெளியிடும்படி தூண்டுகிறார்கள். அவ்வண்ணமே அச்சிட ஏற்பாடு செய்திருக்கிறோம். வேண்டியவர்கள் முன்கூட்டியே எழுதிக் கொள்ளவும். தபால் செலவுக்கு மட்டும் ஓரணா தபால் ஸ்டாம்பு அனுப்புவார்களாக. (ப-ர்)]

## பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும் எழுதவும் ஆரம்பித்து விடலாம். இந்த பாஷையில் வியாபார ரகசியங்களை குறித்துக் கொண்டால் இப்பாஷை தெரிந்தவர்கள் தவிர வேறு எவரும் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் தங்கள் கணவர்களுடன் குடும்ப ரகசியந்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக் கேட்டு பிறரிடம் சொல்லி கோள் மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ் பரிபாஷை. சொல்ப காபிகளே கையிருப்பிலிருக்கிறது. முந்துங்கள்.

விலை இனா. 8.

அமிர்த குணபோதினி ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## அமிர்த குணபோதினி

இதுபோன்ற நவீனமாதாந்தர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளி வந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்கு புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்யாசமின்றி சகல மதஸ்தர்களையும் களிக்கச் செய்யும் வியாஸங்களையும் யாவரும் முன்னேற்றமடையக்கூடிய வழியையும் போதிப்பதை பிரதி மாத சஞ்சிகையிலும் காணலாம். இதில் மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்துப் பார்த்தால் பிறர் சிபாரிசு இல்லாமல் தாங்களே சந்தாவில் சேர்வீர்களென்பது நிச்சயம் பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளி வரும். வருஷ சந்தா ரூ 1. வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி காபி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,

அமிர்த குணபோதினி ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

வெளி வந்துவிட்டது ! 10-ம் பதிப்பு வெளி வந்து விட்டது !

## - ஆங்கில ஆசான் -

(எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.
போலிய புத்தகங்களால் ஏமாற வேண்டாம்)

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளக் கூடிய விதமாய் அப்பியாசபாடங்களாக வகுத்து முன் பதிப்புகளை விட அதிக பக்கங்கள் சேர்த்து பெரிய எழுத்துக்களில் அச்சிட்டிருக்கிறது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான் புத்தகங்களைவிட வேறு எந்த புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாதென்பது பலரும் அறிந்த விஷயம். நமது முன் பதிப்பு புத்தகங்களை வைத்திருப்பவர்கள் கூட பத்தாம் பதிப்பை பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்கவேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணு முதல் 300 ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் அச்சிட்டிருக்கிறது. 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு செய்தது.



விலை ரூபா 2 0 0

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

# ரெடிமேட் ஷர்ட்டுகள்.



உசத்தியான, டுயில், டோரியா காக்கி, பாப்ளின் முதலிய துணிகளில் தைத்தவை. உறுதியான தையல். மனோகரமான கட்டிங் கழுத்தளவுடன் ஆர்டர் செய்யுங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| டுயில் ஷர்ட்டு | ரூ: | 2 | 0 | 0 |
| காக்கி | ,, | 2 | 4 | 0 |
| அமெரிக்கன் டோரியா | ,, | 2 | 4 | 0 |
| பாப்ளின் | ,, | 3 | 8 | 0 |
| ஸில்க் ஷர்ட்டு | ,, | 6 | 8 | 0 |

**கே. எஸ். முத்தையா கம்பெனி** : தபால் பெட்டி 99,
மதராஸ்.



நீங்கள் புதிய வாழ்வு, யௌவன வாழ்வு, ஆண்மை வாழ்வு, இன்ப வாழ்வு, நோயற்ற வாழ்வு அடைய விரும்புகிறீர்களா ?

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பதை மறுக்க முடியுமா ?

உண்மையில் நீங்கள் நோயற்ற வாழ்வு, யௌவன வாழ்வு விரும்பினால் இன்றே,

# “வீ ர சி ங் க லே ஹி ய ம்”

அனுப்பும் படி எழுதுங்கள். எவ்விதமான நோய்களும் சூரியனைக்கண்ட பனியைப் போல பறந்துவிடும்.

வீரசிங்க லேஹியம் இரத்தத்திற்குச் சுத்தியும் விருத்தியும் உண்டாக்கி நோய்களைத்தொலைத்து உடம்பை வஜ்ரம் செய்கிறது. எல்லா நோய்களையும் அகற்றவல்லது. தலைநோய், மந்தம், மயக்கம், முதலியவைகளைத் தடுக்கிறது. தாதுவிற்கு அதிசய அபார ஆச்சரியப்படும்படியான வீரபலத்தைக் கொடுக்கிறது. மேக சம்பந்தமான சகல நோய்களையும் உடனே தொலைக்கிறது.

40 நாள் சாப்பிடக்கூடிய டப்பி **1-க்கு ரூ. 4—8.**

பாக்கிங் தபால் செலவு இனாம்.

☞ சிங்கப்பூர், பினங்கு, மலாய் ஸ்டேட் நண்பர்கள் மூன்று டப்பிகளுக்கு ஆர்டர் செய்தால், தபால் செலவு, பாக்கிங் செலவு இனாம்.

**வைத்ய ஆஸ்ரமம், அகஸ்திய குண்டம், காசி.**

# சென்னையில்

# சிறந்த சிற்றுண்டிச்சாலை!

கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு
சுத்தமான பசுவின் நெய்யில் அன்றாடம்
செய்யப்படும் அநேக வித பக்ஷணங்கள்
ஹல்வா, பாதம் ஹல்வா, மைசூர் பாகு
குலோப் ஜான் இன்னும் பல விதமான
பம்பாய்—பெங்காளி மிட்டாய் தினுசுகள்
ஒவ்வொருவர் சுவைக்கும் விருப்பத்துக்
கும் ஏற்ற முறையில் கிடைக்கும். நா
விற்கு ருசியும், மனதிற்கு இனிமையும்
அளிக்கக் கூடிய பக்ஷணங்களில் முதன்
மை பெற்றவை. - - -

இன்றே வந்து பாருங்கள்.

---

வெளியூர் ஆர்டர்களுக்கு வி.பி. யில் அனுப்பப்படும்.

---

**Neo Ramakrishna Lunch Home.,**

**285, China Bazaar Road,**

**Next to Pachaiyappa's, MADRAS.**

## புத்துயிர்

நரம்புத்தளர்ச்சி தேக மெலிவு பலமின்மை வீரியக் குறைவு இவைகளால் நீங்கள் தளர்வடைந்திருந்தால் இன்றே ஒரு புட்டி

# ஜீவாமிருதம் (ரிஜிஸ்டர்)

வாங்கி உபயோகியுங்கள் தேகத்தில் உள்ள எவ்வித வியாதிகளையும் அறவே நீக்கி, போன பலத்தை மீட்டி புதிய ஊக்கம் காட்டி உங்களை உண்மையில் ஒரு புதிய மனிதனாக்கி விடும். இந்த அரிய ஔஷதம் கண்டு பிடிக்கப்பட்டு 30 வருஷங்களாக நல்ல பெயருடன் உலகில் நிலவி வருவதே இதற்குப் பெரியதொரு அத்தாட்சி.

விலை ரூ. **3—4—0.**

**ஆயுர்வேதாஸ்ரமம்,**

151, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,

தபால் பெட்டி 287

சென்னை.

# மஹாலக்ஷ்மி கவசம்.

முற்றும் கற்றுணர்ந்த மஹான் ஒருவரால் வேதாகம சாஸ்திரமுறை பிறழாது செய்யப்பட்டது. உண்மையான பலனை அளிக்கத் தக்கது—வாழ்வில் கஷ்டம் நீங்கி, கவலை நீங்கி, துன்பம் நீங்கி, துயரம் நீங்கி சௌக்ய சம்பன்னராய் வஜ்ர தேகத்துடனும் வசீகரமுகத்துடனும் வற்றாத தேஜஸுடனும் வாழ இதைவிட அரிய சாதனம் வேறில்லையென்றே சொல்ல வேண்டும். ஒன்றுக்கு ஆர்டர் செய்து வாங்கியவர் மறுமுறை ஒரு டஜனுக்கு நண்பர்களுக்கு சிபார்சு செய்கிறார் என்றால் இதன் உண்மையைப்பற்றி இன்னும் எழுத வேண்டுமா?

பல்லாயிரக் கணக்கான கவசங்கள் இதுவரை விற்கப்பட்டு விட்டன. நீங்களும் ஒன்று இன்றே வாங்குங்கள்.

தங்கக் கவசம் ரூ. 7—0—0.

வெள்ளிக் கவசம் ரூ. 2—0—0.

## மஹாலக்ஷ்மி கம்பெனி,

தபால் பெட்டி, 280, :: மதராஸ்.

# A. S.

ஒரு சிட்டிகை எடுத்து காலணா மூக்குத்தூளுடன் கலந்தால் அதிக இன்பமான சுகந்த வாசனையைத் தரும். கண்டத்துக்கு மேற்பட்ட 96 வியாதிகளைக் கண்டிக்கும். இந்தத் தூள் எக்காலமும் கெடாது. எந்தக் கம்பெனிகளிலாவது வாங்குபவர்கள் எ. எஸ். மார்க்கைக் கவனித்து வாங்கவும்.

எ. எஸ். சுகந்த மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 4.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2-4. ஷை சேர் 1-க்கு ரூ. 3

எம். ஜே. பரிமள மூக்குத்தூள் புட்டி 1-க்கு அணா 3.

ஷை டஜன் 1-க்கு ரூ. 2 ஷை சேர் 1-க்கு ரூ. 1-8.

பொன் வெள்ளி மெடல்கள் பெற்ற

**எ. எஸ். முகம்மத் சம்சுத்தீன் சாய்பு,**

106, சவுக்கார் பேட்டை, தபால் பெட்டி நெ. 1201. மதராஸ்.

# இரும்பு - - - - பெட்டிகள்





விலையில் குறைவும், உழைப்பில் சிறப்புமுள்ள இரும்பு பெட்டிகளுக்கு, பிற இடங்களுக்குப் போகுமுன்—எங்களை வந்து பாருங்கள். நீங்கள் கொடுக்கும் விலைக்கு அதிகம் மதிப்பிடக் கூடிய பெட்டிகள், எங்களிடம் கிடைக்கும்.

**V. Doraisamy Mudaliar**
**58, Broadway, MADRAS.**

# அவ்வளவும் தித்திப்பே!

நமது சொந்த பிரசுரங்களில் பொறுக்கி யெடுத்த சிலவற்றை இதன் கீழ் குறிப்பிட்டுள்ளோம். ஒவ்வொரு புஸ்தகமும் ஒன்றை விட ஒன்று ஆச்சர்யமாகவும், மனதைக் கவரும் அபூர்வ விஷயங்க ளடங்கியதாயு மிருக்கின்றது—இவைகளில் நீங்கள் வாங்கும் ஒரே புஸ்தகம் மற்ற யாவற்றையும் வாங்கத் தூண்டு மென்பதில் ஐயமில்லை.

| | |
|---|---|
| இந்திய மாதா | ... 1—8 |
| இந்திய பிதா | ... 2—0 |
| துரதிர்ஷ்ட இந்தியா | ... 2—8 |
| பச்சை மோதிரத்தின் மர்மம் | ... 1—0 |
| காசி அல்லது புண்ணியபூமி | ... 1—4 |
| வர்த்தக யுக்தி | ... 0--12 |




ஒரே தடவையில் மேல் கண்ட எல்லா புஸ்தகங்களுக்கும் ஆர்டர் செய்பவர்களுக்கு எங்களின்

**சிறு கதை செட் இனாம்!!!**

---

## முத்தையா புக் டிபோ,

தபால் பெட்டி நெ. 99,

சென்னை.

# குழந்தைகளை நேசியுங்கள்.

அழுகிற குழந்தைகளை அடிக்க வேண்டாம். உங்கள் அருமைக் குழந்தைகளை, எப்பொழுதும் குதூகலப்படுத்த




நமது "விளையாட்டு சாமான்கள்" செட் ஒன்றை வாங்கிக் கொடுங்கள். குழந்தைகளின் மனதை ரமிக்கச் செய்யும், இந்தியர்களின் வீட்டில், சமையல் செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளவை. ஒவ்வொரு ஜோடிப்பிலும் 32 சாமான்கள் அடங்கி யிருக்கின்றன. அவை முற்றிலும் பித்தளையினால் செய்யப் பட்டு, மிகுத்த அழகோ டிருக்கும். இந்த விளையாட்டு சாமான்கள், இந்துக்களாலும் மகமதியர்களாலும், கிறிஸ்தவர்களாலும், ஆங்கிலேயர்களாலும் மதிக்கப்பெற்றவை.

நெ. 1 செட் 1-க்கு விலை ரூ. 4—8—0.

நெ. 2 செட் ,, ரூ. 3—4—0.

## கே. எஸ். முத்தையா கம்பெனி,

ஸில்க் ஹவுஸ் :: :: காசி.